உ

# திருக்குறள் நெறியில் இலக்கியச் சிந்தனைகள்



வெளியீடு:

நா. நல்லதம்பி

மட்டுவில்

2011

உ

# திருக்குறள் நெறியில் இலக்கியச் சிந்தனைகள்

வெளியீடு:

**நா. நல்லதம்பி**

(ஓய்வு பெற்ற அதிபர்)

மட்டுவில்

**2011**

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | திருக்குறள் நெறியில் இலக்கியச் சிந்தனைகள் |
| நூலின் அளவு | : | 1/10 (5x7.5) |
| பக்கம் | : | 170 |
| அச்சு எழுத்து அளவு | : | 11 புள்ளி |
| பதிப்பு | : | 2011ம் ஆண்டு, தை மாதம். |
| ஆசிரியர் | : | நா. நல்லதம்பி |
| பதிப்புரிமை | : | நூலாசிரியருக்கு |
| அச்சிட்டோர் | : | அனுஷ் பிரிண்டர்ஸ், கொழும்பு-11. |
| விலை | : | ரூ. 150.00 |

உ
சிவமயம்



11-01-2011 அன்று அமரத்துவம் எய்திய
எங்கள் மகன்
திரு. ந. தயாபரன் அவர்களின்
ஞாபகார்த்த வெளியீடு

உ
சிவமயம்



திரு. திருமதி. நல்லதம்பி இரத்தினபூரணம்
தம்பதிகள்

# காணிக்கை

ஊட்டி வளர்த்து உடனலம் பேணியே
உத்தம னாக்கிய அன்னைக்கும்
நாட்டில் புகழ்பெற நற்கல்வி வாய்த்திட
நற்றுணை நல்கிய தந்தைக்கும்
ஏட்டில் அறிந்திடும் இன்தமி ழால்திருக்
குறள்நெறி இலக்கியச் சிந்தனை
காட்டுமிந் நூலினைக் காணிக்கை யாக்கினோம்
கணபதி யானருள் கிட்டவே.

திரு. நா. நல்லதம்பி
திருமதி. இரத்தினபூரணம் நல்லதம்பி

# அணிந்துரை

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே தென்மராட்சியில் அமைந்துள்ள மட்டுவில் கிராமத்திற்கு தனித்துவமான ஓர் இடமுண்டு. உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை, குருகவி மகாலிங்கசிவம், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, முதலான பலதுறை விற்பன்னர்களை உருவாக்கிய பெருமை இக்கிராமத்திற்கு உண்டு. இப் பின்புலத்திலேதான் ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் மட்டுவில் நா. நல்லதம்பி வருகின்றார்.

"ஆசிரிய தீபம்" நா. நல்லதம்பி ஈழத்துத் தமிழுலகில் மிகவும் நன்கறிந்துவிட்ட முதுபெரும் ஈழத்தறிஞர். அவருடைய எழுத்துக்கள் பலதுறை சார்ந்தவை. இலக்கிய அமுதம் முதலான பயன்மிகுந்த படைப்புக்களைத் தந்த இவர். தமிழ்கூறும் நல்லுலகிற்கு "திருக்குறள் நெறியில் இலக்கியச் சிந்தனைகள்" என்ற அருமையானதொரு நூலைத் தந்துள்ளார்.

உலக நாகரிகத்திற்குத் தமிழினத்தின் பங்களிப்பில் தமிழிசையும், திருக்குறளும், தலையானவை. விவிலியம், திருக்குர்ஆன், பகவத்கீதை, திருவாசகம் முதலான நூல்களுக்கு இணையாகப் பலராலும் ஏற்றிப் போற்றப்படுகின்ற நூலாகத் திருக்குறள் உள்ளது. உலக மொழிகள் பல வற்றிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுப் பயிலும் நிலையில் உள்ளது. மிகக் குறுகிய ஒரு வடிவத்துக்குள் (frame) பன்முகச் சிந்தனைகளைச் செறிவுடன் தருகின்ற நிலையில் திருக்குறள் தனியிடம் பெற்றுத் திகழ்கின்றது.

திருவள்ளுவரை இனம், மொழி, மதம், கடந்து கீழைத் தேசத்தவரும் மேலைத் தேசத்தவரும் கொண்டாடுவது அந்நூல் கொண்டுள்ள உயரிய கருத்துக்களுக்காகத்தான் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

அறிவுசார் ஆய்வு நெறிமுறைகளின் வளர்ச்சி மற்றும் அவற்றின் ஊடாட்டம் என்பன காரணமாகத் திருக்குறளைப் பன்முக நோக்கில் ஆராயும் போக்கு முனைப்படைந்து வருகின்றது. அதன் ஒரு கட்டமாக முதுபெரும் தமிழறிஞர் நா. நல்லதம்பி அவர்கள் இந்நூலை ஆக்கியுள்ளார். "திருக்குறள் நெறியில் இலக்கியச் சிந்தனைகள்" என்ற இந்நூலில் இல்லச் சிறப்பு முதல் காதலும் கண்ணும் என்பது வரையாக ஐம்பது தலைப்புக்களில் திருக்குறளின் புலமைக் கருத்துக்கள் அணுகப்பட்டுள்ளன.

குறட்பாக்களைத் துணைக்கொண்டு எழுதப்பட்டுள்ள இக் கட்டுரைகளில் புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள், நீதிக்கதைகள் முதலானவற்றின் உயரிய கருத்துக்களும் பொருத்தமுறச் சேர்க்கப்பட்டுள்ளமை பாராட்டுவதற்குரியது. நூலாசிரியரின் பன்னூற் பயிற்சி நூலின் அனைத்து இடங்களிலும் இழையோடியுள்ளது.

நூற்பயிற்சி குறிப்பாக அறநீதி நூல்களின் பயிற்சி மிகவும் அருகிப் போயுள்ள இன்றைய சமூகச் சூழலில் நா. நல்லதம்பி அவர்களுடைய இந்நூலின் வரவு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. "ஆசிரிய தீபம்" நா. நல்லதம்பி அவர்களின் மொழிநடை வியந்து போற்றுவதற்குரியது. இந்நடை எல்லோர்க்கும் வாய்க்காது. ஆசிரியர் இதுபோன்ற உயரிய ஆக்கங்களைப் படைத்து இன்றைய இளம் தலைமுறையினரை ஆற்றுப்படுத்த வேண்டும் என வேண்டி ஆசிரியரின் தமிழ்ப் புலமையினைப் பணிவுடன் வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் கி. விசாகரூபன்**
தமிழ்த்துறைத் தலைவர்
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
29-12-2010

சிவமயம்

# வாழ்த்துரை

திருக்குறள் மனிதர் வாழ்வாங்கு வாழவேண்டிய வழியை அறுதியிட்டு உறுதியாகச் சொல்லும் நூல். அதனால் இது உலகப் பொது நூல் எனப் போற்றப் படுகிறது.

எனினும் மரபுவழி குறள் வெண்பா யாப்பில் அமைந்திருப்பதால் சாதாரண கல்வி அறிவுடையோரால் எளிதில் படித்தறிய முடியாதுள்ளது. குறள் "ஓதற் கெளிது உணர்தற்கரிது" என்பது அறிஞர்வாக்கு.

திருக்குறளுக்குப் பலநூற்றுக் கணக்கானோர் தத்தம் அறிவுக்கேற்ப உரைகள் எழுதியிருந்தாலும் அவற்றைப் படித்து உண்மைப் பொருளை உணர்வது அரிதாகவே யுள்ளது.

இந்நூலாசிரியர் ஒருபுதிய உத்தியைக் கொண்டு பொருளுணரவைக்கின்றார். நூல் முழுவதிலுமிருந்து ஐம்பது குறள்களைத் தெரிந்தெடுத்து அவற்றுக்குத் தனித்தனி தலைப்புக் கொடுத்து இலகுதமிழில் பொருள் விளக்கம் தருகின்றார். அத்துடன் அவ்வக்குறளுக்குப் பொருத்தமான இலக்கியச் செய்திகளையும் உதாரணமாகக் காட்டுகின்றார். இதனால் படிப்போர்க்குக் கவர்ச்சியாகவும், சுவையாகவும் இருப்பதுடன் அங்கு தரப்படும் உதாரணங்கள் குறளின் பொருளையுணர்ந்து மனதில் பதித்துக் கொள்வதற்கும் உறுதுணையாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உதாரணமாக,

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்.

என்ற குறளுக்குத் துறவறத்தினும் இல்லறம் மேலானதென்பதை விளங்குவதுடன் - கொக்கொன்றைத் தன்பார்வையால் எரித்த முனிவரின் கோபப் பார்வை கற்புள்ள பெண்ணின்முன் செல்லாக் காசாகிய கதையும், இன்று விடியுமுன் உன் மாங்கல்யம் இழப்பாய் என்ற தௌமிள முனிவரின் சாபத்தை எதிர்த்துப் பொழுதையே விடியாமற் செய்த நளாயினியின் கதையும், கண்ணகி கதையும் விளக்கமாகத் தரப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவ்விதம் குறள்களுக்கு இலக்கியச் சான்றுகள் காட்டப்படுதல் ஆசிரியரின் முதிர்ந்த அனுபவப் பயனால் விளைந்த செயலாகும். இதனால் எத்தகையோரும் சுவைத்துப் படித்துப் பயன்கொள்ள முடியும். நூலாசிரியர் திரு. நா. நல்லதம்பி அவர்களின் இம்முயற்சி பாராட்டத் தக்கதெனலாம். வரவேற்புக்கும் உரியதே. படித்துப் பயன்பெறுவோம்.

கலாபூஷணம், சைவப்புலவர்
**சு. செல்லத்துரை**
(ஓய்வுநிலை முதலாந்தர அதிபர்)

# முகவுரை

**உ**லக மக்களை வாழ்வாங்கு வாழ நன்னெறிகாட்டும் நூல்கள் பல தமிழ்மொழியில் இருக்கின்றன. விஞ்ஞான தொழில் நுட்பம் கணனியுகத்துக்கு நம்மை உயர்த்தியிருந் தாலும், இன்றைய இளம் சந்ததியினர் வளர்ந்து நாளைய சிறந்த குடிமக்களாக வாழ்வதற்கு ஏற்ற சீரிய பண்பாட்டைப் பெற்றிருக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

இந்தவகையில் சமுதாயத்தில் எந்தத் துறையில் ஈடுபட்டு உழைப்பவர்களாயிருந்தாலும் அவ்வத்துறையில் அவர்கள் செம்மையாகத் தம் கருமங்களை ஆற்றக் கூடிய ஆற்றல்களையும் பெறுவதற்கேற்ற அறிவுரைகளை வழங்கக் கூடிய நூலாகத் திகழ்வது திருக்குறளாகும். இந்நூல் உலகத்துக்கே ஒரு பொதுமறையாக விளங்குகின்றது. வாழ்வின் இலட்சியங்களுக்கெல்லாம் இலக்கணங் கற்பிக்கவல்ல குறட் பாக்களைத் தெய்வப்புலவர் திருவள்ளுவர் தந்துள்ளார்கள். இதனாலன்றோ பாரதியார்,

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"** என்று பாராட்டியுள்ளார்.

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலால் வகுத்து, நான்காவதான வீட்டின்பம் பெற வழியுங் காட்டி, ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள் வெண்பாக்களில், ஒவ்வொன்றும் ஏழு கடல்கள் அளவு பொருளடக்கத்தைத் தம்முட் கொண்ட அணுவளவாகச் சுருங்கிய ஒன்றே முக்கால் அடிகளாலான குறள்வெண்பாக்களில் திருக்குறள் நூலை நமக்கு தந்துள்ளார் தெய்வப்புலவர்.

**"அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்."** **(ஔவையார்)**

மாங்குடி மருதனார் என்ற புலவர்,

**"ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி**
**வேதப் பொருளாய் மிக விளங்கித் - தீதற்றோர்**
**உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்குமே**
**வள்ளுவர் வாய்மொழி மாண்பு."**

எனக் குறட்பா ஒன்றின் பொருளடக்கம் பற்றிப் புகன்றுள்ளார்.

நாம் எடுத்துக் கொண்ட ஒரு பொருள் எப்படி இருக்க வேண்டும்? எப்படி இருக்கக் கூடாது? (உ+ம் நட்பு, தீநட்பு) என்பதுபோல வகைப்படுத்தியும் குறட்பாவால் வழிகாட்டியுள்ளார் திருவள்ளுவர்.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட திருக்குறள் வெண்பாக்களை மாணவர்கள் இளம் பராயத்திலிருந்தே பொருளுணர்ந்து கற்று கற்றாங்கு ஒழுகப் பயின்று கொள்ளுதல் பயனும் பண்புடைமையும் ஆகும்.

அதனால், மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் பயனுள்ள வகையில் சில குறள்வெண்பாக்களை எடுத்து அவற்றுக்கு இலக்கியமாக இருக்கக் கூடிய கதைகள் மூலம் பொருள் விளங்கும் கட்டுரைகளாக எழுத முயன்றுள்ளேன்.

ஏனைய பாடல்களையும் கற்க வேண்டும் என்ற எண்ணத்தை வளர்ப்பதற்கு இக்கட்டுரைகள் மாணவர்களுக்குத் தூண்டுகோலாய் அமையும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

அதன்மூலம் திருக்குறள் வெண்பாக்களின் தெளிவான விளக்கத்தைப் பெறுவதோடு அந்த வழியில் தமது வாழ்க்கைப் பாதையைச் சீராக்கலாம் என்பதும் எமது அவாவாகும்.

இந்நூலில் எடுத்தாளப் பெற்ற குறட்பாக்கள் பெரும் பாலும் நமது அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடையன வாக அமைந்திருப்பன. சில குறட்பா நாம் அறிந்த குறித்த ஒரு கதைக்காகவே பாடப்பெற்றது போல அமைந்திருக்கும்.

**"ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான்**
**இந்திரனே சாலும் கரி."**

என்ற பாடல் ஐம்புலன்களை அடக்கிய முனிவர் பெருமை கூற வந்த வள்ளுவர், இந்திரன் சாபம் பெற்ற புராணக் கதையைக் காட்டி விளங்கியமை காணலாம்.

கல்வி அறிவோடு மாணவர்களுக்கு ஒழுக்க நெறியும் மிகவும் அவசியமானது. விஞ்ஞான வளர்ச்சி மாணவ சமுதாயத்தை வெகுவாகப் பாதிக்கிறது என்ற குரல் எழுப்பப் பெறுகின்ற இக்காலத்தில் ஒழுக்கம் பேணுவதற்குப் போதுமான,

**"எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லையால்"** என்று

மதுரைத் தமிழ் நாகனார் திருக்குறள் பற்றிக் கூறுவதைக் கேட்போமாக.

ஆகவே, ஏனைய நீதிநூல்களை இளமையில் கற்கும் மாணவர், போட்டிப் பரீட்சைக்காக மனனஞ் செய்கின்ற மாணவர், திருக்குறள் பாடல்களையும் மனனஞ் செய்து பொருள் விளங்கிப் பயன்பெறுவதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என நம்புகின்றோம்.

2001ஆம் ஆண்டு வெளியிடப் பெற்ற எனது "இலக்கிய அமுதம்" என்னும் நூலுக்கு ஆசியுரை வழங்கிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை

நான் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருகின்றேன். எனது அடுத்த வெளியீடு என்ன என்று அன்னை ஒருநாள் கேட்டார். "திருக்குறள் நெறியில் இலக்கியச் சிந்தனைகள்" பற்றிக் கட்டுரை எழுதுகின்றேன். அவற்றில், "ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி" என்ற குறளுக்கு, இந்திரன் சாபம் பெற்ற புராணக் கதையைத் திருவள்ளுவர் எடுத்தாண்ட கதையும் வருகிறது என்றேன். "நல்லது எழுதுங்கள்" என அன்றே எனக்கு ஆசி வழங்கியமை வாழ்த்தாக அமைந்தது.

பல்வேறு வேலைப்பளுக்களுக்கு மத்தியில் நூலுக்கு அணிந்துரை வழங்கிய யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் திரு. கி. விசாகரூபன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

இந்நூலுக்கு அருமையான வாழ்த்துரை வழங்கிய கலாபூசணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

தோன்றாத் துணையாக இருந்து இந்நூல் அச்சிடுவது தொடக்கம் வெளியீடு வரை பல வழிகளிலும் உதவிய சைவத்திரு கா. சிவபாலன் அவர்களுக்கு எனது நன்றியும் பாராட்டும்.

மேலும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த அனுஷ் பிரின்டர்ஸ் தாபன திரு. கு. அருளானந்தம் அவர்களுக்கும் பணியாளர்களுக்கும் எனது நன்றி.

மட்டுவில் வடக்கு
18-12-2010

**நா. நல்லதம்பி**

# பொருளடக்கம்


01. இல்லறச்சிறப்பு 01
02. ஒழுக்கத்தின் உயர்வு 04
03. பிறன்மனை விரும்பேல் 08
04. பசியாத போது புசியாதே 10
05. ஆக்கமும் கேடும் 12
06. பெறுதற்கரியது அருள் 16
07. காலமறிந்து செய்த உதவி 19
08. உத்தமனாயிரு 23
09. விருந்தோம்பும் பண்பு 26
10. விதியை மாற்றிய விடாமுயற்சி 28
11. மக்களைக் காக்கும் மன்னன் 31
12. சூது தீமை தரும் 35
13. தீமையற்ற சொல் - வாய்மை 39
14. செய்ய இயலாதது இல்லை 42
15. சினம் தன்னைக் கொல்லும் 46
16. நயவஞ்சகம் 49
17. பொய்யும் வாய்மை ஆகலாம் 51
18. மகளிர் மாண்பு 54
19. நா அடக்கம் 58
20. இயமனையும் வெல்லும் இறைபக்தி 61
21. ஆபத்தில் உதவும் நட்பு 64
22. பகுத்துண்டு வாழ்தல் 67
23. நட்புக்கேற்றது ஒத்த உணர்வு 70
24. மானம் பெரிது 73

25. பகைவருக்கும் உதவுதல் - மனிதாபிமானம் 75
26. தவறு இல்லையேல் துன்பமும் இல்லை 80
27. ஊரறிந்த களவுக் காதல் 83
28. பயனற்ற வாய்ச்சொல் 85
29. மதியும் மாதர் முகமும் 88
30. துன்பச் சிரிப்பு 92
31. தீமைக்கு நன்மை 96
32. சொற்சோர்வு படேல் 99
33. செய்ந்நன்றி மறவேல் 101
34. கற்பின் திறம் 105
35. மாசற்ற மனம் 108
36. விதிவலிது 111
37. உள்ளத்தூய்மை 114
38. முற்பகல் செய்யப் பிற்பகல் விளையும் 120
39. அன்பின் வழி வாழ்க்கை 122
40. அடக்கலாகா அன்பு 125
41. நீத்தார் பெருமை 129
42. தீமை அற்றது அறம் 132
43. நட்பின் பயன் 135
44. இல்வாழ்க்கையில் அன்பு 137
45. பிறப்பொடு தொடரும் கல்வி 141
46. கண்ணோட்டம் - I 144
47. கண்ணோட்டம் - II 146
48. பிரிவுத் துன்பம் - I 148
49. பிரிவுத் துன்பம் - II 149
50. காதலும் கண்ணும் 151

## பொருளடக்கத்துக்குரிய திருக்குறள் மணிகள்

01. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்.

02. ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

03. பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.

04. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போக்கி உணின்.

05. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

06. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார் மற்று ஆதல் அரிது.

07. காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

08. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

09. செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

10. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்.

11. குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

12. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவது ஒன்றுஇல்.

13. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

14. அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

15. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

16. தொழுத கையுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து.

17. பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

18. தெய்வந் தொழாஅள் கொழுநற் தொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

19. யா காவாராயினும் நா காக்க காவாக்கால்
சோ காப்பர் சொல் இழுக்குப் பட்டு.

20. கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

21. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

22. பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

23. புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.

24. மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்.

25. பேராண்மை என்ப தறுகண் ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்று அதன் எ..கு.

26. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

27. கண்டது மன்னும் ஒருநாள் அலர் மன்னும்
திங்களைப் பாம்பு கொண் டற்று.

28. கண்ணொடு கண் இணைநோக்கு ஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

29. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லை யேல்
காதலை வாழி மதி.

30. இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்து ஊர்வது அ∴து ஒப்பது இல்.

31. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்.

32. சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

33. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

34. பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்.

35. மனத்துக்கண் மாசு இலன் ஆதல், அனைத்து அறன்
ஆகுல நீர பிற.

36. ஊழிற் பெருவலி யாவுள, மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்.

37. உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

38. பிறர்க் கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

39. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

40. அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் ஆர்வலர்
புன்கண் ணீர் பூசல் தரும்.

41. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும் புளார் கோமான்
இந்திரனே சாலும் கரி.

42. அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

43. செயற்கரிய யாவுள நட்பின், அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

44. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது.

45. ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

46. காணுங்கால் காணேன் தவறாய, காணக்கால்
காணேன் தவறல் லவை.

47. மண்ணோ டியைந்த மரத்தனையர், கண்ணோடு
இயைந்துகண் ஓடா தவர்.

48. கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா!

49. அழல்போலும் மாலைக்குத் தூதாகி, ஆயன்
குழல் போலும் கொல்லும் படை.

50. கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

# இல்லறச் சிறப்பு

**1. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில் போஓய்ப் பெறுவது எவன்.**

இவ்வுலகில் தோன்றுகின்ற பலவகையான பிறவிகளில் மனிதப் பிறவி மகத்தானது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இறைவனை வணங்கி, அவன் அருள் பெற்று, பிறப்பில்லா வாழ்வைப் (பேரின்ப வாழ்வைப்) பெற்றுவிட வேண்டும் என்பது சைவசித்தாந்தம்.

இறைவன் அருளால் அவனருள் பெற்று முத்தியடைவதற்கு இல்லறம், துறவறம் என இரண்டு வாழ்வுமுறை இருப்பதாகப் பெரியோர் கூறுவர்.

இவ்வையகத்துள் இல்லற வாழ்வில் இணைந்து வாழ் வாங்கு வாழ்வதனால் தெய்வநிலை பெறலாம் என்பது வள்ளுவன் கண்ட வழிமுறைகளில் ஒன்று. இல்லற வாழ்வுக் கேற்ற வசதிகளுடனே உலகம் படைக்கப்பட்டிருப்பதும் காணலாம். அதனால்,

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும் (குறள்)**

என்ற குறள்நெறியில் இவ்வுலக இன்பத்தை அனுபவித்துக் கொண்டு பேரின்ப நிலைக்குச் செல்லும் பாதையைக் காண முடியும்!

வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் கலந்துதான் அமைந்தது. ஆனாலும், சிலர் இல்வாழ்க்கை துன்பந் தரும் என்று அதனை விட்டு ஒதுங்கித் தனிமையில் கானகத்தில் துறவு வாழ்க்கை (துறவறம்) வழியில் வாழ்கிறார்கள். ஆயினும் துறவற வாழ்வுக்கும் ஏனையோர் (இல்லறத்தார்)

உதவி பெரிதும் தேவைப்படும். சிலவேளை பழிச் சொல்லுக்கும் ஆளாகலாம்.

அதனால் கஷ்டம் மிகுந்த கானக வாழ்க்கைக்கு ஏன் போக வேண்டும். தவத்தின் பயனையும் தரணியில் பெறலாமே என்கிறார் தெய்வப் புலவர்.

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவது எவன்.** என்பது அவர் குறள்

துறவறம் பூண்டு ஒரு துறவியார் யோக நிலையில் இருந்தார். அவர் ஒரு மரநிழலில் இருந்தார். ஒருநாள் அந்த மரத்தில் இருந்த கொக்கு போட்ட எச்சம் அவர் மேல் விழுந்துவிட்டது. அதனால் அவரது யோகநிலை கலைந்துவிடவே, கோபத்துடன் மேலே பார்த்தார். அவரது பார்வையினால் கொக்கு எரிந்துவிட்டது.

தவஞ் செய்பவருக்குக் கோபம் இருக்கக் கூடாது. ஆனால் தனது கோபத்தால் கொக்கு இறந்தமை தனது தவத்தின் பயன் என எண்ணி, அந்த மகான், யோக நிலையை விட்டெழுந்து, இல்லங்கள் தோறும் பிச்சை கேட்டுப் போகலானார். ஒருநாள் ஒரு வீட்டுவாசலில் நின்று உணவு கேட்டார். அப்பொழுது, அந்த வீட்டுத் தலைவி, தனது கணவனுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தார். அதனால் சற்றுத் தாமதமாகி முனிவரிடம் வந்தார்.

தான் கூப்பிட்டவுடன் வரவில்லையென அப் பெண்ணை முறைத்துப் பார்த்தார் அந்த முனிவர். ஆயினும் அப் பெண்மணி, “முனிவரே, என்னைக் கொக்கென்று எண்ணிவிட்டீரோ” என்று கேட்டுவிட்டாள்! சற்றும் எதிர்பாராத முனிவருக்கு இந்தக் கேள்வி அதிர்ச்சியாக அமைந்தது.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாத அந்த இல்லாள் கற்பு நிலைக்கும் இந்த முனிவரின் தவநிலைக்கும் என்ன வேறுபாடு? துறவறம் பூண்டு புறத்தாற்றில் போய்ப் பெறுவது என்ன வகையில் சிறந்தது?

இதுபோலவே, தௌமிய முனிவர், யோக நிலையில் இருக்கும்போது, தனது கணவனான குஷ்டரோகி மௌற் கல்லிய முனிவரை கூடையிலிருத்திச் சுமந்து கொண்டு வந்த நளாயினி, தனக்கு இடையூறு செய்தாள் எனக் குற்றஞ் சுமத்தி, "இன்று விடிவதற்குள் உனது மாங்கல்யம் அறுவதாக" என்று சபித்தார். உடனே அந்தப்பெண், "இன்று பொழுது விடியாமல் இருக்கட்டும்" என்று மறுசாபம் சொன்னாள். அன்று பொழுது விடியாமல் மக்களும் தேவரும் சிவபெருமானிடம் முறைப்பாடு செய்யும்படி ஆகிவிட்டது.

ஆகவே, இல்லறவாழ்வில் இருந்து வாழ்வாங்கு வாழ்பவர்கள் தெய்வநிலை பெறலாம் என்பது கண்டோம். அநியாய வழியில் தனது கணவன் கொலை செய்யப் பட்டபோது, கண்ணகி சினங்கொண்டு மதுரையை எரித்ததும் அரசனும் தேவியும் உயிர் நீத்ததும் தெய்வமாகிய கண்ணகியின் கற்பு நிலையால் என்பதும் கண்ணகி இல்லற வாழ்விலேதான் வாழ்ந்தாள் என்பதும் நாம் அறிந்ததே.

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவ தெவன் (குறள்)**

# ஒழுக்கத்தின் உயர்வு

**2. ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்.**

மக்கள் சமூகவாழ்வில் தத்தம் நிலைக்கேற்ப வாழும் முறை அல்லது ஒழுகும் முறையே ஒழுக்கம் எனக் கூறப் படுகிறது. இந்த ஒழுக்கமுறை பெரியோர்களால் அவ்வப் போது நன்னெறியெனப் போற்றப்பட்டு வந்த நெறி முறைகளாகும்.

ஒருவனது உயிர், அவனுடைய மேலான பொருளாக இருக்கிறது. அதேநேரம், அவன் நல்லொழுக்கம் உடையவ னாகவும் இருந்தால் அந்த நல்லொழுக்கம் அவனை மேனிலைக்கு இட்டுச்செல்ல உதவுவதாக இருக்கிறது. அதனால் அவனது உயிரினும் மேலாக ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்பது வள்ளுவர் வாய்மொழி ஆகும்.

**ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.** வள்ளுவர் கூற்றாகும்.

ஒருவனது கல்வித் தரத்தைக் கவனிக்கும்போது, மதிப் பீட்டாளர், அவனது ஒழுக்கநிலை பற்றியும் ஆராய்கிறார்கள் என்பது நாம் அறிந்த உண்மையாகிறது. எனவே தனியே ஒருவனுடைய கல்வி, கேள்வி அறிவைக் கொண்டு, ஒழுக்கமுள்ளவன் என்ற முடிவுக்கு வருதல் பொருந்தாது என்பது பெற்றாம்.

நல்லொழுக்கமானது ஒருவனுடைய குலத்தையும் மேன்மைப்படுத்தி நிற்கும்; அதனால் சமூகமும் மேன்மை அடையும். கல்வி அறிவும் நல்ல ஒழுக்கமும் இல்லாதவர்களை

உலகம் என்றும் மதிப்பதில்லை; அப்போது அவர்களது பிறப்பும் இழிந்த பிறப்பாய் விடும்.

**ஒழுக்கம் உடைமை குடிமை, இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்.** என்கிறார் தெய்வப்புலவர்.

கல்வி அறிவோடு ஒழுக்கமும் இருக்கும்போது அவன் சமூகத்தில் நல்ல சேவை செய்வான்; அதனால், மக்கள் அவனைத் தெய்வ நிலைக்கு உயர்த்தி வைப்பார்கள். அதே நேரம் ஒழுக்கம் இல்லாதவன் சமூகத்தில் சேவை செய்யும் போது பழிச்சொல் வந்து சேரும் வாய்ப்பு உள்ளது என்பதை நாம் உணரவேண்டும். ஆக, சமூகத்தில் பலவிதமான மக்கட் பண்பு உள்ளவர்களோடு நாம் பழகவேண்டிய தேவை இருக்கும்போது, நல்லொழுக்கத்தைக் காப்பதில் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

இனி, உண்மை பேசுதல், இன்சொல், அன்பு முதலிய பண்புகள் நம்மிடையே மிகவும் அவசியம் வேண்டப்படுகின்றன. கோபம், பொறாமை, பேராசை என்பன இருக்கக் கூடாது. அன்றியும் உலக நடையறிந்து ஒழுகும் பண்பாடு, நாம் கடைப்பிடிக்க வேண்டியவற்றுள் முக்கியமானதாய்க் கற்றுக் கொள்ள வேண்டும்.

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**

என எச்சரிக்கிறார் உலகப் பொதுமறை தந்த வள்ளுவனார்.

விஞ்ஞான வளர்ச்சியினால் அறிவு வளர்ச்சியினால், மக்கள் உலகின் பல்வேறு இன மத மக்களுடன் சென்று பழகும் வாய்ப்பும் வசதியும் பெற்ற இன்றைய உலகத்தோடு வாழப் பழகிக் கொள்ளாவிட்டால் நாம் எவ்வளவு கற்றிருந்தாலும் அதனால் நாம் நன்மை அடைய இயலாது என்பதைத் தெரிந்து கொள்வோமாக.

இதற்காகத்தான் நாம் நல்ல பல நூல்களைத் தேடிக் கற்க வேண்டும் என்றும், கற்றதன் வழியில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் பெரியோர்கள் முதல் வள்ளுவர் வரை புத்திமதி சொல்லியிருக்கிறார்கள்.

**கற்க கசடறக் கற்பவை; கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

என்பது வள்ளுவர் தந்த அறிவுரை ஆகும். நல்ல சிறந்த நூல்களுக்கு நமது தமிழ்மொழியில் பல இலக்கியங்களும் பாரதம், இராமாயணம், சிலப்பதி காரம் போன்ற காவியங்களும் இருக்கின்றன.

தருமத்தின் வழியில் தருமனும், சகோதர ஒற்றுமையில் பாண்டவரும் கொடை வள்ளலாக, செய்ந் நன்றி மறவாதவனாகக் கர்ணனும், கெடுமதியாளனாக வாழ்ந்து அழிந்து போனவனாகத் துரியோதனனும், கற்புடையவளாக வாழ்ந்த பாஞ்சாலியும், ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து பரந்தாமனுடைய அருட்பார்வை பெற்ற பாண்டவர் களும் பாரத காப்பிய மாந்தர்களாக வந்து நமக்கு ஒழுக்க நெறியை உணரவைக்கிறார்கள்.

அதுபோலவே, இராமாயணத்தில் தந்தை தாய் வாக்கிய பரிபாலனம் செய்த தசரத குமாரர்களையும், சிவபக்தனாகப் பெயரெடுத்து, தீய குணத்தால் அழிவுற்ற இராவணனையும், பக்திக்கு இலக்கணமாக சொல்லின் செல்வனாக வாழ்ந்த அனுமனையும், அரசுமுறை தவறாத பரதனையும் காண்கிறோம்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும், கற்புடைய மங்கையரைத் தெய்வமென வணங்குவதும் சிலப்பதிகாரத்தில் போற்றப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

இவ்வாறு, வாழ்வியல் நோக்கில் நல்லறம் எனப் போற்றப்படும் ஒழுக்கநெறிகளைப் பட்டறிவாகக் கொண்டு பிற்காலத்தவரும் நன்மை பெறவேண்டிப் படைக்கப் பட்டனவே இலக்கியங்கள்.

அவ்விலக்கியங்களை ஆராய்ந்து கற்பதனால் நமது வாழ்வை செம்மைப்படுத்தலாம் அல்லவா.

எப்படியும் வாழலாம் என்று இல்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என நல்லொழுக்க நெறியில் வாழ்வதே விழுப்பந்தரக் கூடியது; அதனையே உலகம் விரும்புகிறது.

ஆகவேதான், கூடா ஒழுக்கம் என்று பிறிதொரு அதிகாரத்தில் கூறிய தெய்வப்புலவர், ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் நல்லொழுக்கம் என்று கூறாமல் "ஒழுக்கமுடைமை" என்று பொதுவாகக் கூறி,

**ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்.**

என முதற்பாடலில் 'ஒழுக்கம்' என்று தொடங்கி யுள்ளார்; ஏன்? ஒழுக்கம் என்பது நல்லொழுக்கம், கூடா ஒழுக்கம் என இரண்டாகக் கொள்ளப்படுவதைப் பெரியோர் விரும்பமாட்டார்கள்!

இதோ,

**ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல். (குறள்)**

# பிறன்மனை விரும்பேல்

**3. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.**

மனிதம் தோன்றிய காலம்முதல், மனித மேம்பாட்டிற் காக அவ்வப்போது அறிஞர்களும் சமயப் பெரியோர்களும் பல ஒழுக்க நெறிகளைக் கூறிச் சென்றிருக்கிறார்கள். மனம் என்ற ஆறாம் அறிவையும் பெற்ற நாம், ஏனைய பிறவிகளை விடவும் முன்னேற்றமுள்ள நல்ல சிறந்த பண்பு களைப் பெற்று வாழ வேண்டுமென்பதே அறிஞர்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

மனிதன் கூட்டாக, சமூகமாக வாழ்வதற்கு ஏற்றதான பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தல் மிகவும் அவசியம். இல்லையேல் விலங்குகள் பறவைகளுக்கும் மனிதனுக்கு மிடையில் வேறுபாடு இல்லாமல் போய்விடும்! மிருகங்களும் பறவைகளும் கூடத் தமக்குள் சில ஒழுக்க முறைகளைக் கடைப்பிடிப்பதைக் காணலாம்.

மேலும், மனிதன் தனக்கென வாழாப் பிறர்க்குரிய வனாகவும் வாழ வேண்டியவனாகிறான். அதற்கான நாகரீகத்தை மனிதன் வளர்த்துக் கொள்ள வேண்டும். அன்பு, இன்சொல், உண்மை முதலிய நற்பண்புகள் நமக்குத் தேவை. உலகம் எதை விரும்புகின்றதோ அந்த வழியில் நாமும் அவற்றை ஏற்று, எதை வெறுக்கின்றதோ அதை நாமும் தவிர்த்து வாழ வேண்டும். அப்போதுதான் உலகம் நம்மை மதிக்கும்.

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**

என்பது வள்ளுவன் நெறியாகும். உலகத்தோடு ஒட்டி வாழத்

தெரியாதவன் பல நூல்கள் கற்றிருந்தாலும் அவனை உலகம் மதிப்பதில்லை.

உலகம் விரும்புகின்ற பண்புகளில், பிறன் மனையாளை விரும்பாத பேராண்மையாகிய ஒன்று மாத்திரமன்று, வேறும் பல பண்புகளும் பேராண்மையில் அடங்குவனவாக உள்ளன.

ஆகவேதான் திருவள்ளுவரும்,

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.**

எனச் சொல்லுகிறார். சான்றோர்க்கு, பிறன்மனை நோக்காத பேராண்மை மாத்திரம் ஒழுக்கமாகக் கொள்ளப் படவில்லை. வேறும் பல அறங்களையும் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார். சூதுவாது, பொறாமை, வஞ்சகம், பொய்மை, இன்னாச் சொல், மதுப்பழக்கம் என்பனவற்றையும் நீக்கி வாழ்வது சான்றோர்க்குச் சிறந்த தர்மம் ஆகிறது. இவற்றுள் பிறன்மனை விரும்புதல் மிகப் பெரிய குற்றம் என்பதால், அது இங்கே பிரித்துக் கூறப்பட்டது.

எனவே, பிறன் மனைவியை மனதாலும் விரும்பாமை இருப்பது தர்மம் மாத்திரமன்று, சிறந்த ஒழுக்கமுமாகும்.

சிறந்த சிவபக்தனாக நாயன்மார்களால் போற்றப்பட்ட இராவணன் தவ வலிமையும் உடல் வலிமையுங் கொண்ட இராவணன், பிறன் மனைவியான சீதையை விரும்பிக் கடத்திச் சென்றதனால் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டான்.

சீதையின் கற்பு நிலையால், அவ்ளை இராவணன் மானபங்கப்படுத்தவில்லை எனினும், மனதால் விரும்பிக் கவர்ந்து சென்றமை குற்றமாகிறது.

**உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வேம் எனல்.** **(குறள்)**

# பசியாத போது புசியாதே

**4. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு, அருந்தியது அற்றது போக்கி உணின்.**

**நோ**யற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது முதுமொழி. உடல்நலம் நன்னிலையில் இருந்தால் உள்ளத்திலும் நல்லறிவு உண்டாகும். வாழ்க்கை இன்பகரமாக இருப்பதற்கு உடல் ஆரோக்கியமாக இருப்பது அவசியம். மனிதன் ஆறறிவு பெற்றிருந்தாலும் அவனுக்கு பசியும் பிணியும் இருந்தால் நல்ல கல்வி அறிவைப் பெறுதல் இயலாது.

ஆகவே, உடல் நலமாக இல்லாவிட்டால் உழைத்து வாழவும் முடியாது. கற்று அறிவு பெறவும் முடியாது. அன்றியும் மறுமை இன்பத்தை அடையத் தேவையான இறையருளைப் பெறுதலும் கைகூடாது.

**உடம்பை முன்னர் இழுக்கென்று இருந்தேன்**
**உடம்பார் அழியின் உயிரார் அழிவர் அதனால்**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.**

என்கிறார் திருமூலர்.

இந்த வகையில் உடல் நலம் பேணப்பட வேண்டும். இதற்கு சிறந்த உணவுப் பழக்கம் அவசியமானது. உணவு உண்பதிலும் சில விதிமுறைகளை அறிந்து வைத்திருக்க வேண்டும். அப்பொழுது மருந்தென அடிக்கடி வைத்திய சாலைக்குப்போக வேண்டிய தேவையும் ஏற்படாது என்கிறார் திருவள்ளுவர்.

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போக்கி உணின்.**

என வள்ளுவர் கூறுவது அப்படி ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல. பசியாதபோது புசியாதே என்பது போல, பசித்தபின் உண் என்று தானே சொன்னார்.

உணவைக் கண்ட நேரமெல்லாம் வயிற்றில் போடாமல், நல்ல சத்துள்ள உணவை, முதல் உண்ட உணவு ஜீரணமாகி, உடலில் பசி தோன்றும்போது அடுத்த முறை உண்ணும் பழக்கத்தைக் கற்றுக் கொண்டால் மருந்தகம் செல்லும் தேவை வராது என்கிறார் வள்ளுவர். உயிர் வாழ்வதற்காக உண்ண வேண்டும், உண்பதற்காக உயிர் வாழக் கூடாது என்பர் பெரியோர்.

மேலும், நமது நீண்ட வாழ்வுக்கு, பொருள் வளத்தோடு அருள் வளமும் பெற்று வாழ்வதற்கு பசித்தபின் அளவறிந்து உண்பது மிகவும் அவசியம் என்பதுவும் வள்ளுவர் வாய்மொழியாகும்.

**அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.** **(குறள்)**

பெறுதற்கரிய மானிடப் பிறவி எடுத்த நாம், பிறவி எடுத்ததன் பயனாக இன்பமாக நீண்டவாழ்வு வாழ்வதற்கும் இறையருள் பெற்று மறுமை இன்பம் பெறவும் பசித்தபின் அளவறிந்து உண்ண வேண்டும் என்கிறார் தெய்வப் புலவர், இது ஒன்றும் இயலாத காரியமல்லவே!

அதிக உணவை எந்நேரமும் உண்பது கூடாது, அப்பழக்கம் நம்மை நோயாளி ஆக்கிவிடும் என எச்சரிக்கை செய்கிறார் திருவள்ளுவர்.

**இழிவறிந்து உண்பான் கண் இன்பம் போல் நிற்கும்**
**கழிபேர் இரையான் கண் நோய்.** என்பது குறள்.

ஆகவே, நாம் உணவுக்கு அடிமையாகாமல், உயிர் வாழ்வதற்காக, அளவோடு உணவருந்தி ஒருமுறை உண்ட உணவு ஜீரணமாகி உடம்பில் பசியெடுத்த பின் மறுமுறை உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுவோமாக.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை உணர்ந்து நமக்கும் நாட்டுக்கும் உறுதியும் உயர்வும் தரும் உடல்நலம் பெற்று வாழ முயல்வோமாக.

# ஆக்கமும் கேடும்

**5. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**

**கேடும் நினைக்கப் படும்.**

இவ்வுலக வாழ்விலே, பலர் துன்பத்துடன் வாழ்கிறார்கள். சிலர் இன்பமாக வாழ்கிறார்கள். இதற்குக் காரணம் முற்பிறவியிலே அவர்கள் செய்துகொண்ட நல்வினை தீவினைகளின் பயன்களேயாம்.

**இலர் பலராகிய காரணம் நோற்பார்**

**சிலர், பலர் நோலாதவர்.** என்கிறார் செந்நாப் போதார்.

முற்பிறப்பிலே நல்வினை செய்தவர்கள் இப் பிறப்பிலே நல்வாழ்வு பெறுவதும் நல்வினை செய்யாத வர்கள் துன்பவாழ்வு பெறுவதும் இயல்பானதே என்பது அன்னார் முடிவு ஆகும். பல்லக்கிலே ஏறி அமர்ந்திருப் பவனையும் அதனைச் சுமந்து செல்பவர்களையும் பார்த்தால் இது விளங்கும் என்கிறார் பொதுமறை தந்த வள்ளுவர்.

**அறத்தாறு இதுவென வேண்டா; சிவிகை**

**பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.** என்பது அவர் தரும் விளக்கமாகும்.

இ∴து இவ்வாறிருக்க, வாழ்க்கைப் பாதையின் இன்னொருப் பாகுபாடு இருப்பதையும் காணமுடிகிறது. அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் என்பனவற்றின் நிலைக்களனாய் விளங்கும் ஒருவன், தவவலிமை பெற்று முன்னேறுவதையும் செம்மையான வாழ்வு வாழும் ஒருவன் வறுமையுற்றுத் துன்பப்படுவதையும் காணலாம். இப்படியான வாழ்வினை உடையவர்களைப் பெரியோர், இனங்கண்டு கொள்வார்கள் என்கிறார் செந்நாப் போதார்.

**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**

**கேடும் நினைக்கப் படும்.** என்பது குறள்.

உலகம் இந்தக் கேடும் ஆக்கமும் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்; 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' ஆதலின்.

இந்த மாறுபாடு விதியின் காரணமாய் உண்டாவதனை நாம் உணரலாம்.

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கம்:

பொறாமைக்குணம் படைத்தவன் தக்கன். ஆயினும் முன்னைய தவப்பயனால், மேலும் (இப்பிறப்பில்) முயன்று, தாட்சாயணியை மகளாகப் பெற்று, சிவபெருமானுக்கு அவளை மணமுடித்துக் கொடுக்கும் பாக்கியம் பெறுகிறான். அது விதியின் பயன். ஆனால், தவவலிமையால் ஆணவ முனைப்புப் பெற்ற தக்கன், இறைவனை மதிக்காது, தானே கடவுள் என நடந்ததனால் சிறுமை அடைய நேரிடுகிறது. முன்பு சிவனே முழுமுதற் கடவுள் என்று எண்ணிக் கருமம் செய்தவன், இப்போது தானே கடவுள் என எண்ணலானான்; யாகத்துக்குச் சிவனை அழைக்கவில்லை.

**தக்கனார் வேள்வித் தவத்தைமேற் கொண்டிருந்தும்**
**தொக்க அறமாயிற்றோ சோமேசா - மிக்க**
**அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்.**

எனச் சோமேசர் முதுமொழி வெண்பா கூறுவது போல தக்கன் சிவனை மதிக்காமல் அழுக்காறு கொண்டதனால், தவத்தால் இதுவரை பெற்றுக் கொண்ட பலனை இழந்து விட்டான். தீயகுணத்துக்கு 'விதி'யாகி விட்டான்.

செவ்வியான் கேடு:

மதுரை மாநகரிலே, தன் மனைவியின் காற்சிலம்பை விற்கச் சென்ற கோவலன், முன்னர் செல்வச் செழிப்போடு செம்மையாக வாழ்ந்தவன். பின்னர், கேடுறும் விதி குறுக்கிட்டதால் கைப்பொருள் இழந்து இலம்பாடுற்றுத் தன் மனைவி கண்ணகி காற்சிலம்பை விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டான்.

காவிரிப்பூம் பட்டணத்தில் செல்வச் சீமானாக வாழ்ந்த அவன், தனது ஊரில் சிலம்பை விலைகூற வெட்கப்பட்டு,

இரவோடிரவாக மனைவியோடு மதுரைக்குச் சென்றான். வழியிலே இவர்களை சமணத்துறவியான கவுந்தியடிகள் சந்தித்து உரையாடினார். இந்தச் செம்மனச் செம்மல்களுக்கு இப்படி ஒரு அவலம் (கேடு) வந்ததா? என்று நினைத்துப் பார்த்து, அவர்களைத் தேற்றுகிறார்.

'கோவலனே, தந்தை தாய் சொற்படி மனைவியோடு கானகம் போன இராமன், நான்முகனைப் பெற்ற திருமாலின் அவதாரம் அல்லவா? இருந்தும் இராமன் சீதையைப் பிரிந்து துன்பப்பட்டான் என்பதை நீ அறியாயோ?'

சூதாடி நாடுநகரை இழந்து, தன் மனைவி தமயந்தியோடு கானகஞ் சென்ற நளமகாராசன் நல்லவன், செங்கோல் மன்னவன் அல்லவா? தமயந்தி பெண்மைக்கு இலக்கணமாக வாழ்ந்தவள் தானே! இருந்தும், அவளை நடுக்காட்டிலே நள்ளிரவிலே நளமகாராசன் பிரிந்து போகிறானே!

"ஆனால் நீ, அவர்களைப் போன்று உன் மனைவியைப் பிரிந்து வரவில்லையே! வருந்தாதே; கண்ணகியைக் காப்பாற்றித் தருவது என் கடன்" என்று ஆறுதல் கூறுகின்றார்.

பின்னர் கோவலனை நன்கு தெரிந்திருந்த மாடல மறையோன் சந்திக்கிறான். கோவலனது பழைய நல்ல செயல்களை நினைவுபடுத்துகின்றான்.

"ஒருமுறை வாணிகம் செய்யச் சென்றபோது, எமது மரக்கலங்களை புயல் தாக்கியபோது, மணிமேகலா தெய்வம் எங்களைக் காப்பாற்றியது. அதனால், மாதவியின் மகளுக்கு மணிமேகலை என்று பெயர் சூட்டினாய் அல்லவா? ஆனபடியால் அத்தெய்வம் இனிமேலும் உன்னைக் காப்பாற்றும்."

"இன்னொரு நாள், மதம் பொருந்திய யானை ஒன்றை அடக்கி வயோதிபர் ஒருவரைக் காப்பாற்றிய கருணை மறவன் அல்லவா நீ!

மற்றும், தன் பிள்ளைக்குக் காவலாயிருந்த கீரியைக் கொன்றுவிட்டாள் என்பதற்காகத் தன் மனைவியைப் பிரிந்து வடதிசை சென்றான் ஒரு மறையோன். அதனால் அந்த மங்கை பட்ட துன்பத்தைப் போக்கியதுமன்றி, அந்த மறையோனைத் தேடி அவளோடு சேர்த்து வைத்தும் உதவினாய்.

மேலும், பொய்ச்சாட்சி சொன்னான் என்று பூதம் ஒருவனைக் கொன்றுவிட்டபோது, பசிப்பிணி நீக்கி அக்குடும்பத்தை நீ காப்பாற்றினாய் அல்லவா?"

"ஆகவே, கோவலனே நீ,

**இம்மைச் செய்தன யானறி நல்வினை**
**உம்மைப் பயன்கொல் ஒரு தனிஉழந்து இத்**
**திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது".**

என்று தேற்றினான் மாடல மறையோன்.

அது கேட்ட கோவலன், தான் தீய கனவு கண்டதாகவும் தனக்கும் தன் மனைவிக்கும் வெகு சீக்கிரம் தீமை வந்து சேரும் என்றும் தனது அச்சத்தை வெளிப்படுத்தினான்.

அதன்படி, பின்னர் கோவலன் கொலையுண்டதும் கண்ணகி துயரடைந்து தெய்வமாகியதும் வழக்குரைப்பதும் அரசியல் பிழைத்ததே என்று பாண்டியன் இறக்க, அது கண்டு கோப்பெருந்தேவி இறப்பதும், சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோவில் எழுப்பிப் பெருமை பெறுவதும் விதியின் விளைவே என்பதை நாம் உணர்வோமாக.

ஆகவே, தீவினையாளர் ஆக்கம் பெறுவதும் நல்வினையாளர் கேடு உறுவதும் விதியின் வழி நடப்பனவே என்பது பெற்றாம்.

**ஊழிற் பெருவலி யாவுள; மற்றொன்று**
**சூழினும் தான் முந்துறும். (குறள்)**

# பெறுதற்கரியது அருள்

**6. பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார்**
**அற்றார் மற்று ஆதல் அரிது.**

மக்களாய்ப் பிறந்த நாம் இவ்வுலகில் வாழ்வதற்குப் பொருள் மிகவும் வேண்டப்படுகிறது.

**அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு.**

எனத் தெய்வப்புலவர் இதனைக் கூறியுள்ளார்.

ஆயினும், பிறக்கும் பொழுது பொருளோடு யாரும் பிறப்பதில்லை. பிறப்பவர்கள், அறவழியில் பொருள்தேடி, இன்பமாக வாழ்ந்து பேரின்ப வீடு அடைய வேண்டும் என்பதே பிறவியின் நோக்கம்.

ஆயினும் பூர்வ புண்ணிய, பாவங்களின் பயனாகச் சிலர் செல்வக் குடும்பத்திலும் பலர் வறிய குடும்பத்திலும் பிறந்திருப்பதையும் காணமுடிகிறது.

செல்வம் தன் பெயருக்கேற்ப ஓரிடத்தில் நிலையாக நில்லாது (செல்வம் = சென்றுவிடுவோம்) செல்லக் கூடியது. பிறவி எடுப்பவர் செல்வக் குடும்பத்தவராயினும் வறுமைக் குடும்பத்தவராயினும் இவ்வுலகில் பொருள் தேடி வாழக்கூடிய இயற்கை வளத்தை இறைவன் படைத் திருக்கிறார். யாரும் முயற்சியில்லாமல் வாழக் கூடாது; முயற்சி திருவினை ஆக்கும்; முயற்சியின்மை இன்மை புகுத்திவிடும்.

சிலவேளைகளில் உலகில் பொருட் பஞ்சம் ஏற்படுவதுண்டு. அப்பொழுதும் சோர்ந்துவிடாமல் வாழப் பழகிக் கொள்ளவேண்டும். இதற்கு கடவுள் வழிபாடு மிகவும் அவசியம். தீயவழிகளில் மனதை அலைய விடாமல் துன்பத்தை எதிர்கொள்ளக் கடவுள் அருள் நமக்குத் துணை நிற்கும்.

**பொருளற்றார் பூப்பர் ஒருகால், அருளற்றார்**
**அற்றார் மற்று ஆதல் அரிது.**

என்பது தெய்வப் புலவர் கூறும் புத்திமதி ஆகும்.

பொருள் இல்லாவிடத்து அதனை என்றோ ஒருநாள் தேடிக்கொள்ளலாம்; இன்பநிலைக்கு வரலாம். ஆனால் கடவுள் அருள் இல்லையெனில் நமக்கு வேறு கதி இல்லை என்று ஆகிவிடும். கடவுளை நம்பினோர் கைவிடப்படார். இதனை ஒரு கதை மூலம் விளக்குவோம்.

குசேலர் என்னும் முனிவர் ஒருவர், அதிக பிள்ளை களைப் பெற்ற காரணத்தால் வறுமை நிலைக்குச் சென்று விட்டார். ஆயினும் இறைவழிபாட்டை என்றும் கைவிட வில்லை; மன உறுதியோடு வாழ்ந்தார்.

குசேல முனிவர், யசோதையின் மகனான கண்ண பிரானது பள்ளித் தோழர். ஆயினும், தோழர் என்ற எண்ணத்தை விட்டு இறைவன் என்ற நிலையில், நம்பிக்கையில் கண்ணனோடு அருளுறவு பூண்டு வாழ்ந்து வந்தார் குசேலர்.

வறுமையைப் பற்றிக் குசேலர் சிந்திப்பதேயில்லை; சிந்தனை கண்ணன் கழலடிக்காக்கி வாழ்ந்தார்.

குசேலர், வறுமையை மறக்கலாம்; மனைவி மறக்கலாம்; பிள்ளைகளால் வறுமையைப் பசிபட்டினியை எத்தனை நாளைக்கு மறந்திருக்க முடியும்?

பிள்ளைகள் பசித்திருக்கப் பொறுக்காத அன்னையின் வற்புறுத்தலினால், ஒருநாள் தனது பள்ளித் தோழனைப் பார்த்துவரத் துவாரைக்குப் போனார் குசேலர்.

நண்பன் வீட்டுக்காயினும் வெறுங்கையோடு போகலாமா? ஒரு பிடி அவலை மனைவி கொடுக்க, அதைத் தமது கந்தைத் துணியில் முடிந்து கொண்டு போனார்.

துவாரகையில் கண்ணனுடைய வாயிற் காவலர்கள் குசேலரை உள்ளே செல்லவிடாது தடுத்தனர். ஆயினும்

அறிதுயில் கொள்ளும் பரந்தாமனுக்கு இது தெரியாமலா போகும்! அவரை உள்ளே அழைத்தார். எல்லாம் அறிந்தவரான கண்ணன், எனக்கு என்ன கொண்டு வந்தாய் என்று குசேலரைக் கேட்டுக் குசேலர் கொடுத்த அவலை அன்போடு பெற்று, உண்டு, மகிழ்ந்தார். "எப்படிச் சுகம்" என்று கண்ணன் கேட்கவும் இல்லை; குசேலர் தன் இலம்பாடு பற்றிப் பேசவும் இல்லை. சிறிது நேரம் ஏதேதோ பேசிக்கொண்டு இருந்துவிட்டு, "நீண்ட நாட்களாய் உன்னை நேரில் பார்க்கவில்லை. அதுதான் ஒருமுறை வந்தேன்" என்று சொல்லிப் புறப்பட்டார் குசேலர்.

வீடு சென்றடைந்த குசேலருக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது. தான் இதுவரை வாழ்ந்திருந்த குடிசை அங்கிருக்கவில்லை; ஒரு பெரிய மாளிகை அந்த இடத்தில் இருந்தது! மாளிகையில் மனைவி மக்கள் வறுமைப்பட்டவர் போலன்றிச் செல்வச் செழிப்பு மிக்கவர் போலக் குதூகலமாகக் காணப்பட்டனர். தனது கந்தை உடையை இப்போதுதான் கவனித்தார்; அது பட்டுப் புடைவையாய் மிளிர்ந்தது.

குசேலரின் இறையருள் அவரை வறுமை நிலையிலிருந்து மீட்டு எடுத்தது!

**பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார்**
**அற்றார் மற்று ஆதல் அரிது.**

என்ற தெய்வப்புலவர் கூற்று இலக்கியமாதல் காண்கிறோம். எங்கே இந்தச் செல்வநிலை தன்னை மாற்றிவிடுமோ, இறை அருளை மறந்துவிடுவேனோ என்று பயந்து கொண்டு அன்றிரவு உறங்கிய குசேலருக்குக் கண்ணன் காட்சி கொடுத்தருளினான்.

**ஒப்பிலா முனிவன் பின்னர் ஒருதினம் வானநாடர்**
**வெப்பிலாக் கற்பகப்பூ விரை கெழு மாரி பெய்ய**
**வைப்பின் மெய் யடியார்க்காய வைகுந்த உலகஞ் சார்ந்து**
**திப்பிய உருவ மாயன் சேவை செய் தின்புற்றானே.**

## காலமறிந்து செய்த உதவி

**7. காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.**

இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழும் மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழவேண்டும். தானும் தன்னலனுமாக வாழ்கின்றவன் தனக்கோ தனது சமூகத்திற்கோ பயனுள்ள ஒருவனாக மதிக்கப்படமாட்டான். அது வாழ்வாங்கு வாழ்வதாகவும் கருதப்படுவதில்லை.

அதிலும், ஒருவனுக்குக் கட்டாயமாக உதவி தேவைப்படுங் காலத்தில் நாம் அவனுக்குச் செய்யும் உதவி காலத்தினாற் செய்த நன்றியாக எடுத்துக் கொள்ளப்படும். இவ்வாறான உதவி, பொருளுதவியாகவோ, சரீர உதவியாகவோ அன்றி புத்திமதி கூறும் உதவியாகவோ இருக்கலாம்.

இவ்வாறு, அவசியமான காலத்தில், உறவினருக்கோ அல்லது நொதுமலர்களுக்கோ மனிதாபிமான அடிப்படையில் நாம் செய்கின்றோம். அந்த உதவி சிறிதாயினும் தேவைப்படும் நேரத்தைப் பொறுத்து அது பெரியதாகக் கொள்ளப் படுகிறது. பெரிய உபகாரம் என்று சொல்லுகிறோம்.

இதற்கு, இலக்கியங் கண்ட கதைகள் பல உண்டு. இங்கு இராமாயணத்திலிருந்து, "காலத்தினாற் செய்த" ஒரு நன்றியை உதவியைக் கூறுவோம்.

இராமனும் இலக்குமணனும் சீதையுடன் போய் வனவாசம் செய்த பொழுது, இராமன், வனத்தில் வசிக்கின்ற முனிவர்களோடு பழகிக்கொண்டு, புண்ணிய தலங்களுக்கும் சென்று தரிசித்து மகிழ்ந்து இருந்தான்.

அக்காலத்தில் இலங்கையை ஆண்ட இராவணனின் தங்கை சூர்ப்பனகை, காடுகளில் செல்லும் பொழுது தற்செயலாக இராமலக்குவர் சீதை மூவரையும் பர்ண சாலையில் கண்டாள்.

இராமன் இருந்த இடத்திற்குச் சென்ற அரக்கர்குல மாது, தன்னை மணஞ்செய்து கொள்ளுமாறு அவனோடு வாதாடியது. அதனால் கோபங் கொண்ட இலக்குமணன், அந்தப் பெண்ணை வெளியே துரத்திவிட்டான்.

அந்தச் சூர்ப்பனகை, அண்ணன் இராவணனிடஞ் சென்று, சீதையின் அழகைப் பற்றிச் சொல்லி, அவனுக்கு ஆசையை உண்டாக்கியது. தனது நடத்தைபற்றி எதுவும் சொல்லவில்லை. இராவணன், தங்கை விபரித்த அழகான சீதையை, இராமலக்குமணர்களின் காவலைமீறி எவ்வாறு கவர்ந்து போகலாம் என்று மாரீசன் என்ற அரக்கனோடு திட்டம் போட்டான்.

தேவர்களுக்கும் ஏனையோருக்கும் செய்த கொடுமை களால், இராவணனை அழிப்பதற்கென்று அவதாரம் எடுத்த "விதியின் வழி" இங்கே ஆரம்பமாகிறது. மாரீசனின் எண்ணப்படி, மாரீசன், பர்ணசாலை இருக்கும் இடத்தின் அ்யலில் சென்று, ஓர் அழகிய மானாக உலாவி மேய்ந்து கொண்டிருந்தான். அதனைக் கண்ட சீதை, "தேன்பிடிக்குந் தண்துளாய்ச் செங்கண் கருமுகில்" ஆன தன் கணவனிடம், அம்மானைப் பிடித்துத்தரும்படி வேண்டினாள். செயற்கையான (மாய) மான் என உணர்ந்த இராமன், அதனைப் பிடிக்க விரும்பாமலிருக்கவும், சீதை வற்புறுத்தியதால், விதியின் வழியில் சென்று மானைப் பிடிக்க முயன்றான். மான் ஏமாற்றிக் கொண்டு தூரச் சென்றுவிட்டது. இராமன் கோப

மடைந்து அதனைக் கொல்ல அம்பை ஏவினான். அம்பு பட்டு இறக்குந்தருணத்தில் 'இலக்குமணா அபயம்' என்று குரலெழுப்பி மாரீசன் என்ற மான் இறந்தது.

அண்ணனுக்கு ஆபத்து வராது என்று இலக்குமணன் பலமுறை சொன்னபோதும், அண்ணி சீதையின் சுடுசொற் களால் வேதனையுற்ற இலக்குமணன், இராமனைத் தேடி ஓடினான்!

அண்ணன் தம்பி இருவரும் இல்லாத நேரத்தை உண்டாக்கிய இராவணன், பர்ணசாலையை அண்மித்து, இலக்குமணன் போட்ட காவற் கோட்டைத் தாண்டாமல் சாதுபோல நின்றான். அந்தச் சாதுவின் சூதறியாத சீதை, கோட்டுக்கு அப்பால் நின்ற இராவணனைக் கும்பிடப் போனாள்! இராவணன் கவர்ந்து சென்றான்!

சீதைக்கு என்ன நடந்தது என்று தெரியாது இராம லக்குமணர் வனத்தில் அலைந்தபோது, இலங்கை வேந்தன் கவர்ந்து சென்ற விஷயம் சடாயு என்ற கழுகு மூலம் தெரிந்து கொண்டனர்.

தொடர்ந்து வனத்தில் சென்றவர்களுக்கு, இராமாவ தாரத்தில் இராமனுக்குச் சிறந்த சீடனாக அமைய வேண்டிய அனுமனுடைய சந்திப்பு நிகழ்கிறது.

வாலி என்ற அரக்கர் தலைவனின் கொலைக் கரங்களிலிருந்து தப்பி, தனது மனைவியையும் அவனிடம் பறிகொடுத்து வந்த சுக்கிரீவனும் அனுமனுடன் நின்றான்.

இராமன் சீதையை இழந்த துன்பத்தோடு இருக்கிறான் என்பதும் வாலியிடம் தனது மனைவியைப் பறிகொடுத்துச்

சுக்கிரீவன் துன்பத்தோடு ரிசியசிருங்க மலைப் பகுதியில் வந்து மறைந்து வசிக்கிறான் என்பதும் இவர்களது உரையாடல் மூலம் பரஸ்பரம் அறிந்து கொள்கின்றனர்.

இராவணன் சீதையைச் சிறை வைத்திருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்துத் தருவோம்; அதற்கு ஈடாக, வாலியிடமிருந்து சுக்கிரீவனுடைய மனைவியை மீட்டுத்தர வேண்டுமென்று சொல்லின் செல்வனான அனுமன் இராமனிடம் கேட்டான்.

காலமறிந்து, சுக்கிரீவனும் அனுமனும் செய்யப் போகும் உதவிக்காக, இராமன் வாலியோடு சண்டை செய்து அவனைக் கொன்று சுக்கிரீவனுடைய மனைவியை மீட்டுக் கொடுத்தான்.

சுக்கிரீவனும் தான் கொடுத்த வக்குறுதியின்படி அனுமனை அனுப்பி, இலங்கையில் சிறையிருந்த சீதையைக் கண்டுபிடிக்கச் செய்தான். அவதார நோக்கத்தின் படி இராமன் இராவணனை அழித்துச் சீதையை மீட்டான்.

அவ்வாறு அவதார புருஷனான இராமனுக்கு அனுமனும் சுக்கிரீவனும் காலமறிந்து செய்த உதவி (நன்றி) சிறியதாய் இருப்பினும் பெரிய உதவியாகக் கொள்ளப் படுகிறது!

**காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.**

என்ற வள்ளுவன் சொல்லுக்கு இலக்கியமாக இதனைக் கொள்ளலாம்.

# உத்தமனாயிரு

**8. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.**

"மகாத்மா காந்தி" என்றும் "தேசபிதா" என்றும் அன்போடு மக்களால் இன்றுவரை அழைக்கப் பெறுபவர் பாரத தேசத்தவரான மோகனதாஸ் ஹரம்சந் காந்தி ஆவார். ஆயினும் அவர் வாழ்ந்த இறுதி நாள்வரை தன்னை ஒரு மகாத்மாவாக அழைப்பதை அவர் விரும்பினாரல்லர். தான் எல்லோரையும்போல ஒரு சாதாரண மனிதன் என்ற எண்ணத்துடன் இருந்தார்; நடைமுறையிலும் அப்படியே வாழ்ந்து காட்டினார்.

ஆனாலும், காந்தி, சிறந்த அரசியல் மேதையாகவும், மனித நேயம் மிக்க ஆளுமை உள்ளவராகவும், வரலாற்று சிறப்பு மிக்கவராகவும் உலகம் அவரை ஏற்றுக் கொண்டது.

தென்னாபிரிக்காவிலிருந்து சுதந்திர தாகங் கொண்டவ ராகக் காந்தி தாய்நாட்டுக்கு வந்தபோது, இங்குள்ள தலைவர்களிடையே சுதந்திர உணர்வு தோன்றியிருந்தது; அது பேச்சளவில் மாத்திரம் இருந்தது. அன்றைய ஆட்சியாளரான ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவை மீட்டெடுக்க வேண்டும் என்ற உணர்வை மக்களிடையே கொண்டு செல்வதற்கு மகாத்மா காந்தியே காரணமாக இருந்தார்.

1929ல் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் என்ற தீர்மானத்தை, மிக அவசரமாகக் காந்தியடிகள் கொண்டு வந்தார். இதற்கு ஜவகர்லால் நேரு தலைமை தாங்கினார்.

அன்று இதுபற்றி கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் காந்திஜீயிடம் விளக்கங் கேட்டபோது, "எனக்கும் இதுபற்றிய விளக்கந் தெரியவில்லை; வருங்காலம் ஒரே இருளாகவே தெரிகிறது" என்று பதிலளித்தார் என்று கூறப்படுகிறது. அதாவது, தன்னை ஒரு தீர்க்கதரிசியாகவோ ஞானியாகவோ அவர் எண்ணவில்லை.

விஷ்ணுவே இராமனாக அவதாரமெடுத்தார் என்று இதிகாசம் நமக்கு உணர்த்தினாலும், இராமன் தன்னை ஒரு அவதார புருஷன் என்று எந்த நிலையிலும் காட்ட வில்லை என்பதும் இராமன் சாதாரண மனிதனாகவே உணர்வு பூர்வமாக நடந்து கொண்டான் என்பதும் நாம் அறிந்ததே. ஆகவே, சிறந்த விஷ்ணு பக்தனான (வைணவனான) காந்தியடிகள் ஒரு அவதார மனிதனாக, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவராக ஏற்றுக்கொள்ளலாம் அல்லவா!

மகாத்மா காந்தியால் இந்தியா விடுதலை பெற்றவுடன், கீழைத்தேசத்தில் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்த நாடுகள் யாவும் சுதந்திரம் பெறுவதற்கு முயன்று வெற்றி பெற்றமை நாம் அறிந்ததே.

அன்று, தேசியத் தலைவர்களாகச் சிறப்புப் பெற்ற ஜவகர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், முகம்மது அலிஜின்னா, அம்பேத்கார், மவுண்பேட்டன் பிரபு போன்ற பல்வேறு குணாதிசயங்களைக் கொண்டிருந்தோர்களோ டெல்லாம் நட்புறவைக் கொண்டிருக்க ஏதுவான சமூகப் பண்பு, காந்தி ஒருவரிடமே குவிந்து கிடந்ததும் ஓர் அதிசயமேயாகும்.

இத்தகைய எளிமையான மனிதரிடம் அன்றைய முப்பது கோடி மக்களும் மதிப்புக் கொண்டிருந்தார்கள் என்பது வேறு எங்கும் எவரிடமும் காணமுடியாத ஓர் அம்சமாகும்.

மகாத்மா காந்தியைப் பின்பற்றி, ஆபிரிக்க விடுதலைப் போராட்டத்தில் சிறைசென்றவரான நெல்சன் மண்டேலா, தாம் சிறையில் இருந்த நாட்களில் தினமும் காந்தியைப் பற்றிய எண்ணத்துடனேயே இருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

இந்திய சுதந்திரம் கிடைத்த காலப்பகுதியில், இந்து - முஸ்லிம் கலவரம் ஏற்பட்ட பொழுது, காந்திஜிக்கு மக்களிடமிருந்து கொலை அச்சுறுத்தல் ஏற்பட்டது. அப்போது பிரார்த்தனைக் கூட்டத்துக்குத் தனியே சென்ற காந்திஜி, தனக்குப் பாதுகாப்பு வேண்டியதில்லை என்று கூறியே சென்றார்.

எதிர்பார்த்தபடி, விநாயக் கோட்சே என்ற இந்து வாலிபனே பிரார்த்தனைக்கெனச் சென்று கொண்டிருந்த காந்தியை கொலை செய்கிறான்.

அன்பு, அஹிம்சை, சத்தியம் என்பவற்றின் உறைவிடமான மகாத்மா காந்தியை, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மக்களுக்கும் தேசத்துக்கும் சேவையாற்றிய மனித நேயம் மிக்க மகாத்மா காந்தியை மக்கள் இன்றும் தெய்வமாகப் போற்றுதல் காண்போமாக.

## விருந்தோம்பும் பண்பு

**9. செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.**

***வி***ருந்தோம்பல் என்பது தமிழர்களின் தனிச்சிறப்பான பண்புகளில் ஒன்று. இந்த வகையில், பெரியபுராணங் கூறும் மெய்யடியார் பலரும் சிவனடியார்களை உபசரிப்பதைத் தமது வாழ்நாளில் முதன்மையாக்கி முத்தியடைந்திருக்கிறார்கள்.

இந்த வகையில், இளையான்குடி மாறன் நாயனார் என்பவருடைய விருந்தோம்பல் பற்றியும் அவர் சிவபெருமானின் திருவருள் பெற்றுச் சிவபதம் பெற்றமை பற்றியும் பார்ப்போம்.

இளையான்குடி என்னும் ஊரிலே மாறன் என்னும் செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவர் அறவழியில் பொருள் தேடுவார். அவரது சொந்த முயற்சி வேளாண்மை. செல்வச் செழிப்பு இருந்தாலும் செருக்கில்லாத உள்ளம் படைத்த மாறன், விருந்தினர்களை உபசரிப்பதில் பக்தியோடு ஈடுபட்டு வந்தார். அதனால் அவர் பெருங்குபேரனாக வாழ்ந்தார்.

விருந்தினர்களாக வரும் சிவனடியார்களுக்குப் பாத பூசை செய்து அறுசுவை உணவு வழங்குவதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். அடக்கமான செயற்பாட்டினை உலகறியச் செய்வதற்கு சிவபெருமான் திருவருள் நோக்கங் கொண்டார்.

இதற்காக, மாறனது வாழ்க்கையில் வறுமையைப் புகுத்தினார் இறைவன். ஆயினும் சிறிதும் மனந்தளராது தமது சக்திக்கேற்ப கடன்பட்டு விருந்தோம்பி வந்தார் மாறன்.

பின்பு கடன்படவும் முடியாத நிலை ஏற்பட்டது. அவ்வாறான ஒருநாள், குடும்பம் முழுவதும் பட்டினியால் உறங்கிக் கிடந்தது!

அன்று பார்த்து கதவு தட்டப்பட்டது! கதவைத் திறந்த போது, மழையில் நனைந்த கோலத்தில் சிவனடியார் ஒருவர் உள்ளே வந்தார்.

சிவனடியாரின் குளிரைப் போக்கி ஆசனத்தில் அமரச் செய்து மாறனார் அவருடைய பசிக்கு உணவளிப்பதெப்படி யெனத் தன் மனையாளுடன் யோசித்தார். கடன் படவும் வழி தெரியாமல் பட்டினி கிடந்த இல்லாள், அன்று பகல் வயலில் விதைத்த நெல் மணிகள் மழை வெள்ளத்தில் மிதந்து கிடப்பதை நினைத்தார்; அவற்றில் கொஞ்சம் வாரி அள்ளி வரும்படி கணவனை அனுப்பினாள். அதன்படி கணவன் கொண்டு வந்த நெல்லை வறுத்துக் குற்றி அரிசியாக்கிச் சமைத்து, கொல்லைப் புறத்தில் கிடைத்த இலைகளில் கறியும் செய்து முடித்தாள்.

பசியோடு உறங்கிக் கிடந்த சிவனடியாரை அழைத்து உண்ணச் செய்ய முடிந்ததே என்று மகிழ்ச்சி பொங்கச் சென்ற மாறனாருக்கு அதிர்ச்சியாய்ப் போனது. சிவனடியார் அங்கிருக்கவில்லை!

சிவனடியார் படுத்திருந்த இடத்தில் சோதிவடிவில் சிவன் தோன்றி காட்சி கொடுத்தார்!

“வறுமை நிலையிலும் மனந்தளராமல் அடியார்களுக்கு அமுது படைத்த மாறனே, நீ பழைய நிலையைப் பெற்றுச் சில்காலம் வாழ்ந்து மனையாளுடன் சிவனடி சேர்ந்து பேரின்பம் பெறுவாயாக” என்று திருவாய் மலர்ந்தருளிய சோதிவானவன் மறைந்தருளினான்.

**செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு.**

என்பது வள்ளுவன் வாக்கு.

இம்மையில், சிவனடியாரை உபசரித்தல் என்பது சிவனை மெய்யன்போடு வழிபடுவதற்குச் சமனாகும். அவ்வாறு சிவனடியார்களுக்கு நாம் விருந்து கொடுத்தால், மறுமையில் வானவர் எம்மை விருந்தினராக உபசரிக்கக் காத்துக் கொண்டிருப்பார்கள் என்ற சிவதத்துவத்தை வலியுறுத்துவதாக இக்குறளைத் தெய்வப்புலவர் பாடியுள்ளமை படித்துச் சுவைத்து இன்புறத்தக்கது.

## விதியை மாற்றிய வீரமுயற்சி

**10. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்.**

பழந்தமிழ் இலக்கியங்களிலே, கற்புடைய மகளிர் பற்றியும், மனுநீதி வழியில் நின்ற செங்கோல் மன்னர் பற்றியும் மெய்யடியார் பற்றியும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெரியோர் பற்றியும் ஆன செய்திகள் பல கூறப் பெற்றிருக்கின்றன.

இவர்களுள் விதியை மாற்றியமைத்த இருவர் பற்றியும் சொல்லப் பெற்றுள்ளது. ஒருவர் சாவித்திரி, மற்றவர் மார்க்கண்டேயர்.

சாவித்திரி தனது கணவன் சத்தியவானுடைய குறுகிய ஆயுளை, இயமனிடம் வரம்பெற்று நீடித்துக் கொண்டவர். மார்க்கண்டேயர், தனது பதினாறு வயது எல்லையை, இறைபக்தியினால் என்றும் பதினாறு என மாற்றியவர்.

சாவித்திரியின் "விதிக்கு விதிசெய்த" கதையைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சாவித்திரி, சத்தியவான் என்ற சிற்றரசன் ஒருவனை மணஞ்செய்ய விரும்பினாள். ஆனால், சத்தியவானுடைய ஆயுட்காலம் குறைவு எனச் சோதிடர் மூலம் அறிந்த அவளது தந்தையார், தன் மகளைச் சத்தியவானுக்கு மணஞ் செய்து கொடுக்க விரும்பவில்லை.

ஆயினும், சாவித்திரி தனது மனதை மாற்றிக் கொள்ளாத காரணத்தால், சத்தியவானை மணம்முடித்துக் கொடுத்தார் தந்தை. சத்தியவானுடன் உயிரொன்றாகக்

கலந்து வாழ்ந்து வந்தாள் சாவித்திரி. சிறிது காலஞ் செல்ல, அவனது குறைந்த ஆயுளை எண்ணியவளாய், சத்தியவான் செல்லுமிட மெல்லாம் தானும் சேர்ந்து செல்லத் தொடங்கினாள்.

பழைய கால அரசர்கள், தாம் விரும்பிய வேளை வேட்டையாட வனத்துக்குச் செல்வது வழக்கம். அவ்வேளை களிலும் சாவித்திரி அவனோடு தானும் சென்று வருவாள்.

ஒருநாள், வேட்டையாடிக் களைத்துப் போன தன் கணவனை மடிமீது வைத்துக் கவனித்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் சத்தியவான் நன்கு உறங்கிவிட்டான். ஆனால், அவன் உண்மையில் உறங்கவில்லை. உயிர் நீங்கிவிட்டான் என்பதை கற்பரசி சாவித்திரி தனது ஞானக் கண்ணால் கண்டாள்.

**உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு**

என்பது தெய்வப் புலவரின் திருவாக்கு அல்லவா.

உறங்குவது போலக் கிடந்த சத்தியவானின் உடலைக் கீழே கிடத்தினாள். தனது கணவனின் உயிரை மீட்டெடுக்கும் முயற்சியில் எழுந்தாள்!

எனது உயிருக்குயிரான எனது கணவனது உயிரைத் தந்துவிடுங்கள் என்று தருமராசனான இயமனை வேண்டி நின்றாள்.

"சத்தியவானது ஆயுள் முடிந்துவிட்டது, உயிரை எடுப்பது எனது தருமம்; அதனைத் திருப்பித் தருவது தருமமன்று; அது எனது கருமம் அன்று" தருமராசன் கூறினான்.

சாவித்திரியோ இயமதருமனைத் தொடர்ந்து போய், தனது கணவனது உயிரைத் தந்துவிடும்படி மீண்டும் மீண்டும் வேண்டி நின்றாள்.

இவளிடமிருந்து தப்பிச் செல்ல முடியாதெனக் கண்ட இயமன், தனது முடிவை மாற்ற முடியாதென்றும், வேறு வரம் ஏதாவது கேட்டால் தரலாம் என்றும் சொன்னான்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திய சாவித்திரி, தனக்குப் புத்திர பாக்கியம் தரும்படி கேட்டாள்.

"அப்படியே ஆகட்டும்" என்று வரம் நல்கிய இயமராசன் இனியொரு தடையுமில்லை எனச் சத்தியவானுடைய உயிரோடு புறப்பட்டான்.

ஆனால், அவனை இடைமறித்த சாவித்திரி, "கணவனை இழந்தபின், கற்புடை நங்கையர் தாய்மை அடைவார்களா?" எனக்கேட்டாள்

இதனால், தரும சங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்ட தருமராசன், சாவித்திரியின் பதிபக்தியையும் கற்பின் திண்மையையும் பாராட்டி சத்தியவானுடைய உயிரைத் திரும்பத் தந்துவிட்டுப் போனான்.

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**

**தாழாது உஞற்று பவர்.**

என்ற வள்ளுவன் காட்டிய இலக்கணத்துக்கு இலக்கிய மானாள் சாவித்திரி.

"...........உறங்கி விழிப்பது போல" எழுந்த தனது கணவனோடு அரண்மனை நோக்கிப் பயணமானாள் சாவித்திரி.

உறக்கத்தில், தான் ஒரு கெட்ட கனவு கண்டதாக மனைவிக்குச் சொல்லிக் கொண்டு போனான் சத்தியவான்!

# மக்களைக் காக்கும் மன்னன்

**11. குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு.**

'அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி' என்பார்கள். குடிமக்களின் குறைநிறை அறிந்து, முறைசெய்து செங்கோல் செலுத்தும் அரசன் வழியில் அவன் சொற் கேட்டு உலகமக்கள் இன்பமாக வாழ்வார்கள் என்பது திருவள்ளுவர் கூறும் நன்னெறி ஆகும்.

இதற்கு இலக்கியமாக செங்கோல் செலுத்திய அரசர்கள் பலருடைய வரலாற்றைப் பழைய இலக்கியங் களில் காணமுடிகிறது.

அவ்வாறு, முறைசெய்து ஆண்ட மன்னன் ஒருவனுடைய கதையை இங்கு தருகின்றேன்.

திருப்புத்தூரிலிருந்து ஒரு பிராமணன், தன் மனைவியோடு பாண்டிய நாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தான். காட்டு மார்க்கமாகச் சென்ற அவன், வழியில் ஓர் ஆலமர நிழலில் மனைவியை இருக்க வைத்துவிட்டு, அவளின் தாகத்துக்குத் தண்ணீர் தேடிச் சென்றான். களைப்புற்றிருந்த அப்பெண், மரநிழலின் குளிர்மையில் அயர்ந்து தூங்கிவிட்டாள். தென்றல் மெல்லென வீசிக்கொண்டிருந்தது.

அப்பொழுது, அவள் படுத்திருந்த இடத்துக்கு மேலே மரக் கிளையில் சிக்கியிருந்த ஓர் அம்பு, செங்குத்தாக அவளது உடல் மேல் விழுந்து குத்தி நின்றது. அவளது உயிர் பிரிந்தது!

நீர் தேடிச்சென்ற அவளது கணவன் திரும்பி வந்தான். மனைவி அம்பு பட்டு இறந்து கிடப்பதைக் கண்டான்.

சுற்றுமுற்றும் பார்த்த அவன் கண்களில் அயலிலே ஒரு வேடன் அம்பு வில்லுடன் நிற்பது தெரிந்தது. பிராமணன் வேடனை அணுகி, ஏன் என் மனைவியைக் கொன்றாய் எனக் கேட்டான். "வேட்டையாடிக் களைப்புற்ற நான், நிழலுக்காக இங்கு நிற்கிறேன், உங்கள் மனைவியை நான் கொன்றவன் அல்லன்" என்றான். "அம்பு பட்டு இறந்திருக்கும் என் மனைவியை, உன்னையன்றி வேறு யார் இங்கே கொன்றிருக்க முடியும்; நீ பொய் சொல்லுகிறாய்" என்று கூறிய பிராமணன், "நீ என்னுடன் வரவேண்டும்; அரசரிடம் முறையிடுவோம்" என்று கூறி, மனைவியின் உடலைச் சுமந்து கொண்டு, வேடனுடன் வேந்தவைக்குச் சென்றான்; வேந்தனிடம் முறையிட்டான்.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள்)**

அரசன் வேடனை விசாரித்தான். வேடன், "நான் கொல்லவும் இல்லை; கொன்றவனைக் கண்டதும் இல்லை" என்றான். "இவன்தான் அயலில் நின்றான்; இவனையன்றி வேறு யார் இவளைக் கொன்றிருக்க முடியும்" என்றான் பிராமணன்.

மனுநீதியின் முறை திறம்பா மன்னன் சிந்தனை செய்தான். "மனைவியின் ஈமக் கிரியைகளை முடித்து வா; இதன் உண்மையை அறிந்து முறைசெய் கின்றேன்" என்று ஒரு தொகைப் பணத்தையுங் கொடுத்துப்

பிராமணனை அனுப்பி வைத்தான்; வேடனைச் சிறையில் வைத்தான்; இறைவன் கோவிலில் சென்று முறையிட்டான் மன்னன்.

அன்றிரவு கனவில் தோன்றிய கடவுள், அவ்வூரில் நடக்கவிருக்கும் கல்யாண நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உணர்த்தியருளினார்.

அரசன், பிராமணனையும் அழைத்துக் கொண்டு போய் விவாக மண்டபத்தில் ஒரு பக்கத்தில் இருந்தான்.

திருமணக் கோலத்தில் மணமகனும் மணமகளும் மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

மணமகளின் ஆயுள் அன்றுடன் முடிவடைவது அங்குள்ள யாருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை.

இயமதூதுவர் அங்கு வந்திருப்பது அரசனுக்கும் பிராமணனுக்கும் உணர வைக்கிறார் இறைவன்.

“இவளது உயிரைக் கவர ஒரு சாட்டு வேண்டுமே” என்றான் ஒரு தூதன். அன்று அந்தப் பிராமணப் பெண்ணின் உயிர்கவர முன்னாளில் ஒரு வேடனால் எய்யப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்த அம்பு காரணமாகியதே அதுபோல, அயலில் கட்டப்பட்டு நிற்கின்ற பசுவைப் பயன்படுத்துவோம் என்று உபாயம் சொன்னான் மற்றவன்.

அப்பொழுது மங்கள வாத்திய முழக்கத்தில் வெருண்டு ஓடிய பசு ஒன்று, மணப்பெண்ணை முட்டிவிட்டுச் சென்றது.

படுகாயமடைந்த மணப்பெண் இறந்துவிட்டாள். மணவினை தடைப்பட்டது. மங்கல மண்டபம் அமங்கல மண்டபமாயிற்று.

ஒரு கணப்பொழுதில் இவ்வளவும் நடைபெற்று விட்டதை அரசனும் அந்தணனும் பிரத்தியட்சமாகக்

கண்டனர். தன் மனைவியின் இறப்புக்கு ஏழை வேடன் காரணன் அல்லன் என்பதை அந்தணன் உணர்ந்தான்.

வேடனிடம் மன்னிப்புக் கேட்டு விடுதலை செய்து பொருள் உதவியும் செய்து அனுப்பினான் மன்னன்.

வேறொரு பெண்ணை மணம்முடித்து வாழும் வண்ணம் பொருள் உதவிபுரிந்து முறைசெய்து அந்தணனையும் அனுப்பினான் அரசன். இவ்வாறு, அக்கால அரசரின் செங்கோன் முறைமை இருந்தது! இதனைத் தெய்வப்புலவர்,

**குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு.** என அழகாகப் பாடியுள்ளமை கண்டு இன்புறத்தக்கது. முறை செய்தல் எப்படியெனக் கூறும்போது,

**ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்து செய்வஃதே முறை.**

என்று வள்ளுவனார் வகுத்துள்ள இலக்கணம், இலக்கியங்களில் கண்ட பட்டறிவின் பயனாய் அமைந்திருப்பது காணலாம்.

சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாமை நின்று விளங்காதவற்றைப் பெரியோர்களுடன் ஆராய்ந்து செய்வதே - முறை செய்வதே - ஒரு முடிவுக்கு வருதலே செங்கோல் முறைமையாகும்.

பசுக் கன்றுக்காகத் தன் மகனைத் தேர்க்காலில் கிடத்திக் கொன்ற மனுநீதிச் சோழன் கதையும், துப்பறிவதற்காக அயலான் வீட்டுக் கதவைத் தட்டிக் குடியானவனிடம் குறைகேட்டு, பிராயச்சித்தமாகத் தன் கையை வெட்டிவிட்டு, பொற்கை அணிந்த புகழ் பெற்ற பொற்கைப் பாண்டியன் கதையும் குறைதீர்க்க முறை செய்த வரலாற்றைக் குறிப்பதும் காணலாம்.

## சூது தீமை தரும்

**12. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்**
**வறுமை தருவது ஒன்றில்.**

சூதும் வாதும் வேதனை செய்யும் என்பது பழமொழி. சூதாவடுவதைப் பொழுதுபோக்கிற்காகப் பலர் செய்கிறார்கள். அப்படி ஆரம்பித்தால், சூது அவர்களை விடாது பற்றிக் கொள்ளும்; அதிலிருந்து மீளமுடியாமல் சீரழிந்து போவார்கள்.

**சீலம் நற்தருமம் மெய் சிதைக்கும் தெண்டிரை**
**வேலை முற் றிருநிலக் கிழமை வீழ்த்திடும்**
**மால் உறுத்திடும் கவறாடல் மன்னகேள்**
**கோல் இழுக் கரசர்தம் கொள்கைத் தென்பவே.**

இப்பாடல், நளமகாராசன் சூதாடப் போகுந் தருணத்தில், அவனுடைய மந்திரிமார், சூதாட்டத்தால் வரக்கூடிய தீமைகள் சிலவற்றைக் கூறி அவனைத் தடுத்தமை பற்றிக் கூறுகின்றது.

சூதாட்டம், பாமர மக்கள் தொடக்கம் பாராளும் மன்னர்வரை பொழுதுபோக்குக்காகவும், குறுக்குவழியில் பொருளை அபகரிப்பதற்காகவும் ஆடப்பெற்று வந்திருப்பதை பழைய இலக்கியங்கள் மூலம் நாம் அறியக் கிடக்கின்றது.

பாரத கதையிலே, முக்கிய பங்காளிகளான பாண்டவர்-கௌரவர்களிடையே நிலவிய பகைமை காரணமாகத் தொடங்கிய சூதாட்டம் பாரதக் கதையை (பாரதப் போரை) உண்டாக்கியமை நாம் அறிந்ததே. இந்தச் சூதாட்டம் பற்றி ஆராய்வதே இங்கு எமது நோக்கம்.

பாண்டு மன்னனின் பிள்ளைகளான தருமன் முதலான ஐவருக்கும், பாண்டுவின் தமையன் திருதராட்டிரன் பிள்ளைகளான துரியோதனன் முதலிய நூற்றொருவருக்கும் இடையில் பகைமை ஏற்பட்டது.

பஞ்சபாண்டவர், வீரத்திலும் கலை அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து பெரியோர் மதிப்புடன் வாழ்ந்தவர்கள். துரியோதனன் முதலானோர் கெட்ட குணப்பண்பு உள்ளவர் களாய் பெரியோரை மதிக்காதவர்களாய் வாழ்ந்தார்கள். வயதில் மூத்தவன் என்ற தகுதி ஒன்றுடன் அரசனாகிவிட்ட துரியோதனன், சிறிய தந்தையின் மக்களான பாண்டவர் களுக்கு உரிமைகளைக் கொடுக்காமல், உபத்திரவங்களையே கொடுத்து வந்தான்.

திருதராட்டிரன், கட்புலன் இழந்தவனாக இருந்த படியால், உண்மை தெரியாது, துரியோதனனது துர்ப் புத்திக்கு இடங்கொடுப்பவராக இருந்து வந்தார். துரோணர், வீட்டுமர், விதுரர் முதலிய பெரியோர்கள், துரியோதனன் சபையிலே மந்திரிகளாயிருந்தாலும், பாண்டவர்களுடைய குணநலம், வீரதீரம், அறிவு முதலியவற்றைப் பற்றியே புகழ்ந்து பேசுவார்கள். கண்ணன் அவதார புருஷன் ஆனாலும், பாண்டவரின் பக்தி விசுவாசம் பராக்கிரமம் காரணமாக அவர்களிடம் நன்மதிப்புக் கொண்டு, நட்புரிமை யோடு பழகி வந்தமையும் துரியோதனனுக்கு வேப்பங் காயாகக் கசந்தது.

அதனால், பாண்டவருக்கு இழைத்த தீமைகள், அவர்களை மேலும் நல்லவர்களாக்கியதேயன்றித் துன்பத்தைத் தரவில்லை. ஆகவே, சூதாடி வென்று பாண்டவர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற எண்ணினான் துரியோதனன்.

துரியோதனன், தனது அரண்மனைக்கு விருந்துக்கு வரும்படி பாண்டவர்களை அழைத்தாலும் அவர்கள் இவனது துர்க்குணந் தெரிந்து வரமாட்டார்கள் என்பதால், தந்தை திருதராட்டினன் மூலம் பாண்டவரை விருந்துப சாரத்துக்கு வரவழைத்தான் துரியோதனன். தனது சூதாட்ட

எண்ணம் பற்றித் தந்தையிடம் எதுவும் பேசவில்லை. தந்தை கண்ணிழந்திருந்தாலும் செவிவழிச் செய்திகளால் பாண்டவர் மீது பற்றும் பாசமும் உள்ளவராய் இருந்தார். சூதாட்டத்தை விரும்பமாட்டார்.

துரியோதனனுக்குச் சகுனி என்று ஒரு மாமன் இருந்தார். அவர் மாயச் சூதாட்டத்தில் வல்லவர். அதனால் அவரது உதவியை நாடி, அவரை அழைத்திருந்தான்.

விருந்துபசாரம் முடிந்ததும், சகுனிதான் தருமரைச் சூதாட வரும்படி அழைத்தான். சகுனியிடம் சூதாட்டத்தில் பணயம் வைக்க ஏதும் இல்லை என்பதாலும் சூதாட விருப்ப மில்லையென்பதாலும் தருமன் உடன்படவில்லை.

ஆயினும், சகுனி விடுவதாயில்லை. ஒரு அரசன் சூதாட அழைப்பு விடுத்தால் அதை ஏற்பதுதான் அரசர் வழக்கம் என்று வாதாடிச் சூதாடத் தருமனைச் சம்மதிக்க வைத்துவிட்டான்.

அப்பொழுது, துரியோதனன் தன் திட்டம் பலித்தது என்று சந்தோஷப்பட்டு, சகுனியின் சூதாட்டத்துக்கு வேண்டிய பணயப் பொருளைத் தான் உதவுவதாக முன்வந்தான்.

தருமனுக்கு வெற்றிவாய்ப்பு வரவிடாமல் மாயச்சூதாடி நாடு நகரத்தையும் தம்பிமாரையும், தன்னையும் தருமன் இழக்கும்படி செய்துவிட்டான் சகுனி. தருமன், தன்னை இழந்தபின், பாஞ்சாலியைப் பணயம் வைக்கும் தகுதியை இழக்கிறான், பாஞ்சாலியின் உரிமையையும் இழக்கிறான்!

இந்த வாய்ப்பைத் தனக்குச் சாதகமாக்கி, பாஞ்சாலியை மானபங்கம் செய்யவும் பாண்டவரை மடக்கவும் திட்டம் போட்ட துரியன், பாஞ்சாலியை பலோற்காரமாகச் சபைக்கு அழைத்து, அவளைத் தன் தொடையில் வந்து அமரும்படி தொடையைத் தொட்டுக்காட்டிக் கேட்டான். பாஞ்சாலி மறுத்துரைத்தாள். தன்னைத் தருமன் தோற்கவில்லை என்று வாதாடி நின்றாள்.

பின்பு மானபங்கம் செய்யும்படி தம்பி துச்சாதனனிடம் ஏவினான். துச்சாதனன் துகிலுரிய முற்பட்டபோது, கண்ணனிடம் சரணம் என்று பாஞ்சாலி முறையிட்டாள். கண்ணன் காப்பாற்றினான். தனது தொடையில் வந்து அமரும்படி கேட்ட துரியோதனனுடைய தொடையிலிருந்து எடுத்த இரத்தம் பூசியபின்பே, குலைந்த இந்தக் கூந்தலை முடிப்பேன் என்று பாஞ்சாலி சபதஞ் செய்தாள். அதைத் தான் நிறைவேற்றுவதாக வீமன் பாஞ்சாலிக்கு உறுதி யளித்தான். இப்படிப் பாண்டவர் ஐவரும் துரியோதன னுக்கும் அவனது உடன்பிறப்புகளுக்கும் அழிவைத் தரும் பல சபதங்களைச் செய்து கொண்டு வனவாசம் புறப்பட்டனர்.

இவ்வாறு வீரபராக்கிரமமுள்ள பாண்டவரை மாயச் சூதினால் வென்ற அரவக் கொடியோனான கொடிய துரியோதனனுக்கும் இந்தச் சூது அழிவைத் தந்தது யாவரும் அறிவர்.

இதனைத் திருவள்ளுவர்,

**வேண்டற்க வென்றிடினும் சூதினை, வென்றதூஉம்**

**தூண்டிற் பொன் மீன்விழுங்கி யற்று.** என்று குறிப்பிடுவது உணரத்தக்கது. தூண்டிலில் குத்தப்பட்ட பொன்னை விழுங்கினாலும் மீனுக்கு உயிர்போகும்; சூதில் வென்றாலும் துரியோதனனுக்கு ஆபத்து நிச்சயம் என்ற உண்மைக்குச் சிறந்த உவமை நயக்கத்தக்கது!

சூதாடப் போன தருமனும் தம்பிமாரும் தமது வீர பராக்கிரமம் அத்தனையும் பயன்படாமற் போனது சூதினால் என்பதை உணர வைப்பது போல,

**சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்**

**வறுமை தருவது ஒன்றுஇல்.**

என்னும் குறள் அமைந்து இருத்தல் காண்க.

## தீமையற்ற சொல் – வாய்மை

**13. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.**

நன்மை தரக் கூடியதாக இருந்தால், ஒரு பொய்யைச் சொல்லலாம்; அது வாய்மையின் பாற்படும் என்று ஓரிடத்தில் கூறிய வள்ளுவனார், எத்தகைய தீமையும் இல்லாத ஒரு சொல்லைச் சொல்லுவதுதான் வாய்மை என்று பிறிதோரிடத்தில் கூறுகின்றார்.

நாங்கள் தீமையில்லையென்று எண்ணி ஒரு பொய்யைச் சொல்ல, கேட்பவன் அதனை எப்படி விளங்கிக் கொள்வான் என்பது எமக்குத் தெரியாது. மாறுபட்டு அவன் கருத்துக் கொண்டால் அது தீமைதானே! ஆனபடியால் எந்த வழியிலும் தீமைதராத ஒரு சொல்தான் வாய்மையாக இருக்கும் என்று பின்னர் விளக்கந்தந்துள்ளார்.

தீமை இல்லாத சொல் - அது பொய்யாக இருக்காது, ஆனால் அந்த நேரம் மறைக்கப்பட்டு வேறொரு உண்மையைக் கூறும் சொல்லாக இருக்கும்.

கேகய நாட்டுக்குச் சென்று, "தசரதன் இறந்தது பற்றிச் சொல்லாது வசிட்டமுனிவர் அழைக்கிறார்; அவசரமாக வா" என்று தூதுவன் கூறி பரதனை அயோத்திக்கு அழைத்து வருவதை, தீமை இல்லாத சொல் எனக் கூறலாம்.

கைகேயி கேட்ட வரத்தைக் கொடுத்த சத்தியவந்தனான தசரதன், புத்திரசோகத்தால் உயிர் நீத்தான். அப்பொழுது இராமனும் அயோத்தியில் இல்லை.

அரசனில்லாத நாட்டில் நீதி, நியாயம் இருக்காது; ஒழுக்கம் இருக்காது; நாகரிகம், பண்பாடு என்பனவும் கேள்விக்குறியாய் விடும், கோயில் விழாக்களும் இருக்காது!

அதனால், கேகய நாட்டுக்குச் சென்றிருந்த பரதன், உடனடியாக நாடு திரும்ப வேண்டும். பரதனுக்குக் கொஞ்சமும் பிடிக்காத அரசுரிமை பற்றியோ, இராமனின் வனவாசம் பற்றியோ, தசரதனின் மரணம் பற்றியோ எதுவும் தெரிவிக்காமல், அயோத்திக்கு அழைத்துவர வேண்டும் என்பது வசிட்டரின் அறிவுரை, தீமை இல்லாத சொல்லாக அமைகிறது.

அதற்காக, சற்றும் பதட்டப்படாத - அகத்தின் அழகை முகத்தில் காட்டாதபடி பேசக்கூடிய ஒற்றர்களைத் தெரிந்து, அதுவும் தூதுவர்கள் வழக்கமாக அணியும் சீருடையில் அனுப்புகிறார் வசிட்டமுனிவர். கேகய மன்னனுக்கும் இது தெரியக் கூடாதுதானே. அதனால் வழக்கமாக அங்கே அரசனிடம் செய்யும் உபசாரங்கள் மரியாதைகள் எல்லாம் நடைபெற வேண்டும். இங்கிருந்து கொண்டு செல்லும் பரிசுப்பொருட்கள், அங்கிருந்து பெற்றுவரும் பரிசுப் பொருட்கள் எல்லாம் வழமைபோல இருக்கவேண்டும் என்பதை முனிவர் அழுத்தமாகக் கூறி அனுப்பினார்.

இங்கே, பொய் சொல்லும்படி முனிவர் கூறவும் இல்லை; பொய்யான சொல்லோ செய்தியோ கூறும்படி சொல்லவும் இல்லை. உண்மையைச் சொல்ல வேண்டாம் என்று மாத்திரம் வற்புறுத்தப்படுவதைக் காணலாம்.

இதனால் யாருக்கும் எந்தவித தீமையும் ஏற்படாது என்பது தெளிவாகிறது. இதுதான் வாய்மை எனப்படுவது.

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**

**தீமை இலாத சொலல்.**

என்பது வள்ளுவரின் பொன்மொழி.

இவ்விடத்தில் மறைக்கப்பட்ட உண்மையான செய்தியைப் பரதன் அயோத்தியில் வந்து உணர்வான் என்பதும் உணர்ந்தான் என்பதும் நாம் அறிந்ததே. ஆனால், சாதாரணமாக, எவ்வித சலனமும் இல்லாமல் கேகய நாட்டி லிருக்கும் பரதனுக்கு, அங்கேயே வைத்து உண்மையைச் சொல்லிவிட்டால், பரதனுக்கு அங்கேயே மனக்குழப்பம் உண்டாகித் துன்பப்படுவான் என்பதும் கேகய நாடே குழப்பத்தில் மூழ்கும் என்பதும் நாம் விளங்கிக் கொள்வோமாக.

மேலும் தூதுவர் தம்நெஞ்சறிந்த உண்மையைக் கூறவில்லை; தம்நெஞ்சறியப் பொய்யுங் கூறவில்லை; தீமை இலாத இன்னொரு உண்மையைக் கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது.

## செய்ய இயலாதது இல்லை

**14. அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.**

முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்றும், முயற்சி திருவினை ஆக்கும் என்றும் பல பழமொழிகள் நம்மிடையே காணப் பெறுகின்றன. சிலவேளைகளில் ஒரு முயற்சியில் ஈடுபடுபவர்கள், அதில் தடங்கல் அல்லது இயலாமை கண்டு, இடையில் முயற்சியைக் கைவிட்டு விடுவார்கள். அப்படி விடாமல், விடாமுயற்சி செய்தால் எப்படியும் இறுதியில் குறித்த இலக்கை அடையலாம் என்பதற்கு பகீரதப் பிரயத்தனம் என்னும் தொடர் கையாளப் பெறுகிறது.

செயற்கரிய செயல் என்று நினைத்து ஒரு கருமத்தில் முடிவு கட்டிவிடக் கூடாது; முன்னேறி முயன்றால் பெருமை தரக்கூடிய பலன் கிடைக்கும் என்கிறது,

**அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.**

என்னும் குறள் வெண்பா.

இங்கே, பகீரதப் பிரயத்தனம் என்னும் தொடர் எப்படி வந்தது என்பதற்கு ஒரு கதை உண்டு; அதனை விளக்குவாம்;

பர்வதராசன் என்றும், மலையத்துவசன் என்றும் விளங்கிய இமவானுக்கும் மனைவி மனோரமைக்கும் பிறந்த பிள்ளைகள் கங்காதேவியும் உமாதேவியும் ஆவர்.

கங்காதேவியைத் தேவர்களின் விருப்பப்படி தேவலோகம் அனுப்பி வைத்தான் இமவான்.

இளையவளான உமாதேவி, சங்கரனை வேண்டித்

தவஞ் செய்தாள். சங்கரன் உமையை இடப்பாகத்தில் ஏற்றருளினார்.

அக்காலத்தில், அயோத்தியை ஆண்ட சகரன், அசுவமேதயாகம் செய்ய உத்தேசித்தான். சகரனுக்கு அசமஞ்சன் என்று ஒருமகன். அவன் கெட்ட குணமுள்ளவன் என்பதால் அவனை நாட்டைவிட்டுத் துரத்தினான் சகரன். ஆயினும் அசுமஞ்சனின் மகனான அம்சுமான், நல்ல குணசாலியாக, ஆற்றல் அறிவு உள்ளவனாக இருந்த காரணத்தால் அவனைக் குதிரைகளுக்குப் பாதுகாப்பாக நியமித்தான். இந்த யாகத்தைக் குழப்பும் நோக்கில், இந்திரன் குதிரைகளைக் கவர்ந்துபோய் பாதாள உலகில் மறைத்துவிட்டான்.

அந்தக் குதிரைகளைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி, சகரன் தனது இரண்டாம் மனைவி சுமதியின் அறுபதி னாயிரம் மக்களை உலகமெங்கும் அனுப்பி வைத்தான்.

ஈற்றில், பாதாள உலகில் குதிரைகளைக் கண்டனர். அவ்விடத்தில் கபிலமுனிவர் யோகநிலையில் இருந்தார். அவர்தான் குதிரைகளைக் கவர்ந்தார் என்று முனிவரோடு போர் செய்ய எண்ணியதால், அவரின் சாபத்திற்கு இலக்காகி அனைவரும் மாண்டனர்.

பின்பு, சகரன் தன் பேரனாகிய அம்சுவானை அனுப்பிக் குதிரைகளைத் தேடும்படி சொன்னான். அவன் வெற்றிகரமாகக் குதிரைகளை மீட்டு வந்தான். அத்துடன், கபிலமுனிவரின் சாபத்தால் சாம்பலாகிவிட்ட குமாரர் உய்தி பெறுவதற்கு தேவலோகம் போன கங்கை மீண்டும் பூவுலகம் வந்து, பாதாளம் போய் அச்சாம்பற் குவியலைக்

கரைக்க வேண்டுமென்ற கருடபகவானின் செய்தியையுங் கொண்டு வந்தான்.

குதிரைகள் கிடைத்தமையால், சகரன் யாகத்தைச் செய்து முடித்தான். ஆயினும், கங்கையைக் கொண்டு வருவதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கையில் இறந்து போனான். சகரனின் மகன் அம்சுமானும் அம்சுமானின் மகன் திலீபனும் இவ்வாறு கங்கையைப் பூமிக்குக் கொண்டு வர முயற்சித்து இறந்து போனார்கள்.

திலீபனின் மகன் பகீரதன், மக்கட் பேற்றுக்காகவும், முன்னோரின் நற்கதிக்காகவும், நீண்டகாலம் தவஞ்செய்து, தனக்குப் புத்திரப்பேறு கிடைக்கவும், கங்கை பூமிக்கும் பாதாளத்துக்கும் வந்து சாம்பல் மேட்டைக் கரைக்க வேண்டும் என்றும் பிரமாவிடம் வரங்கேட்டான். பிரமா புத்திரப் பேற்றினைக் கொடுத்தார். கங்கை பூமிக்கு வரவேண்டி சிவனைக் குறித்துத் தவம் செய்யும்படி கூறி மறைந்தார்.

பகீரதன் மனந்தளராமல் சிவனைக் குறித்துத் தவம் முயன்றான். உமாபதி அவன் தவத்துக்கு இரங்கியருளினார். அவ்வாறு கங்கை பூமிக்கு வரும்போது அவளைத் தான் சடையில் தங்கவைப்பேன் என்று கூறி மறைந்தார். ஆனால் பூமிக்கு வந்த கங்கையைச் சடாமுடியில் அகப்படுத்திய உமாபதி, கங்கை வெளியே வரமுடியாமல் செய்து கொண்டார். அதனால் பகீரதன் மேலும் தவஞ் செய்தான். அப்பொழுதும் ஏமாந்தான். மேலும் பலமுறை தவஞ்செய்து கொண்ட பகீரதனுக்கு இரங்கிய உமாபதி, கங்கையை மெதுவாக சரயு நதியில் விட்டார். அது பல கிளைகளாகப் பல திசைகளிலும் பாய்ந்தது. ஏழாவது கிளை நதி பகீரதனைப் பின்தொடர்ந்து சென்றது. வழியில் அந்த நதி

ஒரு முனிவரின் யாகபீடத்தை உடைத்துச் சென்றதால் அதனை வற்றும்படி செய்துவிட்டார் முனிவர்.

பகீரதன் கலங்கவில்லை, மேலும் தவஞ் செய்யும் போது இவனுடைய விடாமுயற்சியைக் கண்டு தேவர்களும் பகீரதனுக்காக முனிவரிடம் வேண்டினார்கள்.

ஈற்றில் முனிவர் ஆசமனம் செய்த நீரைக் காதின் வழியே வெளியேற்றினார்.

கங்கை கடலுடன் கலந்து பாதாளம் போய் சகர புத்திரர்களின் சாம்பரைக் கரைத்துச் சென்றது. அவர்கள் நற்கதி பெற்றனர்.

பகீரதனின் பிரயத்தனத்தால் பூமிக்கு வந்த கங்கையின் கிளை நதி பாகீரதி எனப் பெயர் பெற்றது.

பகீரதன் விடாமுயற்சியால் வெற்றி கொண்டமையைப் பகீரதப் பிரயத்தனம் எனச் சொல்லும் வழக்கம் ஏற்பட்டது.

திருவள்ளுவரும் விடாமுயற்சியை வலியுறுத்திப் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

**அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.**

என்பது அன்னார் குறள்களில் ஒன்று.

ஆதலால், நாம் ஒன்றை செய்ய இயலாது என்று முன் கூட்டியே நம்பிக்கை இழக்கக் கூடாது. தளர்வடையக் கூடாது.

**தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.**

# சினம் தன்னைக் கொள்ளும்

**15. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.**

ஒருவன் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். இதற்குப் புலனடக்கம் மிகவும் வேண்டப்படுகிறது. முக்கியமாகச் சினங்கொள்ளாமல் இருப்பது அவசியம். மனத்தின் திண்மையான நிலையையும் உடைத்துக் கொண்டு ஓங்கி நிற்கும் சினம் பொல்லாதது. அவ்வாறான சினம் யாரிடம் உண்டாகிறதோ அவரை அது அழித்துவிடும். நம்மைச் சினம் அழிக்கமுன் நாம் அதனை அடக்கிவிடுவது நல்லது. இதைத்தான் தெய்வப் புலவர்,

**தன்னைத் தான் காக்கிற் சினங் காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.** என்கிறார்.

இவ்வாறு ஒருவர் சினங்கொண்டு இன்னொருவர்மீது தாக்குதல் நடத்த முற்படுகிறார். ஆனால் அந்தச் சினம் அவருக்கே தீமையாய் முடிந்துவிடுகிறது. இஃது எப்படியென இராமாயணத்தின் மிதிலைக் காட்சிப் படலத்தில் நுழைவோம்.

மிதிலையில் இராமர் - சீதை கல்யாணம் முடிவுற்று எல்லோரும் அயோத்திக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் தசரதனும் அயோத்தியிலிருந்து வந்த பரிவாரங் களும் அடங்குவர்.

வழியிலே, பரசுராமன் அம்புவில்லு கோடாரிகளுடன் பயங்கர தோற்றத்தில் எதிர்ப்படுகிறான். இவன் பிராமணரான யமதக்கினி முனிவருடைய மகன். அந்த யமதக்கினி

முனிவரை ஒரு சத்திரிய மன்னன் முன்பு ஒரு காலம் கொன்றுவிட்டிருக்கிறான். அதனால், அவரது மகனான பரசுராமன், இது நாள்வரை பல சத்திரிய மன்னர்களைக் கொன்றுவிட்டிருக்கிறான். இந்தப் பழிதீர்க்கும் எண்ணம் இன்னும் நீங்காத கோபத்துடன் இவன் இவ்வாறு வழியில் எதிர்ப்படுகிறான்.

தனது சினத்தைச் சத்திரியனான தசரதராமனிடம் சாதிக்க முற்படுகிறான்.

சீதை கல்யாணத்துக்கு, இராமன் சிவதனுஜை வளைத்து முரித்த சம்பவத்தைக் கேள்விப்பட்டிருக்கிறான் பரசுராமன். அதனால் பொறாமையும் கோபமும் கொண்டு இராமனை வலிந்து போருக்கு இழுக்கிறான்.

இராமனை உயிராகக் கொண்டு வாழ்ந்து வரும் தசரதனுக்குப் பயம் உண்டாகிறது. அதனால் பரசுராமனுடன் பேசுகிறான். "பிராமணராகிய நீவிர் இது நாள்வரை ஏராளமான சத்திரியர்களைக் கொன்றபோதும் உமது பழி தீர்க்கும் எண்ணம் தணியவில்லையா? இப்போது, சிறுவனான எனது மகன் இராமனுடன் வலிந்து போர் புரிய முனைகின்றீர். இது தகாது. அன்றியும், இனிமேல் ஆயுதம் எடுப்பதில்லையென இந்திரனுக்குக் கொடுத்த வாக்கை மீறலாமா" என்று நயமாகவே கேட்கிறார் தசரதர்.

பரசுராமன் இதனால் சமாதானம் அடையவில்லை. "இராமனே, விசுவகர்மா செய்த இரண்டு விற்களில் ஒன்று சிவதனுசு. அதை நீ ஒடித்ததாகக் கேள்விப்பட்டேன். மற்றைய திருமாலின் விஷ்ணு தனுசை உன்னால் வளைத்து ஒடிக்க முடியுமா, பார். அப்படி நீ ஒடித்தால் உன்னோடு

நான் யுத்தம் செய்வேன்” என்று மிகுந்த செருக்கோடு கூறுகின்றான் பரசுராமன்.

இராமனோ, மிகுந்த அடக்கத்துடன், “உனது கோபம் என்னிடம் பலிக்காது; அம்பையும் வில்லையும் இப்படிக் கொடு” என்று அவற்றை வாங்கி, இலகுவாக வளைத்து நாண்பூட்டி அம்பைப் தொடுத்து, “பரசுராமா, இந்த அம்பு வீண்போகாது, இதன் இலக்கு என்ன சொல்” எனக் கேட்டு நிற்கிறான்.

இந்த அளவில் தசரதராமன் யார் என்பதைப் பரசுராமன் உணர்ந்து கொள்கிறான். பரசுராமனுடைய ஆணவம், அவதார சக்தி எல்லாம் நீங்கிய நிலையில், தனது தவப்பயன் முழுவதையும் விஷ்ணு தனுசுவுக்கு இரையாக்கி, தசரதராமனை வணங்கி விடை பெறுகிறான்.

தம்மின் வலியாரிடம் ஒருவனது சினம் பலிக்காது. அன்றியும் பரசுராமனுடைய சினம் அவனுக்கே தீமையாய் முடிகிறதையும் காண்கிறோம்.

ஆகவே,

**தன்னைத் தான் காக்கிற் சினங் காக்க; காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்.** என்பதனையும்

**செல்லா விடத்துச்சினந் தீது; செல்லிடத்தும்**
**இல் அதனிற் தீய பிற.** என்பதனையும்

வள்ளுவர் வழிநின்று உணர்ந்து கொள்வோமாக.

## நயவஞ்சகம்

**16. தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் ஒன்னார்**
**அழுத கண்ணீரும் அனைத்து.**

*ப*கைவர்களுடைய முகக்குறிப்பை உணரவல்லவர்க்கு, பகைவர் தொழுத கைகளுக்குள்ளும் அழுத கண்ணீருக்குள்ளும் படைக்கலம் மறைந்திருக்கும் என்பதனை அறிய முடியும். ஆனபடியால் பகைவர் நண்பினர்போல் வந்து தொழுதாலும் அழுது கண்ணீர் வடித்தாலும் அவர் குறிப்பை உணர்ந்து நம்மைக் காக்க வேண்டும்.

இனிப்புப் பண்டத்தைக் காட்டிச் சிறுவர்களை மயக்கி, அவர்களிடம் பொருள்களை அபகரிப்பது போலப் பெரியவர்களையும் ஏமாற்றும் நயவஞ்சகர்களிடத்தில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இதனை, மெய்ப்பொருள் நாயனார் பற்றிய புராணக் கதை ஒன்றின் மூலம் விளக்குவோம்.

சேதிநாதன் என்னும் ஓர் அரசன் மலாடதேசத்தை ஆண்டு வந்தான். சிறந்த வீரனாகத் திகழ்ந்த இவ் அரசன், மெய்ப்பொருள் நாயனார் என்று போற்றப்படும் அளவிற்குச் சிறந்த சிவபக்தனாகவும் விளங்கினான். அன்றியும் ஏனைய சிவனடியார்களுக்கு வேண்டும் பொருள்களை மெய்யன்போடு வழங்கவும் செய்தான்.

போர் செய்து வெல்லமுடியாத மெய்ப்பொருள் நாயனாரை நயவஞ்சகமாக வெல்ல நினைத்தான் முத்தநாதன் என்னும் ஓர் அரசன்.

ஒருநாள் இந்த முத்தநாதன், மெய்யடியார் போல விபூதி உருத்திராக்கம் அணிந்து சேதிநாதனுடைய அரண்மனைக்குச் சென்றான்.

அவனுடைய கையில் கூரிய வாளுடன் புத்தகம் போன்ற அமைப்புள்ள பெட்டி ஒன்று இருந்தது.

மெய்யடியார் போல, வெண்ணீறு உருத்திராக்கம் அணிந்து, புத்தகம் ஏந்திவந்த முத்தநாதனை, வாயிற் காவலர் உள்ளே செல்ல அனுமதித்தனர்.

அரசனோடு அப்பொழுது அரசியார் இருந்துள்ளார். “நான் அரசனோடு தனிமையில் பேச விரும்புகிறேன்” என்று முத்தநாதன் சொல்லவே, அரசனது குறிப்பை உணர்ந்து அரசியார் வெளியே சென்றார்.

இப்பொழுது அரசன் தனிமையில் இருந்தார். முத்தநாதன் புத்தகம் திறப்பதுபோல் பெட்டியைத் திறந்து வாளை எடுத்து இமைப்பொழுதில் சேதிநாதனை வெட்டினான்.

மெய்யடியார் போலத் தொழுது வணங்கிய கையின னாகச் சென்று, தன்னை வணங்கி வரவேற்ற மெய்ப் பொருள் நாயனாரை (சேதிநாதனை)க் கொலை செய்து விட்டான்.

மெய்ப்பொருளான இறைவனுடைய அடையாளமான வெண்ணீற்றைக் கண்டதும் அதில் அடங்கியிருந்த நயவஞ்சகத்தை மன்னன் உணரத் தவறிவிட்டான். ஆனால், பகைவனோ, அரசன் வெண்ணீற்றழகு கண்டால் வேறொன்றையும் உணரமாட்டான் என்பதை அறிந்திருந்தான்.

**தொழுத கையுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்**
**அழுத கண்ணீரும் அனைத்து.** என்றவாறு இந்தக் கதைக்குப் பொருத்தமான குறள் அமைத்த வள்ளுவனாரின் புலமை போற்றி மகிழத்தக்கதே.

நமது வாழ்க்கைப் பாதையில் இத்தகைய நயவஞ்சகர் களை இனங்கண்டு நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வதற்கு இக்குறள் நமக்குப் பாடம் புகட்டுகிறது என்பதை உணர்வோமாக.

# பொய்யும் வாய்மை ஆகலாம்

**17. பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்.**

***மெ***ய் என்ற யாம் கண்ட கருமங்களில், வாய்மையிலும் பார்க்கச் சிறந்ததாகக் கொள்ளக் கூடிய அறம் வேறொன்றும் இல்லை என்பது வள்ளுவர் வாக்கு.

**யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற.** என்பது குறள்.

ஆயினும், சில சந்தர்ப்பங்களில் - அந்தப் பொய்யினால் குறை இல்லாத நன்மை பயக்கக் கூடிய சந்தர்ப்பங்களில் பொய்யைக் கூறினாலும் அதை மெய்யின்பால் வைத்து எண்ணப் படலாம் என்கிறார் வள்ளுவனார்.

**பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த**

**நன்மை பயக்கும் எனின்.**

இத்தகைய சந்தர்ப்பங்கள் நம் தமிழ் இலக்கியங்களில் பல இருக்கின்றன. பாரதக் கதையிலிருந்து சில எடுத்துக் காட்டுகளை இங்கு பார்ப்போம்.

பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் (மறைந்து வாழ்தல்) செய்ய வேண்டிய காலத்தில் (13ஆம் வருடம்) விராடனது மத்ஸய தேசம் சென்றார்கள். அதற்காக, செல்லும் வழியிலே தம் பெயர்களையும் செய்யும் தொழில்களையும் மாற்றி வைத்துக் கொண்டார்கள். தருமன், கங்கன் என்ற பெயரில் அரச சபையில் பணியாளனாகவும், வீமன் வாலாலன் என்ற பெயரில் சமையற்காரனாகவும், அர்ச்சுனன், அந்தப்புரத்தில் நடனப் பெண்ணாகவும், (இதற்கு ஏற்கனவே ஊர்வசியால் பெற்ற சாபத்தைப் பயன்படுத்தினான்.

பிருகந்நளை என்று பெயர் சொன்னான்) நகுலன் தாமக்கிரந்தி என்று பெயர் சொல்லி, குதிரை மேய்ப்பவனாகவும், சகாதேவன் தந்திரீபாலன் என்ற பெயரோடு பசுக் கூட்டங்களை மேய்ப் போனாகவும், திரௌபதை சைரந்திரி என்ற பெயரோடு அந்தப்புர சேவகியாகவும் பொய்ப் பெயர்களோடு விராடனது அரண் மனையில் சேர்ந்து கொண்டார்கள். இந்தப் பொய் உரைகளால், துரியோதனனுடைய ஒற்றர்களால் வருந் துன்பங்களிலிருந்து விடுபட்டு வாழ்தல் என்பதுதான் முக்கியமான நன்மை. மற்றும் விராட மன்னனது சபையில் அந்தப்புரத்தில் அவர்கள் செய்த உதவியால் விராடன் பெற்ற நன்மை. இத்தகைய நன்மைகள் கிடைத்தபோது அதனால் பாண்டவர்களோ அன்றி விராடனோ துன்பம் அடைய வில்லை. பாண்டவர்களின் பொய்ம்மை குற்றமற்ற நன்மையைப் பயந்தது!

மேலும், பாரதப் போரின்போது, துரோணர் துரியோதனன் பக்கம் நின்று பிரம்மாஸ்திரத்தை ஏவினால் பாண்டவர் சேனைகள் யாவும் அழிந்து போகலாம். அதற்கு முன்பு துரோணரை வீழ்த்த வேண்டியது அவசியம் எனக் கிருஷ்ணன் யோசிக்கிறான்.

துரோணரின் மகன் அசுவத்தாமனிடம் துரோணருக்கும் பாசம் அதிகம். அவனுக்கு ஏதும் ஆபத்து என்றால் துரோணருக்கு மனக்குழப்பம் உண்டாகும். இதுவும் கிருஷ்ணனுக்குத் தெரியும்.

இது விஷயத்தை அர்ச்சுனனுக்கு கூறிய கிருஷ்ணன், "அர்ச்சுனா! யாராகிலும் துரோணரிடம்போய், அசுவத்தாமன் இறந்தான் என்று சொல்ல வேண்டும்; இது முக்கியம்" என்றான். அர்ச்சுனனுக்கு அதர்மவழி விருப்பமில்லை;

யோசிக்கிறான். தருமன் சிந்தித்தான். இதனால் வரும் நன்மைக்காக ஒரு பொய்யைச் சொல்லலாம் என்று முன்வந்தான். அந்த நேரம், வீமன் ஒரு யானையைக் கொன்றுவிட்டு, அசுவத்தா மனைக் கொன்றுவிட்டேன் என்று துரோணருக்குக் கேட்கும் படி சொன்னான். அந்த யானைக்கும் அசுவத்தாமன் என்று பெயர். துரோணருக்கு, அது தனது மகன் அசுவத்தாமனாய் இருக்குமோ என்று சந்தேகம் உண்டானது. பொய் உரை விரும்பாத தருமனிடம் இதுபற்றிக் கேட்டார். தருமன், அசுவத்தாமன் இறந்தது உண்மை என்றார். உடனே துரோணர் ஆயுதங்களைக் கீழே போட்டார். இதனைப் பயன்படுத்தி திட்டத்துய்மன் (பாஞ்சாலியின் அண்ணன்) தேர்த்தட்டில் ஏறித் துரோணரை வெட்டிச் சாய்த்தான்.

இந்த விஷயத்திலே பாண்டவ குல நன்மையைக் கருத்தில் கொண்டு தருமன் பொய் உரைத்தான்.

அன்றியும், சுக்கரீவனுடைய அண்ணன் வாலியை நேரே நின்று யாரும் வெல்லமுடியாது! அது அவன் பெற்ற வரம். ஆனால், வாலியைக் கொன்று உன் மனைவியை மீட்டுத் தருவேன் என்று இராமன் வாக்களித்துவிட்டான். அதனால் இராமன் வாலியை, மறைந்து நின்றாவது கொல்ல எண்ணினான்.

ஆகவே, பொய் சொல்லுவதை வள்ளுவர் விரும்ப வில்லை. அதனால் நன்மை பயக்குமெனக் கண்டால், அதற்காக ஒரு பொய்யைச் சொல்லலாம். அது வாய்மை யாகவே கொள்ளப்படும் என்கிறார். இதனை இன்னொரு குறள் மூலம் கோடிட்டுக் காட்டுவதையும் நாம் உணர்வோமாக.

**வாய்மை யெனப்படுவது யாதெனில் யாதொன்றும்**
**தீமை யிலாத சொலல்.** (குறள்)

# மகளிர் மாண்பு

**18. தெய்வந் தொழாள் கொழுநற் தொழுது எழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை.**

இல்வாழ்க்கையில் இணைந்த பெண்கள் பலர், கணவனே கண் கண்ட தெய்வமெனப் போற்றி வாழ்ந்த கற்புடைப் பெண்களாக இருந்தார்கள் என்று பழந்தமிழ் இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். அந்த வகையில் கண்ணகி என்ற கற்புடைய மங்கை பற்றிய சிலப்பதிகாரக் கதையைச் சுருக்கமாக இங்கு பார்ப்போம்.

காவிரிப்பூம்பட்டினம் என்றும், பூம்புகார் என்றும் புகார் என்றும் வழங்கி வந்த வளமான இந்த நகரிலே, மாநாய்கன் என்பான் செல்வச் செழிப்பு வாய்ந்த வணிகன். அவன் வறியவர்க்கு ஈந்து வான்புகழ் கொண்டவன்.

அவனுடைய ஓரே செல்வ மகள் கண்ணகி,

**"போதிலார் திருவினாள் புகழுடை வடிவு என்றும்**
**தீதிலா வடமீனின் திறம் இவள்திறம் என்றும்**
**மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்**
**காதலாள் பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ".**

எனப் போற்ற வாழ்ந்து வந்தாள்.

அக்காலத்தில், அவ்வூரிலே, மாசாத்துவான் என்னும் செல்வ வணிகனுக்குக் கோவலன் என்னும் மகன் ஒருவன் இருந்தான். அக்கோவலன்,

**"மண்தேய்த்த புகழினான்; மதிமுக மடவார்தம்**
**பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்**
**கண்டேத்தும் செவ்வேள் என்று இசைபோக்கிக் காதலாற்**
**கொண்டேத்தும் கிழமையான்...."**

ஆக வாழ்ந்திருந்தான்.

கோவலனுக்குப் பதினாறு வயதும், கண்ணகிக்குப் பன்னிரண்டு வயதும் நடக்கும்போது, பெற்றோர் நிச்சயித்த இருவருக்கும் மணவினை செய்து மகிழ்ந்தனர்.

மணமக்கள்,

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்**
**பண்பும் பயனும் அது.**

என்ற வள்ளுவர் நெறியில் வாழ்ந்து வந்தனர்.

**தற்காத்துக் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்**

என்னும் வள்ளுவர் இலக்கண நெறியில் நின்று, கணவனே கண்கண்ட தெய்வமெனக் கண்ணகி இல்லறத்தில் இனிது வாழ்ந்தாள்.

சில காலஞ் சென்றது. கோவலன் பொருள் தேடுவதன் பொருட்டு பிரிந்து பிற ஊர் சென்றான்.

அக்காலத்தில் ஒருநாள், அவ்வூரில் வாழ்ந்த ஆடல் நங்கை மாதவி என்பாளின் நடன அரங்கேற்றம் அரச சபையில் நடைபெற்றது. மாதவியின் ஆடல் பாடல்களில் மகிழ்ந்த மன்னன், அவளுக்குப் பரிசாக ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னை அளித்துக் கௌரவித்தான்.

இந்த வைபவத்தில் கலையில் வல்லவனான கோவலன், பார்வையாளனாகக் கலந்து கொண்டிருந்தான். மாதவியின் ஆடல் பாடல்களிலும் அழகிலும் மனதைப் பறிகொடுத்தான் கோவலன். மாதவி பரிசாகப் பெற்ற பொன் மாலையை விலை கொடுத்து வாங்குவோருக்கு மாதவி மாலை சூட்டி மணாளனாக ஏற்றுக்கொள்வாள் என்றவாறு மாதவியின் தாய் சித்திராபதி கூறினாள்.

மாதவிபால் விடுதல் அறியா விருப்பினன் ஆகி விட்டிருந்த கோவலனுக்கு இந்த அறிவிப்பு வாய்ப்பாக

இருந்தது! பொருள் தேடுவதை மறந்தான்; தீதிலாக் கற்புடைய கண்ணகியை மறந்தான். அந்த மாலையை அவ்வளவு விலை கொடுத்து வாங்கக் கூடியவர்களும் இல்லையென்ற நிலையில் கோவலன் மாலையை வாங்கினான். மாதவியோடு அவள் மனை புகுந்தான்.

இஃது அறிய வந்தபோது கண்ணகி,

**"மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்**
**கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்**
**திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்**
**செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்**
**பவள வாணுதல் திலகம் இழப்ப**
**மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்**
**கையறு நெஞ்சத்.....".** தவளாக வாழலானாள்.

மாதவியோடு கோவலன் வாழ்ந்தபோது, ஒருமுறை வழக்கம்போல இந்திர விழாவுக்கு காவிரியாற்றங் கரைக்கு இருவரும் சென்றார்கள். இருவரும் கலைஞர்களாகையால் ஆடியும் பாடியும் மகிழ்ந்தார்கள். அவ்வேளையில், கோவலன், கானல்வரிப் பாடல் ஒன்றைப் பாடினான். அப் பாடல், ஒரு பெண்ணை விரும்பிப் பாடுவதாக அமைந்திருந்தது. அதனால் மாதவி, தானும் ஒரு ஆடவனை விரும்புவதாகக் கருத்துள்ள ஒரு பாடலைப் பாடினாள். தான் கானல் வரி பாட, மாதவி இப்படிப் பாடுகிறாளே என்று சந்தேகங் கொண்டான் கோவலன். எப்படியும் "இவள் ஓர்ஆடல் மகள் தானே" என்று முடிவெடுத்த கோவலன், அந்த இடத்திலேயே அவளோடு ஒன்றுஞ் சொல்லிக் கொள்ளாமலே, மாதவியை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டான்.

சிலப்பதிகாரத்திலே, "ஊழ்வினை உருத்துவந்து

ஊட்டும்" என்று இனி நிகழவிருக்கும் கதை மாற்றத்திற்கு "கானல்வரி"ப் பாட்டே காரணமாகிறது.

மாதவி - கோவலன் பிரிவு இவ்வாறு நிகழ்ந்த காலத்தில், பூம்புகாரில் கண்ணகியைச் சந்தித்த தேவந்தி என்பாளிடம், கண்ணகி தான் கண்ட கனவு பற்றி இவ்வாறு சொன்னாள், "தான் தன் கணவனோடு வேறு ஊர் போவதாகவும், அங்கு தன் கணவனுக்குத் தீங்கு நேர்வதாகவும், அதனால், அவ்வூர் அரசனோடு வழக்குரைத்ததாகவும் அரசனுக்கும் அவ்வூருக்கும் தீமை வந்ததாகவும்" கூறினாள்.

அதற்குத் தேவந்தி, "இத்தீய கனவுக்குப் பிராயச்சித்த மாக, பல தலங்களுக்குஞ் சென்று கடவுளை வணங்கு மாறும், அதனால் கணவனுக்குத் தீங்கு நிகழாமல் தடுக்கலாமென்றும்" கூறினாள்.

அது கேட்ட கண்ணகி, "துறையாடித் தெய்வந் தொழுதல் எங்கள் இயல்பல்ல; அது குலமகளிருக்குரிய பண்பல்ல" என்று தெய்வந் தொழுதலை ஏற்க மறுத்தாள். இதனைப் போற்றுவது போலவே தெய்வப் புலவரும்,

**தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை.**

எனப் பாடியுள்ளமை நம் சிந்தனைக்குரியது.

கணவனையே கண்கண்ட தெய்வமாகக் கொண்ட கண்ணகி, தன் கற்பின் திறத்தால், கொலையுண்ட தன் கணவன் நிரபராதி என வழக்காடி வென்றதும், மறக் கற்பினால் மதுரையை எரித்ததும், தான் கொடுங் கோலனானமை உணர்ந்த அரசன் உயிர்நீத்ததும் ஆகிய நிகழ்வுகளைச் சிலப்பதிகாரம் என்னும் சிறந்த காவியம் மூலம் அறிகிறோம்.

## நா அடக்கம்

**19. யாகா வா ராயினும் நா காக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு.**

எமது உரையாடலுக்கு நா பிரதான இடம் வகிக்கின்றது. அதனால் நாம் சொல்லும் ஒவ்வொரு சொல்லும், பலமுறை யோசித்துச் சொல்ல வேண்டும் என்பதற்கு நாவைக் காக்க வேண்டும் என வள்ளுவர் கூறுகின்றார். அவ்வாறு, பயனற்ற சொற்களைச் சொல்வதனால் வரும் துன்பத்தை அனுபவிக்கப் போகிறவர் நாங்கள் தாமே என்பதனால், பின் விளைவை அறிந்து நா காக்க என்கிறார் தெய்வப் புலவர்.

நாம் சொன்ன சொல்லும் எய்த அம்பும் திரும்பி வரா என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி.

பயனற்ற சொல்லைச் சொன்னால் அதனைத் திரும்பப் பெறுதல் இயலாது; அதன் தீமையை அனுபவிப்பதும் தவறாது.

விளையாட்டுக்காகப் பொய் சொன்ன இடையன், அடைந்த தீமையை விளக்கும் கதை நாம் அறிந்ததே. ஓநாய்கள் வந்து ஆடுகளை கடித்துத் தின்பதாக ஒருநாள் விளையாட்டுக்காகச் சொன்னபோது அதனை உண்மையென நம்பி வந்து ஏமாந்துபோன அயலவர், பின்னர் உண்மையாகவே ஆடுகளை ஓநாய் பிடித்துக் கடித்து உண்டபோது, அந்தப் பக்கம் ஒருவரும் வரவேயில்லை. இது பொய் சொன்னதனால் வந்த வினை.

ஆகவே, நல்லது கெட்டது உணர்ந்து, பயனுள்ள

சொற்களை மாத்திரம் பேசுகின்ற நா அடக்கம் நமக்குத் தேவை. "வில் அம்பு பட்ட புண் வேதனை தராது; சொல்லம்பு பட்ட துன்பம் மாறாது" என ஒரு பாடல் உண்டு. திருவள்ளுவரும் இதனை,

**தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாது**
**நாவினாற் சுட்ட வடு.**

என்னும் குறள் மூலம் காட்டுகின்றார். தேவையற்ற, மற்றவர்கள் மனதைப் புண்படுத்தக் கூடிய வார்த்தைகளை நாம் பேசக் கூடாது. தீயினால் வந்த புண் ஆறிவிடும், ஆறாவிட்டாலும் மற்றவர்களுக்கு அதனால் துன்பம் இல்லை. ஆனால் நாவினால் (கூடாத வார்த்தைகளால்) ஒருவனது மனம் புண்படுமானால் அவன் மனதில் (மாறாது) எப்பொழுதும் நினைவில் நிற்கும். அதனால் நாவினால் சுட்டவருக்கும் சுடப்பட்டவருக்கும் பகை ஏற்படும். அதனால், நாம் பலமுறை சிந்தித்துப் பேசப் பழகிக்கொள்ள வேண்டும். சிந்திக்காமல், வாயில் வந்ததையெல்லாம் (வீண் வார்த்தைகள்) பேசக்கூடாது. இதனைத் தான், உண்பதற்காக மாத்திரம் வாயைத் திறக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். ஏன், வாய்திறந்தால் தானே நாவால் பேச முடியும்!

**பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதை, தன்**
**சொல்லாலே தன்னைத் துயர் படுக்கும் - நல்லாய்**
**மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்**
**நுணலும் தன் வாயால் கெடும்.**

என்ற பாடல் மூலம், தமது பொல்லாத சொல்லினால் துன்பப்படும் மனிதருக்கு, மணலுள் மறைந்து கிடக்கும்போது வீணே கத்தியதால் பாம்பிடம் அகப்பட்ட தவளை உவமான மாகக் கூறப்படுதல் காணலாம்.

மேலும், நாம் சாதாரணமாகப் பேசும் சொற்கள், பல வடிவத்தில் அர்த்தம் பெற்றுக் கேட்போரைச் சென்றடையும் இக்காலத்தில் நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். முக்கியமாகப் பலரும் கோபப்படும் வேளைகளில் நிதானமிழந்து கண்டதையும் பேசிவிட்டுப் பின்னர் தானும் துக்கப்படுவதன்றி மற்றவர்கள் பகையையுந் தேடிக் கொள்ளுகிறார்கள்.

அதனால் தான், தெய்வப் புலவர் திருவள்ளுவர் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே,

**யாகா வா ராயினும் நா காக்க காவாக் கால்**
**சோகாப்பார் சொல்லிழுக்குப் பட்டு.** என்று

நமது எல்லோருடையவும் நாவுக்குக் கட்டுப்பாடு வேண்டும் என இலக்கணம் வகுத்துள்ளார்.

மற்றவர்களுக்குத் தீமை எண்ணாதபோது தீய சொல்லும் நாவிலிருந்து வெளிவராது தானே! அதனால்,

**தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத் தொன்றும்**
**துன்னற்க தீவினைப் பால். (குறள் 209)**

# இயமனையும் வெல்லும் இறைபக்தி

**20. கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.**

எல்லாம் விதிவழியே நடைபெறும் என்று முயற்சி செய்யாமல் இருக்கக் கூடாது. 'முயற்சி திருவினை ஆக்கும்' என்பதற்கு இணங்க முயற்சி செய்தால், அதற்கு பலன் நிச்சியம் கிடைக்கும்.

இங்கே, முயற்சி செய்து மரணத்தையே வென்ற ஒரு நிகழ்ச்சி நமது சைவ புராணத்தில் கூறப்படுவதைப் பார்ப்போம்.

மிருகண்டு முனிவர் பிள்ளைப்பேறு இல்லாமல் அதிக காலம் கடவுளை வேண்டித் தவமிருந்தார். சிவபெருமான் ஒருநாள் அவருடைய கனவிலே தோன்றி, அன்பனே, உனக்கு பூரண ஆயுளும் துர்க்குணமும் உடைய ஒரு புதல்வன் வேண்டுமா அல்லது பதினாறு வயது வரைக்கும் வாழக் கூடிய சற்புத்திரன் ஒருவன் வேண்டுமா என்று கேட்டார். முனிவர் சிறிது யோசித்துவிட்டு, வயது பதினாறு ஆயினும் கவலையில்லை, சற்புத்திரனையே தாருங்கள் என்று கேட்டார். இறைவனும் அவ்வாறே வரங் கொடுத்தார்.

சில காலஞ் செல்ல முனிவருக்கு ஒரு மகன் கிடைத்தார். அப்பிள்ளைக்கு மார்க்கண்டேயர் எனப் பெயர் சூட்டி வளர்த்து வந்தார். சீருஞ்சிறப்புமாக வளர்ந்து வரும் மார்க்கண்டேயர், பல கலைகளையும் கற்று வல்லவராகவும் விளங்கினார். ஆயினும், பிள்ளையின் சிறப்பினால் இன்பங் கொள்ள வேண்டிய பெற்றோர், அதன் பிறப்பின் தன்மையால்

கவலையுடன் காணப்பட்டனர். மார்க்கண்டேயர் வளர்ந்துவிட்ட வேளையில் பெற்றோரின் இந்தக் கவலை முகத்தை உணர்ந்து விட்டார், விசாரித்தார். உண்மையைப் பெற்றோர் கூறிவிட்டனர்.

உண்மையைத் தெரிந்து கொண்ட மார்க்கண்டேயர், பெற்றோரைத் தேற்றினார். நான் விதியையும் வெல்லுவேன், கவலை வேண்டாமென்று கூறித் தீவிரமான சிவபூசையில் ஈடுபடலானார். ஆலயத்தில் ஒரு இடத்தில் இலிங்கம் வைத்து முறைப்படி பூசனைசெய்து வந்தார். நாட்கள் கழிந்து மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி, மார்க் கண்டற்குப் பதினாறு வயது அண்மித்தது. என்ன நடக்குமோ என்று தெரியாது பெற்றோரும் கோயிலில் தவங் கிடந்தனர்.

இயமனுக்குத் தருமராசன் என்று பெயர். பதினாறு வயது முடிவுற்ற மார்க்கண்டேயரது உயிரை எடுப்பதற்குத் தூதுவரை அனுப்பினான் தருமராசன். இறையருளை வேண்டி நிற்கும் மார்க்கண்டேயருக்கு இயம தூதுவர் வந்தமை தெரியும். அதனால் அவர் இறை தியானத்தில் மூழ்கிப் பயமின்றியிருந்தார். தூதுவர் திரும்பிச் சென்று கூற்றுவனிடம் கூறினார்கள். கூற்றுவன் நேரில் வந்து பாசக் கயிற்றை வீசினான். தன்னைக் கூற்றுவன் மதிக்கவில்லை என்பதாலும் மார்க்கண்டன் தனது பக்தன் என்பதாலும் இறைவன் கூற்றுவனைத் தடுத்து, மார்க்கண்டரை ஆட்கொண்டார்.

**அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத**

**அவனைக் காப்பது காரணமாக**

**வந்த காலன்றன் ஆருயிர் அதனை**

**வல்வினாய்க்கு உன்றன் வண்மை கண்டு அடியேன்**

**எந்தை நீ எனை நமன்றமர் நலியின்**

**இவன் மற்று என் அடியானென விலக்கும்**

**சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்**

**செழும் பொழிற் திருப்புன்கூர் உளானே.**

என்ற தேவாரத்தில் மார்க்கண்டேயருக்காக யமனது உயிரைப் பறித்த இறைவன் செயல் கூறப்பெற்றுள்ளதை நாம் அறியலாம்.

இவ்வாறு, மார்க்கண்டேயர் இறையருளைக் கொண்டு என்றும் பதினாறு வயதாக இருக்கும் வரம்பெற்று மரணத்தை வென்றார் என்பதை நாம் அறியலாம்.

**கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**

**ஆற்றல் தலைப்பட் டவர்க்கு**

என வள்ளுவனார் கூறியுள்ளமை காணலாம்.

இயமதர்மன் இல்லாவிட்டால், உயிர்களின் பெருக்கமும் மரணமில்லா வாழ்வும் இடம்பெற்றால் காத்தற் கடவுளுக்கு வேலைப்பளு அதிகரிக்கும் என்று தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டதனால் இறந்த இயமனைச் சிவபெருமான் உயிர்பெற்றெழவும் தொடர்ந்து தன் வேலையைச் செய்யவும் அருள் செய்தார் என்பது புராணம்.

## ஆபத்தில் உதவும் நட்பு

**21. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.**

ஒருவனது ஆடை, பலர் முன் குலையும்போது, அவனது மானத்தைக் காக்கும் முகமாக, அவனது கையானது அவன் மனதையும் முந்திக் கொண்டு உதவுகிறது. அதுபோல, தன்னிடம் நட்பாக இருக்கும் ஒருவனுக்கு, அவன் துன்பப்படும்போது என்ன உதவி செய்ய வேண்டுமோ அதனைச் செய்து துன்பத்திலிருந்து மீட்டெடுக்க வேண்டியது உண்மை நட்புப் பூண்டாரது பண்பாகும்.

இராம காவியத்திலே இராமலக்குமணர்களுக்கு அனுமனும் சுக்கிரீவனும் நட்பின் திறத்தால் உதவி செய்தமை பற்றி இங்கு விளக்கிக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

வனவாச காலத்தில், பர்ணசாலையில் சீதை தனித்திருக்க, மாயமான் பின்னே சென்ற இராமனும் இலக்குமணனும் திரும்பி வந்து பார்த்தபோது சீதை அங்கில்லை. அழுது புலம்பிக் கொண்டு காட்டிலே சீதையைத் தேடி அலைந்த பொழுது, குற்றுயிராகக் கிடந்த சடாயு, இராணவன் சீதையைச் தூக்கிக் கொண்டு வான்வழியே இலங்கைக்குச் சென்ற கதையைக் கூறிவிட்டு உயிர் துறக்கிறது.

தந்தைக்கு ஈமக்கடன் செய்யும் வாய்ப்பை இழந்திருந்த இவர்கள், சடாயுவுக்கு ஈமக்கடன் செய்து ஆறுதல் கொள்ளு கிறார்கள்.

தொடர்ந்து, சீதையைத் தேடிச் செல்லுகையில்

கபந்தன் என்ற ஒரு அரக்கனின் பிடியில் இவர்கள் அகப்பட்டுக் கொள்ளுகிறார்கள். அவனிடமிருந்து தப்புவதற்காக, அவனது இரு கைகளையும் வெட்டிவிடுகிறார்கள். அவனது உடலைத் தகனஞ் செய்தபோது, அவ்வரக்கன் சாப விமோசனம் பெறுகிறான். அப்பொழுது அவன், நீங்கள் விரைவில் சீதையை அடைவீர்கள் என்றும், அதற்காக ரிச்யமுக மலையில் மறைந்து வாழும் சுக்கிரீவனுடைய நட்பைப் பெறுங்கள் என்றும் கூறி மறைகிறான்.

பின்னர், சபரி என்கின்ற சந்நியாசி அம்மையாரைச் சந்திக்கிறார்கள். அந்த அம்மையாருக்கு இராமாவதாரம் பற்றித் தெரிந்திருந்தது. அவள் இராமலக்குமணர்களை உபசரித்தாள்.

பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனே இந்த இராம அவதாரம் எடுத்தவர், பரந்தாமனுக்குப் படுக்கப் பாயாகவும் தெப்பமாகவும் குடையாகவும் இருந்து பாதுகாத்த ஆதிசேஷனே இந்த இலக்குமண அவதாரம்.

ஆகவே, ரிச்யமுக மலையில் தேடுதல் செய்யும் போது, இவர்களது தோற்றத்தைக் கொண்டு, இவர்கள் தமக்கு இடையூறு செய்யக் கூடிய வாலியின் ஒற்றர்கள் அல்லர் எனத் தெளிந்த சொல்லின் செல்வனான அனுமன், தானாகவே இராமலக்குமணர்களைச் சென்றணைந்து தங்களை அறிமுகஞ் செய்கிறான்.

இராமாவதாரத்தில் அனுமன் இராமனுக்குப் பக்தி செய்யவும் பணிவிடை செய்யவும் வேண்டிய சங்கற்பம் இவ்வாறுதான் அமைகிறது.

சீதையை இழந்து தேடும் நிலையில், துன்பப்படும்

நிலையில் இராமனும், வாலியால் துரத்தப்பட்டு, மனைவியையும் பறிகொடுத்து துன்பப்படும் நிலையில் சுக்கிரீவனும் இருக்கிறார்கள். அதனால், ஒத்த உணர்வினையுடையவர்களான இருதிறத்தாரும் இந்த நட்பின் உரிமையால் ஒருவருக்கொருவர் உதவி செய்வதாக உறுதி செய்கிறார்கள்.

**புணர்ச்சி பழகுதல் வேண்டாம்; உணர்ச்சிதான்**
**நட்பாங் கிழமை தரும்.** என்பது வள்ளுவர் வாக்கு.

அந்த நட்பு, "நகுதற் பொருட்டன்று". அந்த நட்பு இடுக்கண் களைவதாக இங்கே செயற்படுகிறது.

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.** என்கிறார் வள்ளுவர்.

இன்பத்தில் பங்கு கொள்ளாவிடினும் துன்பத்தில் தூர நில்லாமல் உதவுவது நட்பு. அதிலும், மனையாளை மாற்றான் கொள்ள, அதனால் வருகின்ற அவமானமும், உடனடியாக, குலைந்த உடுப்பை கைசென்று பிடித்து மானத்தைக் காப்பாற்றுவதுபோலச் செய்ய வேண்டிய தேவையும் இங்கே இருபாலாருக்கும் ஏற்பட்டிருப்பதை நாம் உணர்வோமாக.

அதன் பிரகாரம், வாலியை மறைந்து நின்றாவது கொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டாலும் இராமன் தன் வாக்குறுதியை நிறைவேற்றுகிறான். சீதையை அனுமன் தேடிக் கண்டுபிடிக்க, இராமன் இராவணனோடு யுத்தஞ் செய்து அவளை மீட்டெடுக்கிறான்.

# பகுத்துண்டு வாழ்தல்

**22. பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல் நுலோர்**
**தொகுத்த வற்றுள் எல்லாம் தலை.**

நாம் நமக்குக் கிடைக்கும் உணவை உடனிருப்பவர் கட்கும் இல்லையென்று இரப்போர்க்கும் பங்கிட்டுக் கொடுத்து தாமும் உண்டு மகிழ்தல், பெரியோர் வகுத்த நல்லறங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததாக, தலையானதாக இருக்கும் என்பது இக்குறள் தரும் பொருளாகும்.

பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்பும் குணவியல்பு படைத்த கதாபாத்திரங்கள் பலவற்றை நம் தமிழ் இலக்கியங் களில் பரக்கக் காணலாம்.

அதியமான் நெடுமான் அஞ்சி என்ற மன்னனும் ஔவையாரும் மனமொருமித்த நண்பர்களாயிருந்தனர். ஔவையாரின் தமிழ்ப் புலமை கண்டு, தமிழ்மேல் கொண்ட பற்றினால் ஔவையார் மீது அதியமான் அன்புகொண்ட அதே நேரம், அதியமானின் செங்கோன்மை கண்டு அவன்மீது ஔவையார் மட்டற்ற மதிப்பு வைத்திருந்தார்.

ஒருமுறை, அதியமானுக்கு ஒரு அதிசய நெல்லிக் கனி கிடைத்தது. பன்னிரண்டு வருசத்துக்கொருமுறை காய்த்துப் பழுக்கும் அந்த நெல்லிக்கனியை உண்பவர்கள் அநேக காலம் உயிர் வாழலாம் என்று ஒரு நம்பிக்கை இருந்தது. தங்கள் அரசன் அதனை உண்டு நீண்டகாலம் உயிர் வாழட்டும் என்று மக்கள் விரும்பி அரசனுக்கு அளித்தனர்.

ஆனால், அக்கனியைப் பெற்ற மன்னன் அதியமான், தான் அதனை உண்பதிலும் பார்க்க, ஔவையார் உண்பாரானால், அவர் நீண்டகாலம் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்வார் என எண்ணி, ஔவையாரின் வரவை எதிர்பார்த்திருந்து, அவருக்குக் கொடுத்து உண்ணச் செய்து அகம் மகிழ்ந்தான்.

அதுபோலவே, வேறு சுவையான தீன்பண்டங்கள் கிடைத்தாலும் ஔவையாரோடு பகிர்ந்துண்ணும் பழக்கம் உடையவனாக இருந்தான். அதியமான் இறந்தபோது ஔவையார் பாடிய இரங்கற்பா மூலம் இதனை அறிய முடிகிறது.

**"சிறிய கள் பெறினே எமக்கீயும் மன்னே!**
**பெரிய கள் பெறினே**
**யாம் பாடத் தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே!**
**சிறு சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே**
**பெருஞ்சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே**
**என்பொடு தடிபடும் வழியெலாம் எமக்கீயும் மன்னே**
**அம்பொடு வேல்நுழை வழியெலாம் தான்நிற்கும் மன்னே**
**நரந்த நாறும் தன் கையால்**
**புலவு நாறும் என்தலை தைவரும் மன்னே!".** (புறம் 235)

என்பது ஔவையார் பாடல்.

சிறிதளவு கள்(தேன்) கிடைத்தால் முழுவதையும் எனக்குத் தருவான். பெரிய அளவில் கிடைத்தால் அதில் தானும் பங்கு கொள்வான். சோறு கிடைத்தாலும் எல்லோருடனும் பகிர்ந்து உண்பான். ஆனால் போர்க்களத்தில்

மாத்திரம் தான் தனித்து நிற்பான் எனக்கூறிய ஔவையார், ஒருமுறை அவனது முரசு கட்டிலில் தான் கிடந்து உறங்கிய வேளையில், அங்கே வந்த அதியமான் தன் தலையை வருடிக் கொடுத்தமையையும் நினைவு கூர்வதை இங்கு கண்டு இன்புறலாம்.

மேலும், இனி அறிவுடையாரை மதித்து ஈவாரும் இல்லை, அதனால் பாடுவாரும் இல்லை என்று ஆகும். பிறரால் சூடப்பெறாது வீணே வாடிவிழும் மலர்கள்போல, பிறருக்கொன்று ஈயாது மாய்ந்து போகும் உயிர்களே இனி மிகுதியாய் இருக்கும் என்றும் கழிவிரக்கம் கொள்கிறார் ஔவையார்.

ஆயினும், "பசுங்கதிர்த் திங்கள் அன்ன வெண்குடை, ஒள்ஞாயிறு அன்னோன்" ஆய அதியமான் புகழ் மாயலவே என்று தம்மை ஆதரித்த அதியமானைப் பாடுகின்றார்.

**நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடையாளர் தொடர்பு.**

## நட்புக்கேற்றது ஒத்த உணர்வு

**23. புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.**

ஒருவரோடு ஒருவர் நட்புக் கொள்வதற்கு முக்கியமாக மூன்று காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒரு ஊரவர் களாய் அல்லது ஒரு தேசத்தவர்களாய் இருத்தல் ஒன்று. பலகாலங்கள் கூடிப் பழகுதல் மற்றொன்று. இவ்விரண்டு மில்லாமல் ஒத்த உணர்ச்சியினால் நட்பாகுதல் மூன்றாவது. இம்மூன்றினுள், உணர்ச்சி ஒத்து இருப்பதனால் வரும் நட்பே சிறந்தது என்பதனை மேற்கூறிய குறள் நமக்குப் புலப்படுத்தி நிற்கிறது.

இந்தவகையில், இராமலக்குமணர்களுக்கும் அனுமான் சுக்கிரீவர்களுக்கும் இடையில் உண்டான ஒத்த உணர்ச்சி நட்பை வேறொரு கட்டுரையிற் கண்டோம். இங்கே, கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் இடையில் தோன்றிய நட்பைப் பற்றிப் பார்ப்போம்.

அறிவும் ஆற்றலும் நிரம்பப் பெற்ற கோப்பெருஞ் சோழன், ஏனைய அறிஞர்களையும் சான்றோர்களையும் மதித்துப் பேணத் தவறுவதில்லை. அதனால், புலவர்கள் பலரும் அவனது அவைக்கு அடிக்கடி வருகைதந்து அளவளாவிப் பரிசில் பெற்றுப் போவர். இத்தகைய புலவர்களில், பிசிராந்தையார், எயிற்றியனார், பூதந்தனார், நத்தத்தனார், பொத்தியார் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களுள் பிசிராந்தையார் என்பவர் முதன்மையானவர்.

பிசிர் என்னும் ஊரில் பிறந்த இவருக்கு ஆந்தையார் என்ற பெயர் உண்டு. மேலே காட்டிய மற்றைய புலவர்கள் அரசனுடைய ஊருக்கு அண்மையில் வாழ்ந்தவர்கள். பிசிர் என்ற ஊர் மிகத்தொலைவில் இருந்தமையால், அடிக்கடி அரசனைச் சந்திக்கும் வாய்ப்பைப் பிசிரந்தையார் பெற்றிருக்க வில்லை. ஆயினும், அரசனுக்கும் ஆந்தையாருக்கும் உயிரும் உடம்பும் போன்ற நட்பு ஏற்பட்டிருந்தது.

**புணர்ச்சி பழுகுதல் வேண்டா உணர்ச்சிதான்**

**நட்பாங் கிழமை தரும்.**

என்ற வள்ளுவனார் குறளுக்கேற்ப, பழக்கம் அதிகமில்லாத போதும் அவர்களது நட்பு, ஆழமாக வேரூன்றி இருந்தது.

ஒருவரையொருவர் நேரிற் காணாமலே, கேள்வி மாத்திரையால் ஒன்றுபட்ட அப்பூதியடிகளும் அப்பர் சுவாமிகளும் போல, பிசிராந்தையார், கோப்பெருஞ் சோழனிடம் மதிப்பு வைத்து நட்புப் பாராட்டி வாழ்ந்து வந்தார்.

தனது பிள்ளைகளின் மாறுபட்ட மனத்தால், மனம் உடைந்து மானமிழந்தபின் வாழக் கூடாது என்று வடக்கிருந்து உயிர்விடத் தீர்மானித்தான் கோப்பெருஞ் சோழன். அந்நேரத்திலும் பிசிராந்தையாரைப் பற்றிய எண்ணம் அரசனுடைய நெஞ்சில் இருந்தது. "நான் செல்வ முற்றிருந்த வேளை வராவிட்டாலும் இன்று துன்பப்படும் வேளையில் வராமல் இருக்கமாட்டார் என்ற சிந்தனையில் அரசன் இருந்தான். நட்புத் திரிதல் என்பதை நினையார்; தன் பெயர் கோப்பெருஞ் சோழன் என்றே சொல்லுவார்; அவர் நிச்சயம் இங்கு வருவார்; அவருக்கு ஓர் ஆசனம்

போட்டு வையுங்கள்" என்று கோப்பெருஞ் சோழன் தனது இறுதி மூச்சு உள்ளவரை சொல்லிக் கொண்டே இருந்தான்.

இவ்வாறு சோழன் வடக்கிருக்குஞ் செய்தியை அறியாத பிசிராந்தையார், ஏதோ ஒரு உணர்வினால் ஒருநாள் அங்கு வந்து சேர்ந்தார்.

வந்தவர், கோப்பெருஞ் சோழனது நடுகல்லையும் சூழஇருந்த சான்றோரையுந்தான் காணமுடிந்தது! சோழனை உயிரோடு காணும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. ஆயினும், எப்படியும் வருவார் என்ற அரசனது எதிர்பார்ப்பு வீண்போகவில்லை என்பதனால் இவர்களின் நட்பின் திறன் கண்டு பலரும் பாராட்டினர்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தனது நண்பனுக்காக, சோழன் வடக்கிருந்த அதே இடத்தில் தானும் வடக்கிருந்து உயிர் நீத்தார் புலவர் பிசிராந்தையார்!! "தேசத்தால் வேறுபட்டாலும் சான்றோர் அறிவினால் ஒன்றுபடுவார்கள்" என்று கண்ணகனார் என்ற புலவர், புலவர்களின் 'ஒன்று கூடலை' வியந்து கூறியுள்ளதை இங்கு நாமும் படித்து இன்புறுவோமாக,

**"பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய**
**மாமலை பயந்த காமரு மணியும்**
**இடைபடச் சேய ஆயினும், தொடை புணர்ந்து**
**அருவிலை நன்கலம் அமைக்கும் காலை**
**ஒருவழித் தோன்றியாங்கு, என்றும் சான்றோர்**
**சான்றோர் பாலராப;**
**சாலார், சாலார் பாலரா குபவே".** (புறம் 218)

# மானம் பெரிது

**24. மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்**
**உயிர் நீப்பர் மானம் வரின்.**

ஆறு அறிவு படைத்த மனிதனுக்கு எட்டாத சில குண இயல்புகள் மற்றைய உயிர்களிடத்தில் காணப்படுகின்றன. பொழுது புலர்வதைச் சேவல் அறிந்து கூவுகின்றது. மழை வருவதை உணர்ந்து எறும்புகள் முட்டை கொண்டு திட்டை ஏறுகின்றன.

இதுபோல, கவரிமான், தனது உடம்பிலிருந்து ஒரு மயிர் நீங்கினால் தனது உயிரை விட்டுவிடுகிறது. இதனைப்போல சில தன்மானமுள்ள மனிதர், தமது மானத்தை இழக்க வேண்டி நேரிட்டால் தமது உயிரை மாய்த்துக் கொள்வதற்கு எடுத்துக் காட்டாகத் திருவள்ளுவர் கையாண்டிருப்பதைப் பார்ப்போம்.

சோழ மன்னர்களிடையே மிகுந்த சிறப்புடன் வாழ்ந்தவன் கோப்பெருஞ் சோழன். அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த இவன், அவைக்களத்திலிருந்தாலும், போர்க்களத்தி லிருந்தாலும் அறிவுடையாரது அறிவுரைகளைக் கேட்டு, அவற்றை மதித்து நடக்கும் மனப்பாங்கு உடைய இம் மன்னன், பல புலவர்களையும் சான்றோர்களையும் தன்னுடன் வைத்திருந்தான், தன்மானம் உள்ளவனாய் விளங்கினான்.

ஆயினும், இந்த அரசனுடைய பிள்ளைகள், தந்தை சொற்கேளாதவர்களாய், இவனுடைய குணப் பண்புகளுக்கு மாறுபட்டவர்களாய் இருந்ததனால், அவர்களால் இவனுக்கு அபகீர்த்தி ஏற்பட்டது.

அதனால், தனது சொல்லை மீறி நடக்கும் தனது மக்களோடு போர்செய்ய எண்ணினான். தந்தையொடு போர் புரிய மக்களும் ஆயத்தமானார்கள். மக்களுக்குச் சில தீயசக்திகளுடைய நட்பும் இருந்தது.

இந்த நிலையில் சான்றோர் பலர் கூடித் தந்தையும் மக்களும் போர்புரிவதைத் தடுத்துவிட்டார்கள். அரசனுக்குப் புத்திமதி கூறினார்கள்.

"அரசே! தங்கள் மக்கள் அறியாமை காரணமாக இவ்வாறு போர் செய்ய முன்வருகிறார்கள். அவர்கள் தொன்று தொட்டு வந்த பகைவர் அல்லர். நீங்கள் போரில் வெற்றியடைந்தாலும் பின்பு, அவர்களுக்கே இந்த அரசு போய்ச் சேரும். போரில் தோற்றால் உங்களுக்குத் தீராத பழி வந்து சேரும்". இவ்வாறு சான்றோர் சொன்ன அறிவுரையைச் செவிமடுத்த கோப்பெருஞ் சோழன், தனது போர் முயற்சியைக் கைவிட்டான். ஆயினும், மக்களால் தனக்கு நேர்ந்த அவமானத்தைத் தாங்க முடியாத மன்னன், கவரிமான் போலத் தனது உயிரைப் போக்க எண்ணினான்.

**மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்**
**உயிர் நீப்பர் மானம் வரின்.**

என்ற தெய்வப் புலவரின் திருக்குறள் இம்மன்னனை எண்ணியே பாடப் பெற்றது என நினைக்கத் தோன்றுகிற தல்லவா? இவ்வாறு, நமது தமிழ் இலக்கியங்களில் பல கதாபாத்திரங்கள் திருவள்ளுவரின் இலக்கணத்துக்கு (குறளுக்கு) நேர்முக எடுத்துக் காட்டாக அமைந்திருப்பது வள்ளுவரின் புலமைத்திறனைக் காட்டுகின்றது;

தன் மானம் இழந்தேன் என வாழ விரும்பாத மன்னன், அக்கால வழக்கப்படி, வடக்கிருந்து உயிர்விடத் தீர்மானித்தான்.

வடக்கிருத்தலாவது வனத்திலே போய், ஓரிடத்தில் புல் பரப்பி ஒழுங்கு செய்து, புல்லின் மேல் இருந்து உண்ணா விரதம் மேற்கொண்டு உயிரைவிடுவது ஆகும். இதற்கு உதவி செய்வது போல, உறவினரும் நண்பரும் சூழ இருந்து பணிவிடை செய்வது வழக்கம்.

இப்படி வடக்கிருந்த கோப்பெருஞ் சோழன் சில நாட்களில் உயிர் நீத்தான். பின்னர், சான்றோர் கூடி அவன் புகழ்பாடி அவன் ஞாபகார்த்தமாக "நடுகல்" (உருவச் சிலை) எழுப்பினார்கள்.

## பகைவருக்கும் உதவுதல் – மனிதாபிமானம்

**25. பேராண்மை என்ப தறுகண்; ஒன்று உற்றக்கால்**
**ஊராண்மை மற்று அதன் எஃகு.**

இப்பாடலைப் பொருளுக்கேற்பச் சொல்லுவதானால்,

**தறுகண் பேராண்மை என்ப; ஒன்று உற்றக்கால்**
**ஊராண்மை மற்று அதன் எஃகு (என்ப)** என மாற்றலாம்.

பகைவரோடு போர் செய்யும்போது, அது மறப்போராக, கண்ணோட்டம் இல்லாமலே நடைபெறும். அதனை நூலோர், மிக்க ஆண்தன்மை (பேர் ஆண்மை) என்பர். பகைவருக்கு அந்த நேரம் ஒரு தாழ்வு வந்ததாயின் கண்ணோட்டம் செய்து, அது தீர்த்துக் கொள்ளும் பொருட்டு உபகாரியாய் இருப்பதை (ஊராண்மை செய்தலை) மிகவும் போற்றுவர் நூலோர்.

இவ்வாறு வள்ளுவனார் கூறிய இலக்கணத்துக்கு இலக்கியமாய் பல எடுத்துக் காட்டுக்கள் நமது இலக்கியங் களில் அநேகம் இருக்கின்றன. இங்கே, இராமாயணத்தி லிருந்து ஒரு நிகழ்வை எடுத்துக் கொள்வோம்.

பல ஆயிரம் வருடங்கள் அயோத்தியை ஆட்சி செய்த தசரத மன்னன், தனது முதுமையை எண்ணி, மூத்தமகன் இராமனுக்கு முடிசூட்டி இராச்சிய பாரத்தை ஒப்படைத்துத் தான் துறவு பூண எண்ணுகிறான். இதனை வசிட்ட முனிவரோடும் அமைச்சர்களோடும் யோசித்து முடிவு செய்து, நகரை அலங்கரிக்கும்படி கட்டளையிடுகிறான்.

தசரதனுடைய அறிவித்தல் மக்களுக்குச் சென்றடைய முன்னர் மந்தரை என்கின்ற தாதிக்கு எப்படியோ தெரிந்து விடுகிறது!

இந்த மந்தரைக்கும் இராமனுக்கும் ஒரு சின்னத் தகராறு. சிறு பிள்ளை இராமன், தனது வில்லில் நாண் பூட்டி, மண் உருண்டையால் அடித்தபோது மந்தரையின் கூன் முதுகில் பட்டிருக்கிறது பழைய நிகழ்ச்சி. யானைப் புத்தி படைத்த இந்தக் கிழவி, அதனை மறவாமல், பழிவாங்க எண்ணியது.

அந்தக் கிழவி, உடனே கைகேயியின் மாளிகைக்குச் செல்கிறாள். தசரதனுக்கும் சம்பராசுரனுக்கும் நடைபெற்ற போரின்போது, தசரதனுக்கு சாரத்தியஞ் செய்து, அதனால் வெற்றியைத் தேடித் தந்தவள் கைகேயி என்பதையும், அதற்காக இரண்டு வரங்கள் தருவதாகத் தசரதன் சொன்னதையும் அவளுக்கு ஞாபக மூட்டுகிறாள்.

அன்று தருவதாகச் சொன்ன வரங்கள் இரண்டையும் இன்று தசரதனிடம் கேட்கும்படியும், அவற்றுள் ஒன்றினால் பரதன் நாடாளவும், மற்றதனால் இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசஞ் செய்யவும் வேண்டுமென்றும் கைகேயிடம் கூனி கூறுகின்றாள்.

இராமனின் தாயான கோசலையைப் போலவே, கைகேயியும் சுமித்திரையும் பாசம் வைத்திருக்கிறார்கள். அதனால், கூனி சொன்ன வார்த்தைகளால் கோபங் கொள்கிறாள் கைகேயி. ஆயினும் கூனியின் உபதேசத்தால் மனம் மாறிய கைகேயி, தசரதனுடைய வருகையை எதிர்பார்த்திருந்து இரண்டு வரங்களையுங் கேட்கிறாள்.

தசரதன் கூறிய எதனையும் பொருட்படுத்தாமல் கைகேயி பிடிவாதமாக இருந்ததனால், "தந்தேன் வரம்" என்று கூறித்தரையில் சாய்கிறான்.

தசரதன் இவ்வாறு வரந்தந்தார் என்று கைகேயி கூறியதும், 'மன்னவன் பணியன்றாகில் நும்பணி

மறுப்பனோ' என்று சொல்லி மரவுரி அணிந்து வனஞ் செல்கிறான்.

இராமன் வனஞ்சென்ற செய்திகேட்ட தசரத மன்னனது உயிரும் வானுலகஞ் செல்கிறது.

இராமனுடன் தம்பி இலக்குமணனும் சீதையுஞ் செல்கின்றனர். கங்கைக் கரையைக் கடந்து அப்பால் சித்திரகூட மலையில் இலக்குமணனால் அமைக்கப்பெற்ற பர்ண சாலையில் இராமனும் சீதையும் தங்கியிருக்க, இலக்குமணன் அவர்களுக்குப் பாதுகாப்பாகப் பணிபுரிகின்றான்.

அக்காலத்தில், இலங்கை அரசன் இராவணனுடைய தங்கை சூர்ப்பனகை, இராமன் சீதை இருக்குமிடத்துக்குத் தற்செயலாக வருகின்றாள். சீதையின் அழகுபற்றி அண்ணன் இராவணனுக்குச் சொல்லவே, இராவணன் ஒருநாள் வந்து சீதையைக் கவர்ந்து சென்றுவிடுகிறான்.

இராமலக்குமணர் இல்லாதபோது நடைபெற்ற இச் சம்பவத்தால், சீதையைத் தேடி இவ்விருவரும் காடுகளில் அலைந்தார்கள். காட்டில் ஓரிடத்தில் குற்றுயிராய்க் கிடந்த சடாயு மூலம் சீதையை இராவணன் இலங்கைக்குக் கொண்டு போனதுபற்றி அறிந்தார்கள். அந்நாட்களில், வாலியால் துரத்தப்பெற்ற அவனது தம்பி சுக்கிரீவனும் மந்திரியாகிய அனுமனும் ரிஷ்யசிருங்க மலையில் மறைந்து வாழ்கிறார்கள். அவர்களது நட்பு இராம இலக்குமணருக்குக் கிடைக்கிறது.

அனுமான் கடல்கடந்து இலங்கை சென்று, சீதை சிறையில் இருக்கும் இடத்தைக் கண்டறிந்துவந்து இராமனிடம் சொல்லுகிறான்.

இராமன், அனுமனைத் தூதனுப்பி, சீதையைச் சிறை

விடுமாறு கேட்கிறான். இராவணன் மறுத்துப் போருக்கு ஆயத்தமானான்.

பல நாட்கள் போர் நடைபெறுகிறது. ஒருநாள் இராவணன் தனது ஆயுதங்களையெல்லாம் இழந்து வெறுங் கையினனாய் இராமன் முன் நிற்கிறான். அப்பொழுது இராமன், “இராவணா, நேர் நின்று இந்த நிலையில் யுத்தஞ்செய்து இறக்க எண்ணினாலும் அவ்வாறு செய் ஆனால், பிழைத்து ஓடுவதற்கு வாய்ப்பு உண்டு என விரும்பாதே” என்கிறான்.

**ஆள் ஐயா! உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த**
**பூளை ஆயின கண்டனை, ‘இன்று போய்ப் போர்க்கு**
**நாளை வா’ என நல்கினன், நாடு இளங் கமுகின்**
**வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்.**

என்பது கம்பர் காவியம்.

போர் என்று தொடங்கிவிட்டால் தயவுதாட்சணியம் காட்டுவது கிடையாது. ஆனால் வெறுங்கையோடு நிற்கும் ஒருவனைக் கொல்லுவதென்பது மனிதாபிமானமும் அல்ல. அதனால் எதிரிக்கு ஒரு வாய்ப்பு வழங்கியது போற்றக் கூடிய செயலாகும். இதனை வள்ளுவரும்,

**பேராண்மை என்ப தறுகண், ஒன்று உற்றக்கால்**
**ஊராண்மை மற்று அதன் எஃகு.**

என்ற இலக்கணத்துள் சேர்த்திருக்கின்றமை நயத்தற்குரியது.

அன்றியும், சிறந்த சிவபக்தனான இராவணன், நாயன்மார்களுடைய தேவாரப் பாடல்களிலே சிறப்பிக்கப் பெற்ற பெருமை படைத்த இராவணன் பிறன் மனையாளை விரும்பிய பெருந்தவறும் நல்லோர்களைத் துன்புறுத்திய தீமையுஞ் செய்து சிறுமைப்பட்டு நிற்பவன். தான் பெற்ற

தவவலிமையைப் பிழையான வழியிற் கையாண்ட குற்றத் திற்காக இவனை அழிப்பதற்கென்று அவதாரமெடுத்த இராமன், இராவணன் தன் பிழையை உணர்ந்து திருந்து வதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கியது போலவும் இதனைக் கொள்ளலாம். இறைவன் படைத்து காத்து அழித்து அருள் செய்பவனாயிற்றே.

ஆகவே, இராமன் இன்று போய்ப் போர்க்கு நாளை வா என்று சொன்ன சொல்லே பெரிய தண்டனையாக இருந்தது இராவணனுக்கு.

அதனால் அவன் போர்க்களத்தை விட்டுப் போகின்ற காட்சியைக் கம்பர்,

**"வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்**
**நாரத முனிவற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்**
**தார் அணி மவுலிபத்தும் சங்கரன் கொடுத்த வாளும்**
**வீரமும் களத்தே போட்டு வெறுங் கையோடு**
**இலங்கைப் புக்கான்".**

என்றவாறு, இராவணன் யானையோடு சண்டை செய்தமை, கயிலாய மலையைப் பெயர்த்தமை, நாரதருக்கு இணையாக யாழ் வாசித்தமை ஆகிய எல்லாவற்றையும் நினைவு கூர்ந்து பத்துத் தலைகளுக்கும் அணிந்திருந்த கிரீடங்கள், சிவபெருமான் கொடுத்த வாள், மொத்தத்தில் தனது வீரம் ஆகிய எல்லாவற்றையும் களத்திலே விட்டுவிட்டு வெறுங் கையோடு இலங்கை புக்கான் எனப் பாடியிருப்பது மேலும் மேலும் படித்து இன்புறத்தக்கதே.

# தவறு இல்லையேல் துன்பமும் இல்லை

**26. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்.**

"தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை" என வாழ்ந்த இராமன், தனக்கு அரசியற் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற் கான, முடிசூட்டு விழா நடைபெறும் எனக் கேட்டபோதும், நாடாளும் உரிமையில்லை, வனம் ஆளச் செல்ல வேண்டும் என்று அறிந்த போதும் ஒரே மனநிலையில், இரண்டையும் ஒன்றாகவே மதித்து, மரவுரி தரித்து வனஞ் செல்லப் புறப்படுகிறான். வழக்கம்போல, இலக்குமணன் அண்ணனுக்குத் துணையாகச் செல்கிறான். உங்கள் பிரிவிலும் பார்க்கக் காட்டு வெப்பம் என்னைச் சுடுமோ எனக் கூறிச் சீதை கிளம்புகிறாள்.

குகன் துணையாகக் கங்கையைக் கடந்த இம் மூவரும், சித்திரகூட மலையில் பர்ணசாலை அமைத்துத் தங்கியிருக்கிறார்கள். அரசியற் பாரம் நீங்கி வனமாளும் நிலையிலும் இராமன் மிகுந்த உற்சாகத்தோடு காணப் படுகிறான். தொல்லைதரும் பிறவிப் பிணியிலிருந்து நீங்கி, இறைவன் பாதம் பற்றிப் பிடித்த பக்தன்போல இராமன், தெய்வீக சிந்தனையோடு ஆனந்தமாக வாழ்கிறான். இராமனின் இத்தகைய நிலை,

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்.**

என்ற குறளுக்கு இலக்கியமாக அமைந்திருப்பதை நாம் உணர்ந்து கொள்வோமாக. ஒருவன் ஒரு பொருளில் பற்று வையாதபோது, அது கிடைக்கவில்லை என்ற போதோ

அன்றி இழக்க வேண்டி வந்த போதோ துன்பப்பட மாட்டான் என்பது தெளிவாகிறது.

இஃது இவ்வாறு இருக்கும்போது, கேகய நாட்டி லிருந்து திரும்பி வந்த பரதன், அன்னையர், உறவினர் சகிதம் வனஞ் சென்று, தனக்கு உரிமையில்லாத அரசுரிமையை ஏற்க வருமாறு இராமனைக் கேட்டால் அவன் வரவா போகிறான்? இப்போது பரதனும் இராமன் நிலையிலேயே இருக்கிறான். தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்திற் தேக்கிப் போயினை என்றபோது, புகழினோய் தன்மை கண்டால், ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ? என்றல்லவா குகன் பரதனைப் புகழ்ந்திருக்கின்றான்.

ஆக, அரசியற் பாரம் நீங்கிய இராமன் துன்பம் (நோதல்) அடையவில்லை, அரசியற் பாரம் கிடைக்கும் என்பதால் பரதன் இன்பம் அடையவில்லை, அவனும் இராமனாகிறான்! பரதனைப் பொறுத்து இக்குறள்,

**யாதனின் யாதனின் நீங்கியான் (இன்பம் / நோதல்)**

**அதனின் அதனின் இலன்.** என இருபொருள் பெற்றதாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது அல்லவா?

இராமனைப் போலவே மரவுரி தரித்து வனஞ்சென்ற பரதன் தந்தை இறந்த செய்தியைக் கூறுகின்றான். சில மணித்தியாலங்கள் துக்கத்தில் எல்லோரும் மௌனமாக இருக்கின்றனர். பின்னர், பரதன் தான் வனம் வந்த காரணத்தை அண்ணனிடம் கூறுகின்றான்.

அதற்கு இராமன், தந்தை சொல்லைக் காப்பாற்ற தான் வனவாசம் செய்ய வேண்டியிருப்பதால், அதே

நோக்கத்தை நிறைவேற்ற தான் வரும்வரையும் அரசியலை நடாத்த வேண்டும் என்று பரதனிடம் கூறுகின்றான்.

அண்ணன் இருக்கத் தான் அரசாள்வது முறையில்லை எனப் பரதனும், தந்தை சொல்லை மீறும் வகையில் தான் அரசாள்வது கூடாது என இராமனும் மாறிமாறிப் பேசிக் கொள்ளுகின்றனர்.

நிலையில்லாத உலகப் பற்றினை விடுத்து நிலை பேறான பேரின்பத்தை அடையக் கூடிய தவ வாழ்கையையே இருவரும் விரும்புகின்றனர். இராச்சியத்தைப் பெற்று இன்பம் அடைவதிலோ இராச்சியத்தை இழந்து அல்லது பெறாது துன்பம் அடைவதிலோ ஈடுபாடில்லாத நிலையிலே தான் இருவரும் உள்ளனர்.

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்.**

என்ற வள்ளுவர் வாக்கு இருந்தவாறு நோக்கத்தக்கது. விருப்பு வெறுப்பற்ற நிலையை, பக்தி மார்க்கத்தை இங்கே காண்கிறோம்.

**பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு.**

என்பது பிறிதோரிடத்தில் வள்ளுவர் காட்டும் இலக்கண மாகும்.

ஈற்றில், இராமனது வனவாச காலம் முடியும்வரை அரசியலை மேற்கொள்ளப் பரதன் சம்மதித்தாலும், சிம்மாசனத்தில் அமரப் போவது பாதுகை (காலணி) என்பதை எண்ணும்போது, இராமனுக்கு சற்றும் குறைந்தவ னல்லன் பரதன் என்பதை உணர்ந்து இன்புறுவோமாக.

## ஊரறிந்த களவுக் காதல்

**27. கண்டது மன்னும் ஒருநாள் அலர் மன்னும்**
**திங்களைப் பாம்பு கொண்டற்று.**

சங்ககாலத் தமிழ் இலக்கியங்களிலே தலைவன் - தலைவியர் சந்திப்புக்கள் இடம்பெற்ற சம்பவங்கள் பல வற்றை அறியக் கூடியதாக இருக்கிறது. இந்தச் சந்திப்புக்களில் சில களவுக் காதலர் சந்திப்பாகவும் நடைபெறும். முறைகேடு அற்றதாக இருக்கும் இச் சந்திப்புக்கள் சில வேளைகளில் ஊரறிந்த (ஊரலர்) ஒன்றாய் அமைவதும் உண்டு.

"ஒரேயொரு நாள் மட்டுமே இரகசியமாகச் சந்தித்துப் பேசினோம், இது யாருக்கும் தெரியாது என்றுதான் பிரிந்து போனோம். ஆனால், மறுநாள், ஊரெல்லாம் எங்கள் சந்திப்புப் பற்றியே பேசிக் கொண்டிருப்பதை அறிகிறோம்" என்று இந்தத் தலைவனும் தலைவியும் தம்முள் ஆச்சரியப் படுகின்றனர்!

இந்த இரகசியம் ஊருக்குள் எப்படிக் கசிந்து சென்றது என்பதை வள்ளுவர் ஒரு உவமை மூலம் காட்டுகின்றார். ஆம், சந்திரனைப் பாம்பு விழுங்கியது என்று ஊரார் சொல்லும் சந்திரகிரகண நிகழ்வுதான் அவர் கூறும் உவமையாகும்.

**கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்**
**திங்களைப் பாம்பு கொண் டற்று**

என்பது அந்த உவமைத் திருக்குறள் ஆகும்.

இந்தப் பூமியில் உள்ள மக்கள், சூரிய கிரகணத் தையும் சந்திர கிரகணத்தையும் சந்திக்கிறார்கள்.

சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் (திங்கள்) நேராக வரும்போது, சூரிய ஒளியைப் பூமியிலுள்ளோர்

பெறமுடியாமல் திங்கள் மறைக்கிறது. அதனால் அந்த நேர்கோட்டில் உள்ளவர்கள் சூரிய கிரகணத்தை அறிவர். ஏனையோர் அறியார்.

சூரியனுக்கும் திங்களுக்கும் இடையில் பூமி வந்தால், சூரிய ஒளி சந்திரனுக்குச் செல்லவிடாமல் பூமி மறைக்கும். அப்போது சந்திரனில் இருள் படரும். அது சந்திர கிரகணம் ஆகும். சந்திர கிரகணத்தை அந்நேரம் சந்திரனைக் காணும் வாய்ப்புப் பெற்ற அனைவரும் காணமுடிகிறது. அதாவது, சூரியகிரகணம், சூரியனைப் பார்க்கக் கூடிய அனை வருக்கும் தெரிவதில்லை.

ஆனால், சந்திரனைப் பார்க்கக் கூடிய அனை வருக்கும் சந்திர கிரகணம் புலப்படும்.

இங்கே, கள்ளக் காதலர் - தலைவனும் தலைவியும் ஒருநாள் இரகசிய சந்திப்புக்கு சந்திர கிரகணத்தை - திங்களைப் பாம்பு கொண்டதை உவமானமாகக் கொண்டு குறள் பாடிய வள்ளுவரின் திறனை வியந்து போற்று வோமாக.

ஒருநாள் நடைபெற்ற சந்திர கிரகணம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகி விட்டது போல,

தலைவன் - தலைவி ஒருநாள் சந்தித்த போதும் (கண்டது மன்னும் ஒருநாள்) அது ஊர் அறிந்த (ஊரலர்) விஷயமாகிவிட்டது என விளக்கி அமைகின்றார் செந்நாப் புலவர்.

**கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்**
**திங்களைப் பாம்பு கொண் டற்று.** (குறள்)

**குறிப்பு:** சந்திர கிரகணத்தின்போது, இருளில் மறையும் திங்களாகவும் சூரிய கிரகணத்தின்போது, ஒளியை மறைக்கும் திங்களாகவும் திங்கள் வருகின்ற இயற்கை நிலையை நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

## பயனற்ற வாய்ச்சொல்

**28. கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல.**

ஒருமுறை, தசரத மன்னனின் அரண்மனைக்கு கௌசிக முனிவர் வந்தார். தசரதன் அவரை வரவேற்று உபசாரஞ் செய்தபின், முனிவர் வந்த நோக்கம் என்ன என்று கேட்டான்.

"என்னைப் போன்ற முனிவர்களும் தேவர்களும் இடையூறு ஒன்று உடையராயின் நின்னைப் போன்ற அரசரிடத்திற் தானே போவார்கள்" என்று முகமன் கூறிவிட்டு, தான் செய்யப் போகின்ற தவத்திற்கு இடையூறு வராமற் காப்பதற்கு நின் சிறுவர் நால்வரில் கரிய செம்மலான இராமனைத் தருவாயாக என்று கேட்டார்.

பலகாலம் புத்திரப் பேறில்லாமல் இருந்து, பெரிய யாகஞ்செய்து, பிள்ளைகள் நால்வரைப் பெற்றெடுத்த தசரதனுக்கு, அவர்களைப் பிரிவதென்பது யமவேதனையான விஷயம். அதுவும் இராமனைப் பிரிவதென்பது முடியாத ஒன்று. அன்றியும், புத்திரனைப் பிரிந்து சோகத்தில் உயிர்துறப்பாய் என்று சாபம் ஒன்று இருக்கிறதே! அது அவன் மனதில் முன்வந்து நின்றது.

"அவர்கள் சிறியவர்கள்; படைப் பயிற்சி இல்லாத வர்கள். வேண்டுமானால் நான் வருகிறேன்" என்று தசரதன் கூறவே, முனிவருக்குக் கோபம் வந்துவிட்டது.

அந்நேரம், வசிட்ட முனிவர் சமாதானம் செய்து, அவர்களுக்கு ஒரு தீமையும் வராது; முனிவர் கேட்டபடி இராமனை அனுப்பலாம் என சொன்னார். தசரதன் ஒருவாறு

உடன்பட்டு இராமனை அனுப்ப, இலக்குமணனும் கூடவே புறப்பட்டுச் சென்றான்.

முனிவர் வனத்திலே தவம் செய்த காலப்பகுதியில் அவருக்கு அரக்கர்களால் ஏனைய உயிர்களால் தீமை வராமல் இராமலக்குமணர் காத்தனர். தவம் நிறைவேறியது.

முக்காலமும் உணர்ந்த முனிவர், தனது தவத்துக்கு உதவிய தசரதகுமாரனுக்கு அமையவிருக்கும் சீதா கல்யாணம் பற்றி எண்ணியும், இராமர் செய்த உதவிக்கு நன்றிக் கடன் செய்யும் விதத்திலும், இராமலக்குமணருக்கு ஒரு மகிழ்ச்சிகரமான உலாப் போதலாக, அவர்களை மிதிலை நகருக்குக் கூட்டிச் சென்றார்.

வழியிலே, கௌதம முனிவரின் சாபம் பெற்றுக் கல்லாயிருந்த அகலிகையின் உருவத்தில் இராமனது பாதம் படவே, அகலிகை சாபம் நீங்கி எழுந்தாள். அகலிகையின் வரலாறு கூறிய கௌசிக முனிவர், அகலிகையை அழைத்துக் கொண்டு சென்று கௌதமரிடம் சேர்த்துவிட்டு, அப்பாற் செல்கின்றனர். மிதிலையை ஜனக மன்னன் அரசாண்டு வந்தான். அவன் ஒருநாள் ஏர்பூட்டி நிலத்தை உழுதபொழுது, நிலத்திலிருந்து வெளிப்பட்டு வளர்ந்து ஜனகன் மகளாக வாழ்ந்தவள்தான் சீதை. சீதையோடு சிவதனு என்னும் வில்லும் கண்டெடுக்கப் பெற்றது. சீதை வளர வளர தானும் வளர்ந்து வந்த அந்த வில்லை, யார் வளைத்து முரிப்பாரோ அவர்தான் சீதையின் கணவராவார் என்பது அசரீரி வாக்கு.

அதனால், சீதை வளர வில்லும் வளர ஜனகன் மனதில் சீதை கல்யாணம் பற்றிய கவலையும் வளர்ந்து

வந்தது. இதுவரை வில்லை வளைக்க முரிக்கக் கூடிய யாரும் அங்கு வரவில்லை.

அந்த வேளையில்தான் முனிவர் கௌசிகரும் இராம லக்குமணர்களும் அங்கு போனார்கள். இந்த விஷயம் ஜனக மகாராசனுக்குத் தெரியாது.

அரச வீதியில் இவர்கள் மூவரும் போய் கொண் டிருக்கையில், மாடமாளிகைகளையும் கோபுரங்களையும் அண்ணார்ந்து பார்த்த வண்ணம் இராசகுமாரர்கள் சென்றார்கள்.

ஓரிடத்தில் இராமனின் கண்களிலே, மேல்மாடியில் தோழியரோடு நின்றிருந்த சீதையின் கண்கள் பட்டன. இக்காட்சியைக் கம்பர்,

**எண்ணரும் நலத்தினாள் இனையள் நின்றுழிக்**
**கண்ணொடு கண்ணினை கவ்வி, ஒன்றையொன்று**
**உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.**

எனக் காட்டுகின்றார்.

இராமர் - சீதை இருவரது வாய்ச்சொற்கள் எதுவும் வெளிவரவில்லை; அவர்கள் கண்கள் பேசிக் கொண்டன. அந்த அளவில் அவர்களிருவரும் உணர்வில் ஒன்றுபட்டனர் என்கிறார் கம்பர்.

கம்பர், காட்டும் இந்த இலக்கியத்தைப் பட்டறிவாகக் கொண்டு திருவள்ளுவரும்,

**கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல.**

என்று இலக்கணம் வகுத்திருப்பது கற்று அறிந்து இன்புறத் தக்கது.

## மதியும் மாதர் முகமும்

**29. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்**
**காதலை வாழி மதி.**

**"பொன்னே கொடியே புனைபூங் கோதாய்**

**நாணின் பாவாய் நீள் நில விளக்கே**
**கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி".**

என்று ஆயர்பாடியில் கோவலன், கண்ணகியைப் புகழ்ந்து கூறுகின்றான். மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் வந்து சேர்ந்த கோவலன், பொருள் தேடச் சென்ற காலத்தில், தான் கொண்டு சென்ற கைப்பொருள் அனைத்தையும் இழந்துவிட்டதாகவும், இனிமேல் வணிகத்தைத் தொடர்ந்து செய்யப் பொருள் கிடையாது என்றும் சொல்கிறான். அப்பொழுது கண்ணகி, தன் காற்சிலம்பு இருக்கும்போது கவலைப்பட வேண்டாம் என்கிறாள்.

புகார் நகரத்தில் சிலம்புக்கு விலைபேச எனது முந்திய தகுதிக்குப் பொருந்தாது. பாண்டிய நாட்டுக்குப் போவோம் வருவாயாக என்று கூறியதும், மறுவார்த்தையின்றிக் கண்ணகி உடன் புறப்பட்டுச் செல்கிறாள். மதுரையில், சிலம்பு விற்கப் புறப்படுமுன் ஆயர்பாடியில் தங்கியிருந்த போது கண்ணகியைப் புகழ்ந்து கூறிய கடைசி, உருக்கமான வார்த்தைகளே இளங்கோவடிகளின் மேற்படி வரிவடிவில் அமைந்திருக்கின்றன!

ஆனால், முன்பு பொருள் தேடச் சென்று கைப்பொருள் இழந்து மாதவியின் கலையழகில் மயங்கிய அவளை விடுதல் அறியா விருப்பினன் ஆக வாழ்கிறான்.

பெண்கள் முகம்போல, யான் மகிழும் வண்ணம் ஒளிவீச வல்லவளாக, மென்மையான காதலை உடையவளாகி மதியே நீ வாழ்வாயாக என்பது போன்று அவன் மாதவியுடன் வாழ்கின்றான். இதனைத் திருவள்ளுவர்,

**மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்**
**காதலை வாழி மதி.**

என்ற குறட்பா மூலம் நமக்கு விளக்குகின்றார்.

பின்னர், இந்திர விழாவின்போது, கானல்வரி பாடி, மாதவி வேறொருவர் பால் விருப்பங் கொள்கிறாள் எனப் பிழை கண்டுபிடித்து, மொத்தத்தில், அவள் ஆடல் மகள் தானே என்ற கணிப்பில் மாதவியைப் பிரிந்து செல்கிறான்.

காதல் மனைவியாக வாய்த்த மாதவி, கோவலனே தஞ்சமென்று அவன் காலடியில் கிடந்தாலும், "நிலத்தெய்வம் வியப்பெய்த, நீள் நிலத்தோர் மனம்மகிழ" புகழ் ஏணியில் உயர்ந்து நின்ற மாதவி, கலைமகளாகக் காட்டிய மாதவி, காதலுக்காக மாத்திரம் வாழ முடியுமா என்ன? தன் கலைத்திறமையைக் காட்ட வாய்ப்பு வந்தபோது, அதுவும் தனது கலைப்பண்பைப் புரிந்து கொண்ட ஒருவன் தன் கணவனாக இருக்கும்போது, பாட்டுக்குப் பாட்டாக மாதவி பாடிய கானல்வரிப் பாட்டு, கோவலனுக்கு மாறுபாடான எண்ணத்தைக் கொடுத்து விடுகிறது!

மாதவியின் மதிவதனம் தனக்கே சொந்தமாய், தானே அதை அனுபவிப்பதாய் இருக்க வேண்டும் என அவன் எண்ணிவிடுகிறான்.

இந்த நிலைக்கும் வள்ளுவனார் குறளிலே இலக்கணம் பண்ணியுள்ளமை வியந்து பாராட்டத் தக்கதே.

**"மலரன்ன கண்ணாள் முகம் ஒத்தியாயின்**
**பலர் காணத் தோன்றல் மதி"**

என்பது வள்ளுவர் குறள்.

தெய்வப் புலவர், ஒரு தலைவனை மனதிற் கற்பனை செய்துதான் பாடியிருப்பார். அது கோவலன் தானோ என எண்ணத் தோன்றுகிறது அல்லவா? தாமரை மலரன்ன கண்களையுடையவளான எனது காதலியின் முகம் போன்று நீ இருப்பது உண்மையானால், நீ, பலரும் காணும்படி தோற்றமளிக்கும் மதியாக இருக்கக் கூடாது என்கிறான் இந்த (வள்ளுவரின்) தலைவன்!

**குறிப்பு:**

**"மாமலர் நெடுங்கண் மாதவி மாலை**
**கோவலன் வாங்கி கூனி தன்னொடு**
**மணமனை புக்கு மாதவி தன்னொடு**
**அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி**
**விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்**
**வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்தென்".**

என இளங்கோ அடிகள் காட்டும் கோவலனின் ஆரம்ப நிலையை,

**"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்**
**காதலை வாழி மதி."**

என்ற குறள் மூலமும்

**"எண்ணும் எழுத்தும் இயல் ஐந்தும் பண் நான்கும்**
**பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் - மண்ணின்மேல்**

**போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவி, தன்**

**வாக்கினால் ஆடரங்கின் வந்து".**

என இளங்கோவடிகளால் சிறபிக்கப்பெற்ற மாதவி, இந்திர விழாவின்போது, கோவலன் பாடிய கானல்வரிப் பாட்டுக்கு போட்டியாக, ஆற்றுவரி பாடுகிறாள். "சோழ மன்னனின் செங்கோலாட்சியால்தான் காவேரி மகள் எழிலாக நடந்து போகிறாள்" என்று பெண்ணின் பெருமைக்கு ஆண்களே முன்மாதிரியாக இருக்க வேண்டும் என ஆற்றுவரி அர்த்தம் படுகிறது.

இதனால் இவள் வேறொரு ஆடவனை விரும்புகிறாள் எனக் கொண்டு, கோவலன்,

**"கானல்வரி யான் பாடத்தான் ஒன்றின்மேல் மனம்வைத்து**
**மாயப்பொய் பல கூட்டு மாயத்தாள் பாடினாளென".**

(இளங்கோ கூற்று)

எண்ணி விடுகிறான். அவன், மாதவி தனக்கே சொந்த மானவள், வேறொருவரை நினைக்கவே கூடாது என எண்ணுகிறான். இதனை தெய்வப் புலவர் திருவள்ளுவர்,

**மலரன்ன கண்ணாள் முகம் ஒத்தியாயின்**

**பலர் காணத் தோன்றல் மதி**

என்ற குறளில் சொல்லுவது போலவும்,

இக்கட்டுரையில் காட்டப்பெற்ற குறட்பா இரண்டும் அமைந்திருப்பது படித்து இன்புறத்தக்கது.

## துன்பச் சிரிப்பு

**30. இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல்.**

நமது வாழ்க்கைப் பாதையில் துன்பமான சம்பவம் ஒன்று குறுக்கிட்டு வந்துவிட்டால், அதனைக் கண்டு மனங் கலங்காமல், புன்சிரிப்போடு அதனை எதிர்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். அந்தப் புன்சிரிப்புத் (துணிவு) தான் அத்துன்பத்தை எதிர்கொள்ளக் கூடிய சக்தியை நமக்குத் தரும்; அதற்கு ஒப்பான சக்தி வேறொன்றும் இல்லை.

இவ்வாறு தெய்வப் புலவர் கூறிய இலக்கணத்திற்கு இலக்கியங்களில் பல நிகழ்வுகளை நாம் காணலாம். இங்கே, பாரதக் கதையிலிருந்து ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் கொள்ளுவோம்.

பாண்டவர்கள், வனவாச காலத்தின் பன்னிரண்டு ஆண்டு கழித்துவிட்ட நிலையில், ஒரு பிராமண வீட்டிலே தங்கியிருந்தார்கள். ஒருநாள், ஒரு மானின் கொம்பிலே ஒரு பிராமணனுடைய அரணிக் கட்டை, சிக்குண்டது. அந்தக் கட்டையோடு மான் ஓடிவிட்டது.

அந்தக் கட்டையை மீட்டெடுப்பதற்காக மானைத் துரத்திக் கொண்டு சென்றனர் பாண்டவர்கள். அப்பொழுது மான் தப்பிச் சென்றுவிட்டது. களைப்படைந்த பாண்டவர்கள் ஒரு மரநிழலில் அமர்ந்தனர். தாகத்துக்குத் தண்ணீர் தேடி வரும்படி நகுலனை அனுப்பினார்கள்.

காட்டுக்குள் நீர் நிலையைத் தேடிக் கண்டறிந்த நகுலன், தனது தாகத்தைத் தீர்க்கும் பொருட்டுத் தடாகத்தின்

பக்கம் போனான். அப்பொழுது ஓர் அசரீரி கேட்டது. "ஏ மாத்தரை புத்திரனே! இது நச்சுப் பொய்கை; நீரைக் குடிக்காதே; குடிப்பதாயினும் முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்லுவாயாக" என்றது அக்குரல்.

இதற்கு யோசித்துப் பதில் சொல்லும் நிலையில் அவன் இருக்கவில்லை. அதனால் நகுலன் தண்ணீரைக் கைகளால் அள்ளிக் குடித்தான்; அதனால் மயக்கமுற்று இறந்துவிட்டான்.

பாண்டவர்கள் மாறுவேடத்தில் பார்ப்பன வீட்டில் இருப்பதை அறிந்து, அவர்களைக் கொன்றுவிடும் நோக்கத்தில் துரியோதனனால் ஆக்கப் பெற்ற நச்சுப் பொய்கை அது என்பதனை வாசகர்கள் அறிந்ததே. நீண்ட நேரமாகியும் நகுலன் திரும்பி வராதது கண்ட தருமன், சகாதேவனை அனுப்பி வைத்தான். ஒருவாறு அந்த நீர்நிலையைக் கண்டு பிடித்த சகாதேவன், தம்பி இறந்து கிடப்பதைக் கண்டும், அது எப்படி நிகழ்ந்ததென்று ஆராயாமல், முதலில் நீர் குடிக்க முயன்றான். அப்பொழுது, முன்போலவே, "நீரைக் குடியாதே இது நச்சுப் பொய்கை, என் பேச்சைக் கேளாமல் உன் உடன்பிறப்பான நகுலனும் நீர் குடித்து மாண்டு போனான். ஆதலால், என் கேள்விக்குப் பதில் கூறிவிட்டு வேண்டுமானால் நீரைப் பருகலாம்" என அசரீரி கேட்டது. இதற்குப் பதிலளிக்காமலே, நீரைப் பருகிச் சகாதேவனும் உயிர் நீத்தான்.

இவ்வாறே வீமனும் அர்ச்சுனனும் நீர் பருகி உயிர் துறந்தனர். இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு, கலக்க மடையாமல், தருமன், அவர்களைத் தேடிப் போனான். நீர்க்கரையில் தம்பிமார் நால்வரும் இறந்து

கிடப்பதைக் கண்டான். கவலை இருந்தாலும், சற்றும் பதட்டமின்றி உடன்பிறப்புகளின் உடல்களைப் புரட்டிப் பார்த்தான். காயங்கள் எதுவும் இல்லை! ஏதோ சூது நடந்திருக்கிறது என்று அனுமானித்துக் கொண்டு தருமனும் முதலில் நீர் பருகித் தாகந் தீர்க்கலாம் என நீர்க்கரைக்கு நடந்தான்.

முன்போலவே, தருமனையும் தடுத்து நிறுத்திய அந்த அசரீரி, தன் கேள்விக்குப் பதில் கூறும்படி கேட்டது. தருமன் தாகந் தீர்ப்பதைக் கைவிட்டு, அசரீரியின் கேள்விக்குப் பதில் கூற முற்பட்டான். "நீ யார்? ஏன் மறைந்து நிற்கிறாய்? உன் கேள்விகள் என்ன?" என்று கேட்டுப் பதில் கூறினான்.

i. **மீண்டும் மீண்டும் பிறப்பது எது?**
ii. **கண்மூடாது உறங்குவது எது?**
iii. **நமது இறப்பின்போது கூட வருவது எது?**

என்பன போன்ற பல வினாக்களுக்கு தருமன் தக்க விடை கூறினான்.

இங்கே, ஆசரீரியாக வந்தது தருமதேவதை. தருமன் கூறிய பதில்களால் மகிழ்ச்சியடைந்து, "என் கேள்விக்கு உரிய பதில் கூறியபடியால் உனது தம்பிமாரில் ஒருவனை எழுப்பித் தருகிறேன்; யாரை நீ கேட்கிறாய்?" என்று தருமதேவதை கேட்டது. தருமன் சிறிதுநேரம் சிந்தித்தான். குந்தியின் புதல்வர்கள் மூவரில் வீமனும் அர்ச்சுனனும் இறந்து போனாலும் தான் இறவாது இருக்கிறான். சிற்றன்னையின் பிள்ளைகள் நகுலன், சகாதேவன் ஆகிய இருவருமே இறந்து போனார்கள். ஆகவே,

'நகுலனை எழுப்பித் தாருங்கள்' என அசரீரியிடம் வேண்டிக் கொண்டான் தருமன்!

தருமராசனது நீதிவழுவா நெறிமுறையை மெச்சிய தருமதேவதை, அவன் கண்முன்னே தோன்றி, இறந்துபோன தம்பிமார் நால்வரையுமே உயிர் பெற்றெழச் செய்தது! அதுமட்டுமன்றிப் பாண்டவர்களுக்கு நல்ல ஆசியும் கூறிச் சென்றது.

தருமன், தன் தம்பியரை இழந்தபோதும், மனந் தளராது முயன்று காரியசித்தி பெற்றான். மனந்தளராத தன்மை அவனது காரியத்தை இலகுவாகச் செய்து வெற்றி பெறவைத்தது.

இதுபோன்ற நிகழ்வுகள் பலவற்றை இந்தப் பாரதக் கதையிலும் வேறு இலக்கியங்களிலும் காணலாம். இவ்வாறு பெற்ற அனுபவங்களினால் தெய்வப் புலவர்,

**"இடுக்கண் வருங்கால் நகுக; அதனை**
**அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல்"**

என்று இலக்கணம் வகுத்துள்ளார்.

இங்கே, 'நகுக' என்பதற்குப் 'புன்சிரிப்புக் கொள்க' என்ற பொருள் அமைகிறது. துன்பம் ஒன்று வந்துவிட்டால், சும்மா சிரித்துக் கொண்டு இருக்க, அத்துன்பம் போய்விடுமா? அழுது கொண்டிருக்காமல் துன்பத்தை இன்பமாக்க முயலவேண்டும் என்பதே 'நகுதல்' என்று சொல்லப் பெறுகிறது.

"நகுதற் பொருட்டன்று நட்டல்" என, நட்பு பற்றிச் சொல்லுமிடத்தில், நட்புச் செய்வது சும்மா சிரித்து மகிழ அன்று, நண்பன் தவறு செய்யுமிடத்து அவனை நல்வழிப் படுத்துவதற்கும் நட்பு உதவ வேண்டும் என வள்ளுவர் கூறுவதும் காண்க.

## தீமைக்கு நன்மை

**31. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண**
**நன்னயம் செய்து விடல்.**

மாதவியின் மகள் மணிமேகலை, துறவுபூண்டு வாழும்போது, அவள் துறவி என்று தெரிந்திருந்தும், உதயகுமாரன் அவளை மணஞ்செய்து கொள்ள விரும்பி, அவள் செல்லும் இடமெல்லாம் அவளைப் பின்தொடர்ந்த வண்ணம் திரிந்தான்.

ஒருநாள் மணிமேகலை மலர்வனத்தில் இருக்கிறாள் என்பதை அறிந்து அங்கே சென்றான் உதயகுமாரன். அவனது வருகையை அறிந்த சுதமதி என்ற தோழி, மணிமேகலையை அங்குள்ள பளிங்கு அறையொன்றில் மறைத்துவிட்டு வெளியில் நின்றாள்.

உதயகுமாரன் அங்கு சென்ற வேளை, மணிமேகலையின் தவக்கோலத்தையும் அவள் தவக்கோலம் பூண்ட காரணத்தையும் அவனுக்கு எடுத்துரைத்தாள்; அறிவுரை கூறினாள். அப்போது அவன் அவ்விடம் விட்டகன்று போய்விட்டான்.

இன்னொரு நாள் உதயகுமாரன் உலாப் போன சமயம், மணிமேக்லை காயசண்டிகை என்ற பெண்ணின் வேடங் கொண்டு உலாவுகிறாள் என யாரோ சொல்லக் கேட்டான். அதனால் காயசண்டிகை என்பாள் இருக்கும் உலக அறவி என்னும் அம்பலத்துக்கு - மடத்துக்கு போனான். அங்கே இவன் போன பொழுது காயசண்டிகையின் கணவனான காஞ்சனன் என்பான், உண்மையில் தனது காயசண்டிகையை விரும்பித்தான்

அங்கு வந்தான் என எண்ணி ஒளித்திருந்து உதயகுமாரனை வெட்டிக் கொன்று விட்டான்.

இளவரசனான உதயகுமாரனின் தாயார் இந்த அனர்த்தத்தைக் கேள்விப்பட்டு, அலறித்துடித்தாள். விலை மாதான மணிமேகலையால் ஏற்பட்ட விளைவு இதுவென அறிந்து, கோபங்கொண்டு மணிமேகலையைச் சிறையிலிட்டு துன்புறுத்தினாள். மேலும் மணிமேகலையை ஒரு தனி அறையில் அடைத்துவிட்டு, அவள் ஒரு விலைமாது என உலகுக்குக் காட்ட எண்ணி, அவளது அறைக்கு ஒரு இளைஞன் செல்ல ஏற்பாடு செய்தாள்.

இதனை அறிந்த மணிமேகலை, தன்னை ஒரு ஆண்மகனாக மாற்றிக் கொண்டு அங்கே இருந்தாள். அங்கு சென்ற இளைஞன் இந்த ஆடவனை அறையில் கண்டதும் திரும்பி ஓட்டம் பிடித்தான். பின்னர், உதயகுமாரின் தாயார், மணிமேகலைக்கு உணவு வழங்குவதை நிறுத்திவிட்டாள். ஆனால், பசிப்பிணிபோக்கும் மந்திரவலிமை மிக்க மணிமேகலை எவ்வித துன்பமுமின்றிப் பொழுதைக் கழித்தாள்.

இவ்வாறு தண்டனைகளால் மணிமேகலை துன்பம் எதுவுமின்றி உயிர்வாழ்வது கண்ட உதயகுமாரனின் தாயாருக்குப் பயம் பிடித்துவிட்டது!

மணிமேகலையின் தெய்வீக சக்தியை உணர்ந்து அவளை விடுதலை செய்து, மன்னிப்புக் கேட்டாள் அந்தத் தாய்.

ஆனால், மணிமேகலை, அந்த அரசியிடம் எவ்வித குரோதமும் கொள்ளாமல் அவளுக்கு ஆறுதலான வார்த்தை கூறித் தேற்றினாள். அன்றியும், உதயகுமாரனது முற்பிறப்புப் பற்றிய உண்மையை வெளிப்படுத்தினாள்.

உதயகுமாரன் முற்பிறவியில் இராகுலன் என்னும் பெயரோடு தனக்குக் கணவனாக இருந்தான் என்றும் அக்காலத்தில் இவன் இன்னொருவனைக் கொலை செய்தமையால், இப்பிறவியில் இவனை ஒருவன் கொலை செய்தான் என்றும் எடுத்துரைத்தாள் மணிமேகலை.

இவ்வாறு தனக்குத் துன்பஞ் செய்த அரசியை மன்னித்து ஆறுதல் கூறியதோடு இந்த விஷயத்தை அன்றோடு மறந்து விட்டாள் மணிமேகலை.

**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண**
**நன்னயம் செய்து விடல்.**

என்று திருவள்ளுவர் கூறிய இலக்கணத்துக்கு இலக்கிய மானாள் மணிமேகலை.

இதுபோன்ற பாத்திரங்கள் பலவற்றை வேறு இலக்கியங்களிலும் காணலாம்.

## சொற்சோர்வு படேல்

**32. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்**

**சொல்லிய வண்ணம் செயல்.**

முன்னொரு காலத்தில், அத்தினாபுரத்தைச் சந்தனு என்னும் அரசன் ஆண்டு வந்தான். ஒருநாள் அவ்வரசன் வேட்டைக்குச் சென்றபொழுது கங்கைக் கரையிலே மானிட வடிவில் நின்ற கங்காதேவியைக் கண்டான். அப்பெண்ணை மணஞ்செய்ய விரும்பிய சந்தனு, தன் மனக்கருத்தை அவளிடம் கூறினான். தன் விருப்பப்படி அவள் தன்னை மணந்தால், தனது இராச்சியத்தையும் ஏனைய செல்வங் களையும் அவளுக்கு உரிமையாக்குவதாக ஆசை காட்டினான்.

சந்தனுவின் பேச்சைக் கேட்ட கங்காதேவி, "நான் உனக்கு மனைவியாவதென்றால், நான் சொன்னபடி நீ நடந்துகொள்ள வேண்டும்; இல்லையேல், அக்கணமே உன்னை விட்டுப் பிரிந்து போய்விடுவேன்; இதற்குச் சம்மதமா?" என்று கேட்டாள்.

அந்தநேரம் அப்பெண்மீது கொண்ட ஆசையின் நிமித்தம் அரசன் சம்மதம் தெரிவித்தான்.

அதன்படி சந்தனு - கங்காதேவி விவாகம் நடந் தேறியது. கணவன் மனைவியர் இருவரும் இன்பகரமாக வாழ்ந்தார்கள்; பல குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். ஆனால், கங்காதேவியின் நிபந்தனைப்படி, பெற்றெடுத்த குழந்தைகளை உடனுக்குடன் கங்கை நதியில் எறிந்து விடுவது வழக்கமாயிற்று!

கங்காதேவி எது செய்தாலும் மறுப்புக் கூறாமல் தான் கொடுத்த வாக்குறுதியின்படி நடந்துவந்தான் சந்தனு.

ஆயினும், எட்டாவது குழந்தையை அப்பெண் ஆற்றில் எறிய முற்பட்டபோது, பொறுக்கமாட்டாத சந்தனு அதனைத் தடுத்தான். "நீ என்னை வெறுத்தாலும் சரி, இந்தக் குழந்தையைக் கொல்லாதே" என்று இரந்து கேட்டான்.

அதனால், குழந்தை இறக்காமல் உயிர் பிழைத்துக் கொண்டது. அதே நேரம், சத்தியம் தவறிய மன்னனை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டாள் கங்காதேவி!

அரசனின் செயற்பாடு,

**சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்.**

என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாய் அமைந்து இருப்பதைப் பார்க்கிறோம்.

"அரசனே! நீர் உமது வாக்குறுதியை மறந்துவிட்டீர்கள், அல்லது மீறிவிட்டீர்கள். அதனால் என் விரதப்படி நான் உம்மைப் பிரிந்து போகிறேன்" என்று கூறிக்கொண்டு கங்காதேவி சென்றுவிட்டாள்.

முப்பத்தாறு வருடங்களின் பின் சந்தனுவைச் சந்தித்த கங்காதேவி, தங்கள் எட்டாவது பிள்ளையைச் சந்தனுவிடம் சேர்த்தாள்.

அந்தப் பிள்ளைதான் தேவவிரதன். சந்தனு மன்னன், பின்னர் சத்தியவதி என்ற பெண்ணை விவாகஞ் செய்ய விரும்பினார். ஆனால் அந்தப் பெண் தனக்குப் பிறக்கும் குழந்தைக்கே அரசுரிமை தரவேண்டும் என்று நிபந்தனை விதித்தாள்.

அதனால், தந்தை விரும்பியபடி சத்தியவதியை மணஞ் செய்துகொள்ள வசதியாக, தேவவிரதன் நித்திய பிரம்மச்சாரியாகத் தன்னை ஆக்கிக் கொண்டான். மகன், பிதா என்ற தானத்திலிருந்து தன் தந்தைக்கு விவாகஞ் செய்து வைத்தமையால், தேவவிரதன், பிதாமகன் என அழைக்கப் பெற்றான். பிதாமகன் என்ற பொருள் தரும் பிஷ்மர் என்ற பெயரைச் சொல்லி மண்ணவரும் விண்ணவரும் அவரை வாழ்த்தினர்.

பீஷ்மர் விரும்பினாலன்றி அவருக்கு மரணம் கிடையாது. இது சந்தனு தன் மகனுக்கு வழங்கிய வரம். இவ்வாறு பாரதக் கதை கூறுகின்றது.

# செய்ந்நன்றி மறவேல்

**33. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

சமூக வாழ்வில் ஒருவன் தனக்காகவும் பிறர்க்காகவும் செயலாற்ற வேண்டும்; வாழவேண்டும். அவ்வாறு வாழ்வாங்கு வாழும் ஒருவன் தான் பெற்று அனுபவிக்கும் நன்மைகளை மறக்கக் கூடாது. தானும் அதற்குப் பிரதி உபகாரஞ் செய்யவேண்டும். அன்றேல் சமூகம் அவனை மதிக்காது; புறந்தள்ளிவிடும்.

அவ்வாறு, நாம் பெற்ற பொது நன்மைகளை மறந்தாலும், சமய சந்தர்ப்பத்தில் ஒருவன் நமக்கு நேரிற் செய்த நன்றியை - செய்ந்நன்றியை ஒருபொழுதும் மறக்கக் கூடாது; மறந்தால் அதற்கு ஈடுசெய்ய முடியாத பெரிய இழப்பை நாம் பெறவேண்டி ஏற்படும்.

இதற்குப் பல பட்டறிவுப் படிப்பினைகளை நமது இலக்கியங்களில் காணலாம். இங்கு, பாரதக் கதையிலிருந்து ஒரு சந்தர்ப்பத்தை எடுத்துக் காட்டலாம்.

கொடைக்குக் கர்ணன் எனக் கொண்டாடப் பெறும் கர்ணன், துரியோதனனுடைய தேர்ச்சாரதியின் மகனாக வளர்ந்தவன். குழந்தையாக, ஆற்றில் கண்டெடுக்கப் பெற்று, 'கர்ணன்' என்ற பெயர் சூட்டி, மிகச் செல்லமாக வளர்த்தவன் தேர்ச்சாரதி என்பதும் உலகறிந்த உண்மை.

ஆயினும், அரசகுமாரர்களுக்குரிய வீரபராக்கிரமம் நிறைந்தவன் கர்ணன் என்பதனை அறிந்த துரியோதனன், கர்ணனைத் தனது விசுவாசம் உள்ள நண்பனாக்கி வைத்திருந்தான்.

இ∴திவ்வாறாக, திருதராட்டிரன் பிள்ளைகளான துரியோதனன் முதலிய நூற்றுவர்களுக்கும், திருத ராட்டிரனின் தம்பி பாண்டுவின் பிள்ளைகளான தருமன் முதலாம் ஐந்து பாண்டவர்களுக்கும் இடையில் பகைமை வளர்ந்து வந்தது.

திருதராட்டிரன் பிறவிக்குருடன் ஆனபடியால், துரியோதனனை அரசியலில் அமர்த்தித் தான் பெயரளவில் சிங்காசனத்தில் இருந்து வந்தான்.

பாண்டவர்கள் ஐவரும் அறிவிலும் ஆற்றலிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கி, பெரியோர் மதிப்புடன் வாழ்ந்து வந்தார்கள். கௌரவர்கள் என்று சொல்லப் பெறும் துரியோதனன் முதலியோர், அறிவிலும் நல்லோர் இணக்கத் திலும் செல்வாக்கு இல்லாதவர்களாக இருந்தார்கள். ஆயினும், வயதில் மூத்தவனான துரியோதனன் ஆட்சியில் இருந்தான். ஆகவே, பாண்டவர்களுடன் பகைமை கொண்ட துரியோதனன், இந்தப் பாண்டவர்கள் போலத் தகைமை கொண்ட கர்ணனைத் தனது நண்பன் ஆக்கிக் கொண்ட காரணத்தை நாம் விளங்கிக் கொள்வோமாக.

ஒருமுறை, அரசகுமாரர்களிடையே வில்வித்தையில் போட்டி நடைபெற்றது. கர்ணன், வில்வித்தையில் அர்ச்சுனனுக்கு நிகரான வீரன் எனப் பெயர்பெற்றவன். எனவே, கர்ணன் போட்டிக்கு முன்வந்தான்.

ஆனால், அர்ச்சுனன் அவனோடு போட்டியிட மறுத்தான். கர்ணன் அரசகுமாரன் அல்லன்; அவன் தேரோட்டியின் மகன். கர்ணன், யார் பிள்ளையென்று தெரியாதவன்; பிறப்

பறியாதவன். எனவே அவனுடன் போட்டியிட முடியாது என்பது அர்ச்சுனனுடைய வாதம்.

போட்டி நடைபெறும் கலத்தில் பகிரங்கமாக இவ்வாறு அர்ச்சுனன் சொன்னபோது, அவமானத்தால் கூனிக் குறுகி நின்ற வீரனான கர்ணனின் நிலையை உணர்ந்த துரியோதனன், அன்றே கர்ணனை அங்க தேசத்துக்கு அதிபதியாக்கி முடிசூட்டி வைத்தான். ஒருகால் தன்னை நண்பனாக்கிய துரியோதனன், இன்று தன்னை அரசனாக்கி வைத்த நன்றிக் கடனையும் மறவாமல் கர்ணன் வாழ்ந்து வந்தான்.

பிற்காலத்தில், பாரதப் போர் மூண்டது. கண்ணபிரான், குந்திதேவி ஆகியோர் மூலம் கர்ணன் தான் யார் என்பதை அறிந்தான். குந்திதேவி, பாண்டுவை விவாகஞ் செய்யுமுன், கன்னியாக இருந்த பொழுது, சூரியனுக்கும் குந்தி தேவிக்கும் பிறந்த பிள்ளைதான் கர்ணன். பழிக்குப் பயந்து ஆற்றில் விட்டபோதுதான் அப்பிள்ளை தேரோட்டியின் கையில் அகப்பட்டது! கவச குண்டலங்களோடு பிறந்தவன் சூரியகுமாரனான கர்ணன் (கர்ணம் = காது; கர்ணத்தில் குண்டலம் உள்ளவன் கர்ணன்) என்பதெல்லாம் தாய் மூலமும் கண்ணபிரான் மூலமும் கர்ணன் அறிந்து கொண்டான்.

ஆயினும், யாரென்று அறியத் தகாத தனக்கு, அரண்மனையில் அந்தப்புரம் வரை சென்றுவரக் கூடிய நட்புரிமையும், அத்தினாபுரி அரசுரிமையும் வழங்கிச் சிறப்புச் செய்த நன்றியை, செஞ்சோற்றுக்கடனை மறவாத சிந்தை யுடையவனாய்த் திகழுகின்றான் கர்ணன்.

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச்**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

என்னும் தெய்வப் புலவரின் பாடலுக்கு இலக்கணமாய் நின்று, பார்த்தசாரதி தேரோட்டப் போராடுந் தம்பி அர்ச்சுன னுடன் போர் புரிந்து உயிர்துறந்தான் கர்ணன்.

**ஓரைஞ்சு பேருளரால் அறந்தவறா**

**உதிட்டிரன் ஆதி உரகக் கொடியோன் ஈறா**

**ஈரைஞ்சு பதின்மர் உளர் தம்பி மார்கள்**

**இங்கிதங்கள் அறிந்தடவே ஏவல் செய்யப்**

**பாரைஞ்சும் ஒரு குடைக்கீழ் நீயே ஆளும்**

**பதம் அடைந்தும் விதிவலியால் பயன்பெறாமல்**

**காரைஞ்சு கரதலத்தோய் அந்தோ அந்தோ**

**கடவுளர்தம் மாயை யினாற் கழிவுற்றாயே.**

என்று, போர்க்களத்தில் கர்ணன் இறந்து கிடக்கும் வேளையில், அவனைத் தூக்கி மடிமீது வைத்து, 'மகனே' என்று அழுது - தான் யாரென்பதை உலகறியச் செய்வாயாக என்று கர்ணன் முன்பு கேட்டுக் கொண்டபடி குந்திதேவி கழிவிரக்கங் கொள்வதைக் காண்கிறோம்.

இவ்வளவு தூரம், செல்வாக்குடன் இருப்பதை அவன் அறியவந்த நேரத்திலும், அந்த நிலைக்குத் தன்னை உயர்த்தி வைத்த நன்றியைக் கர்ணன் மறந்தானில்லை; மழைக்கு நிகரான கொடை வள்ளலாகவும் திகழ்ந்த கர்ணன் செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வில்லை என எண்ணும் மனவலிமையும் பெற்றிருந்தான் என்பதையும் நாம் அறிந்து கொள்வோமாக.

## கற்பின் திறம்

**34. பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்.**

வாழ்க்கைத்துணை எனக் கூறப்பெறுகின்ற பெண், இல்லத்து அரசியாகவும் விளங்குகின்றாள். அவள் தன்னையுங்காத்து, தன்னைக் கொண்ட கணவனைப் பேணி, இல்லறத்தின் பெருமையைக் காப்பாற்றி, விருந்தினர், சுற்றத்தார் ஆகியோரை உபசரித்து, நன்மக்களைப் பெற்று வளர்த்தல் ஆகிய இல்லப் பொறுப்புகளைச் சுமந்து வாழ்கிறாள்.

அதனால் பெண், கல்வி அறிவும் ஒழுக்கமும் கடவுள் வழிபாடும் கொண்டவளாக இருக்க வேண்டியது அவசிய மானது. இப்படியான இயல்புகளிலே கற்பு என்னும் கலங்காத நிலை - திண்மை நிலை - பெற்றுவிட்டால், அப்பெண்ணிலும் பார்க்க பெருமைப்படும் ஒரு பொருள் உலகில் இல்லை என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

இவ்வாறான பெண்கள் பலர் நமது இலக்கியங்களிலே நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!

பதினான்கு ஆண்டு வனவாசஞ் செய்யப் புறப்பட்ட இராமனைத் தொடர்ந்து கானகம் சென்ற சீதை, இராவணனால் சிறைவைக்கப் பெற்றபோது, கற்பு வலிமையினால் தன்னைக் காத்துக் கொண்டாள். தீக்குளித்துத் தன் கற்பை நிலைநாட்டி மீண்டும் தன் கணவனிடஞ் சேர்ந்தாள்.

'கற்பென்னும் திண்மை' நிலை என்பது மனம்,

மொழி, மெய் ஆகிய மூன்றினாலும் கலங்காத, உறுதியான நிலையைக் கடைப்பிடித்து ஒழுகுதல் ஆகும். 'கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை' என்று ஔவையாரும் கூறியுள்ளார்.

தன் கணவனால் நள்ளிரவிலே நடுக்காட்டிலே கைவிடப்பெற்ற தமயந்தி, தனக்குத் தீமை செய்ய வந்த வேடனை எரித்துத் தன்னைக் காப்பாற்றி, தன் தாய் தந்தையரையும் கணவனையும் சேர்ந்து இன்புற்று வாழ்ந்தாள்.

சத்தியந்தவறாத அரிச்சந்திரனுடைய மனைவி சந்திரமதி, விதிவசத்தால் தாதியாகித் துன்பப்பட்ட போதும், பின்னர் கொலைக்குற்றம் எனத் தன் கணவன் கையாலேயே வெட்டப் பெற்ற போதும் தனது கலங்காத கற்பின் திறத்தால் இறப்பில்லா நிலைபெற்று இன்பமாக வாழ்ந்தாள்.

பாண்டவர் ஐவருக்கும் மனைவியாகி, கற்புடைப் பெண்ணாக வாழ்ந்தவள் பாஞ்சாலி. பொறாமை காரணமாக துரியோதனன் சபையிலே மானபங்கப்படுத்தப்பட்ட போது, தன்னைக் காப்பாற்றக் கூடிய பஞ்ச பாண்டவர், சூதாட்டத்தில் தம்மைத்தாமே அடிமையாக்கிக் கொண்ட நிலையில், கண்ண பரமாத்மாவின் உதவியை வேண்டிப் பெற்றுத் தன் கற்பின் மகிமையை உலகு அறிய வைத்தாள் பாஞ்சாலி.

**"பொன்னே கொடியே புனைபூங் கோதாய்**
**நாணின் பாவாய் நீள்நில விளக்கே**
**கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி".** (புறம் 235)

என்று இளங்கோவடிகளால் பேசப் பெற்ற பெண்ணின்

நல்லாள் கண்ணகி. பூம்புகார் நகரின் புகழ்பெற்ற வணிகன் மாசாத்துவானின் மகளான கண்ணகி, மாநாய்கன் மகனான வணிகர் குலதிலகமான கோவலனை மணந்து இல்லற மென்னும் நல்லறத்தில் வழுவாது வாழ்ந்து வந்தாள்.

சிலகாலஞ் செல்ல, பொருள் தேடச் சென்ற இடத்தில், மாதவி என்னும் ஆடல்மகளை மணஞ்செய்து வாழ்ந்த பொழுது, வணிகஞ் செய்ய முடியாது கைப்பொருளை இழந்தான்.

கண்ணகியிடம் திரும்பிவந்து, தன் வறுமை நிலையைக் கூறிய பொழுது, தனது காற்சிலம்பை விற்று, வணிகத்தைத் தொடரலாம் என்று கூறினாள் கண்ணகி.

சீருஞ் சிறப்புமாக வாழ்ந்த ஊரில், சிலம்பை விலைகூற மனம் ஒவ்வாமை காரணத்தால், பாண்டி நாடு சென்று பொருளை விற்கலாம் வருக என்றதும் கோவலனோடு புறப்பட்டாள் கண்ணகி.

மதுரையில் சிலம்பை விலை கூறிய கோவலன், பாண்டிய மன்னனின் சிலம்பைத் திருடினான் எனக் குற்றஞ் சாட்டப்பெற்று விசாரணையின்றிக் கொல்லப்பட்டான்.

அநியாயமாகத் தன் கணவன் கொல்லப்பட்டான் என்பதனால் சினங்கொண்ட கற்பின் கனலி கண்ணகி, மதுரை நகரையே எரித்தாள். தான் அரசாட்சியில் செய்த பிழையால் பாண்டிய மன்னன் உயிர்நீத்தான். கண்ணகி தெய்வமானாள். கற்புடை மங்கை கண்ணகிக்குச் சேரன், கோயில் எடுத்துக் கொண்டாடச் செய்தான்.

இவ்வாறு வாழ்ந்த பல கற்புத்திண்மை பெற்று வாழ்ந்த பெண்களின் வரலாற்றினை நமது தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணலாம்.

# மாசற்ற மனம்

**35. மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்துஅறன்**
**ஆகுல நீர பிற.**

***நாம்*** இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, நமக்கும் இவ்வுலகிற்கும் பயன்படச் செயலாற்றுவதும் கடவுளை வணங்கிப் பிறப்பில்லா வாழ்வு பெறவேண்டும் என்பதும் பெரியோர் நமக்குக் கூறிப்போன புத்திமதி ஆகும்.

அவ்வாறு நமது வாழ்வு அமைவதற்கு முக்கியமாக நமது மனம், குற்றமற்றதாக - மாசு இல்லாத மனத்தவன் ஆக இருக்க வேண்டும். அப்படி மனம் இருந்துவிட்டால் நமது சொல்லும் அதை அடுத்து வருகின்ற செயற்பாடும் நல்லவையாக அமையும் என்பதும், மனத்தூய்மையின்றி இருக்குமிடத்து நமது சொல்லும் செயலும் வெறும் பகட்டுக்குச் செய்வதாகவே அமையும் என்பதும் தெய்வப் புலவர் வகுத்துள்ள இலக்கணத்தில் தலையாய கூற்றாகும்.

மனத்தூய்மையின் நன்மைபற்றி அறிந்து ஒருவன் நடந்து கொண்டால் அதுவே நல்லறமாகும் - சொல்லும் செயலும் நல்லறத்தின் வழியில் இயல்பாக நடைபெறும் என்கிறார். ஔவையார் 'அறம் செய்ய விரும்பு' என்று சொல்லி வைத்ததும் இதே கருத்துடன் அமைந்துள்ளது காணலாம். நாம் அறம்செய்ய விரும்புவதற்கு நல்ல மனம் வேண்டுமல்லவா? அதனால் 'அறஞ்செய்' என்று சொல்லாமல் - மனம் இருந்தால் இடம் உண்டு என்பதால், அறஞ் செய்ய விரும்பு என்று சொன்னார்.

இப்படி மனத்துக்கண் மாசு இலன் ஆதல் எப்படி என்ற கேள்வி எழலாம்.

இதற்கு விடையாக,

**கற்க கசடறக் கற்பவை; கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

என்கிறார் வள்ளுவர் பிறிதோர் இடத்தில்.

கற்றல் அவசியம்; கசடறக்கற்றல் மிக அவசியம்; கற்பவை கற்றல் மிகமிக அவசியம். அவ்வாறு கற்றபின், கற்றவைபோல ஒழுக வேண்டும்; அது எல்லாவற்றிலும் அவசியம் என்கிறார் நல்ல நூல்களை நல்லாசானிடத்தில் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற வழியில் ஒழுக வேண்டும். அவ்விதமானால் நல்ல மனம், மாசு இல்லாத மனம் வந்து சேரும்.

**"மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்...."**

என்று கூறும்போது, மன்னன் கற்றவனாகவும் இருக்க வேண்டும் என்ற உட்கருத்தும் எழுகின்றதல்லவா. அத்துடன், கற்றவன் நல்ல மனம் பெற்றவன் என்பதால் சென்ற இடமெல்லாம் செய்கின்ற செயல்களினால் சிறப்புப் பெறுவான். மன்னன் - கற்காத மனிதன் - தனக்குட்பட்ட எல்லையில் அதிகார மதிப்புப் பெறுவான். எல்லை தாண்டினால் அதிகாரம் ஏது; மதிப்பு ஏது.

இராம காவியத்தில் இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்று சொல்லப் பெற்றது; சிறிது நேர இடைவெளியில் "இல்லை, இராமனுக்கு வனவாசம்; பரதனுக்குத்தான் பட்டாபிஷேகம்" என்று கூறப்பெற்றது.

இந்த இரண்டு வெவ்வேறு தன்மையான அறிவிப்பு இராமன் மனதில் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை; அன்றலர்ந்த செந்தாமரைபோல் அவன் முகம் இருந்தது என கம்பர் கூறுவார். அகத்தின் அழகை அவனது முகம் காட்டியது! முறைப்படி மூத்தமகனான தனக்கு இராச்சியம் வரப்போகிறது என்ற நிலையில் இராமன் துள்ளிக் குதிக்கவும் இல்லை; அது கைநழுவிப் போகிறதென்று அறிந்தபோது ஆத்திரங் கொள்ளவும் இல்லை. இதற்கெல்லாம் காரணமாக இருந்தது மனம்! களங்க மில்லாத மனம்!

அதேபோல, பரதன், "தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்திற் தேக்கி", அண்ணனைத் தேடிப் போனான் என்று குகன் வாயிலாகக் கூறுகின்ற கம்பரின் உள்ளத்தையும் பார்ப்போம். அங்கே பரதனின் முகத்திலே சிந்தனை இருந்த தென்றால், பரதனின் நற்சிந்தனை (நல்லமனம்) அவன் முகத்தின் மூலம் குகனுக்குத் தெரிந்துவிட்டது என்பதே பொருளாகும். அவ்வாறு நல்ல மனம் வாய்க்கப் பெற்ற பரதன், அண்ணன் சொற்படி பதினான்கு ஆண்டுகளின்பின், இராச்சிய பாரத்தை அண்ணன் இராமனிடம் ஒப்படைப்ப தையும் காண்கிறோம்.

தந்தை தாய் வாக்கிய பரிபாலனஞ் செய்த மற்றைய இரு சகோதரர்களான இலக்குவனும் சந்துருக்கினனும் அண்ணன் இராமனின் சொற்படி, உலகம் ஏற்றுக் கொள்ளும் படியான நல்ல மனம் அமையப் பெற்றவர்களாக வாழ்ந்ததை இராமாயணத்தில் காண்கிறோம்.

மேலும், கௌரவர்கள் கொடுத்த பல துன்பங்களைப் பொறுத்து நல்ல மனம் படைத்தவர்களான தம்பியரை வழிநடத்தி, இழந்துபோன இராச்சியத்தை மீளப்பெற்ற தருமனின் நல்ல மனத்தை பாரதக் கதையில் பார்க்கிறோம்.

இவ்விதமாக, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கின் வழியை அறிவுறுத்தி எழுந்த இலக்கியங்கள் கூறும் அறவாழ்வுக்கெல்லாம் மனமே மூலதனமாயிருக்க வேண்டும் என்ற தெய்வப்புலவரின் இலக்கணத்தின் சிறப்பை நாம் உணர்ந்து அதன்வழி நடக்க முயல்வோமாக.

**மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற.** என்பது குறள்.

மனம் இருந்தால் எதற்கும் இடம் உண்டு. மனம்போல் வாழ்வு என்பதும் நாம் அறிந்ததே.

## விதிவலிது

**36. ஊழிற் பெருவலி யாவுள; மற்றொன்று**
**சூழினும் தான் முந்துறும்.**

தன் மகன் இராமனுக்கு முடிசூட்டி வைத்து இராச்சியப் பாரத்தை ஒப்படைத்துவிட்டு ஓய்வுபெற எண்ணிய தசரத மன்னன், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்தர விட்டான். அரண்மனை மட்டுமன்றி அயோத்தி நகரம் முழுவதும் அலங்காரஞ் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்கள் தங்களையும் அலங்காரஞ் செய்து கொண்டு முடிசூட்டு விழாக் காண ஆயத்தஞ் செய்தார்கள்.

முடிசூட்டு விழாவைப் பற்றி அறிவித்த மன்னன், இந்தச் சந்தோஷச் செய்தியை சுமந்த மனத்தோடு, கைகேயியின் மாளிகைக்குச் சென்றான்.

ஆனால், அங்கே தலைவிரி கோலமாகக் கட்டிலிலே கிடந்த கைகேயியைக் கண்டு அரசன் அதிர்ச்சியடைந்தான். தனது அன்புக்குப் பாத்திரமான கைகேயியை அணைத்து ஆதரவாக என்ன தவறு நடந்தது எனக் கேட்ட தசரதன் மேலும் குழப்பமடைந்தான்.

சம்பராசுர யுத்தத்தின்போது, தோச்சாரதியின்றி நின்ற தசரதனுக்கு சாரதியாகி நின்று அவனுக்கு வெற்றிதேடிக் கொடுத்தவள் கைகேயி. அதற்குப் பரிசாக இரண்டு வரங்களைக் கொடுக்க முன்வந்தபோது, அவசியமில்லை என மறுத்தவள் கைகேயி. அது பழைய கதையாகிவிட்டது.

ஆனால், இன்று அந்த வரங்கள் இரண்டையுந் தரும்படி தசரதனைக் கேட்டாள்.

ஒரு வரம் பரதன் முடிபுனைந்து நாடாள வேண்டும், மற்றது இராமன், பதினான்கு ஆண்டுகள் வனவாசஞ் செய்ய வேண்டும் என்பது!

கோசல ராமனிடத்தில் பெற்ற தாயினும் பார்க்கப் பாசங்கொண்டவள் கைகேயி. ஆயின் இப்போது கைகேயிக்கு என்ன நடந்தது? கூனி வடிவில் விதி அவளது மனதை மாற்றிவிட்டது! புத்திர சோகத்தால் தசரதன் இறக்க வேண்டிய சாபம் ஒன்று உள்ளது!

உயிருக்கு உயிரான இராமனைப் பிரிந்து தான் வாழ மாட்டான் என்பது தெரிந்திருந்தும், சத்தியவாக்கை மீறாமல், 'தந்தேன் வரம்' என்று கூறி, சோகத்தால் மயங்கி உயிர் நீத்தான் தசரத மன்னன்!

கைகேயியின் முடிபை மாற்றுவேன், என் வில் வலியால் விதியையும் வெல்லுவேன் என்று பொங்கி யெழுந்த இலக்குமணனைச் சமாதானப்படுத்தி, வனவாசஞ் செய்யப் பதினான்கு ஆண்டுகள் காடேகச் சொன்னார் உன் தந்தை என்று சொன்ன கைகேயி சொல்லைத் தட்டாமல், இராமன் தன் தம்பி இலக்குமணனோடும் சீதையோடும் அயோத்தி நகரைக் கடந்து சென்றுவிட்டான்! தந்தை தசரதன் இறந்த செய்தி எதனையும் அவர்கள் அறிந்திலர்.

பின்னர், பஞ்சவடிவில் இராமரும் இலக்குமணரும் சீதையும் இருக்கும்போது, இராவணனது மாமன் மாரீசன், மாயமானாக, வந்து உலாவினான். அரக்கரின் மாயத்தை அறியாத சீதை, அந்த மானைப் பிடித்துத் தரும்படி கேட்டாள். இராமன் மானைப் பிடிக்கச் சென்று மறைந்து விட்டான். மாய மானாக வந்த மாரீசன், 'இலக்குமணா ஆபத்து' என்று சத்தமிட்டான். அண்ணனுக்கு 'ஒன்றும் வராது' என்று சொன்ன இலக்குமணனைச் சீதை கோபித்து அண்ணனைத் தேட அனுப்பினாள். விதி இலக்குமணனை அங்கிருந்து அகற்றியது.

இலக்குமணன் அப்போதும், ஒரு கோடு கீறி அதற்கு அப்பால் செல்ல வேண்டாமெனச் சீதைக்குப் புத்தி சொல்லி விட்டுப் போயிருந்தான்.

ஆனால், இராமனும் இலக்குமணனும் இல்லாத அந்த நேரத்தைக் கணித்து அங்கே வந்த இராவணனுக்கு அந்தக் கோட்டின் மகத்துவம் விளங்கிவிட்டது. அவன் வெளியே நின்றான். சீதை, சந்நியாசியாய் உருப்பெற்று வந்த அவனை உபசரிக்கவெனக் கோட்டைத் தாண்டிச் சென்றாள். இராவணன் இலகுவாக அவளைத் தூக்கிச் சென்றான். இதுவும் விதிதானே.

இவ்வாறு, ஜானகியும் இராமனும் வனவாசம் போனது விதியால் என்பது, அதன் பின்னர் நடைபெற்ற வாலிவதம், இராவணவதம் என்பவற்றை நோக்கும்போது உறுதியாதல் காண்க. இலக்குமணனுக்கு இராமர் கூறுவதாக, முன்னரே கம்பர் கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

**நதியின் பிழை அன்று நறும்புனல் இன்மை; அற்றே,**
**பதியின் பிழை அன்று; பயந்து நமைப் புரந்தாள்**
**மதியின் பிழை அன்று; மகன் பிழை அன்று; மைந்த!**
**விதியின் பிழை; நீ இதற்கு என்னை வெகுண்டது என்றான்.**
(கம்பர்)

மேலும், ஊழ்வினை (= முறைமை - விதி) உருத்து வந்து ஊட்டும் என்று இளங்கோவடிகள் கோவலன் கொலைப்பற்றிக் கூறுவதும், சந்திரமதி தாதியாக, அரிச்சந்திரன் சுடலைக் காவலனாக ஆனதும் ஆகிய இலக்கியங்கள் பலவும் விதியின் வலிமையைக் கூறி, விதியை வெல்ல உபாயம் எதுவும் இல்லை என,

**ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான் முந்துறும்.** என்ற வள்ளுவர் இலக்கணத்தை உறுதி செய்வது நாம் உணர்ந்து கொள்வோமாக.

# உள்ளத்தூய்மை

**37. உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.**

'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்; அனைத்தறன்....' என்று வரையறுத்து செய்த வள்ளுவப் பெருந்தகை, மனம் மொழி மெய் ஆகியவற்றின் தூய்மையுடனே ஒருவன் கருமம் ஆற்ற வேண்டும்; அதுவே, நல்ல அறமாகும் என்று திரிகரணசுத்தி பற்றி முக்கியத்துவங் கொடுத்துக் கூறியுள்ளார். அவற்றுள்ளும் மனம் என்பதை முதலாவ தாகவும் வைத்துள்ளார்; மனம் சுத்தமாக இருந்தால் சொல்லும் செயலும் நன்றாக இருக்கும் என்பது அவரது நம்பிக்கை ஆகும்.

ஒரு செயற்பாட்டுடன் சம்பந்தப்படும் இம்மூன்று மெய்ப்பாடுகளும் உடலின் வெவ்வேறு இடங்களிலிருந்து பிறப்பதால், ஒரே பொருள் கொண்ட மூன்று மொழிகள் வழங்குவதும் கவனிக்கத்தக்கதே.

அதாவது, உள்ளத்திலிருந்து வருவது உண்மை எனவும் மொழியால் வருவது வாய்மை எனவும் மெய்யி லிருந்து வருவது மெய்ம்மை எனவும் வழங்கப் பெறுவது காண்க.

எவ்வாறாயினும், 'உண்மைக்கு அரிச்சந்திரன்' எனப் போற்றப் பெறும் அரிச்சந்திரன் கதை மேற்படி திருக் குறளுக்கு மிகவும் பொருத்தமான இலக்கியமாக அமையும் என்பதால் அக்கதையை இங்கு பார்ப்போம்.

முன்னொரு காலத்தில், உண்மையன்றிப் பொய்யை எந்தச் சந்தர்ப்பத்திலும் பேசாத அரிச்சந்திரன் என்ற ஒரு அரசன் அயோத்தியிலிருந்து அரசாட்சி செய்தான். இவன் இன்று

வரை "உண்மைக்கு அரிச்சந்திரன்" என்று போற்றப் பெறுகின்றான்.

இந்த அரசன் காலத்தில், தேவலோகத்தில் இருந்த தேவர்கள் மத்தியில் ஒரு சந்தேகம் எழுந்தது. அதாவது, பூவுலகத்தில் உண்மையை அன்றிப் பொய் பேசாத மனிதர் யாராவது இருக்கிறார்களா என்பதுதான் அவர்களது சந்தேகம்.

அப்பொழுது சபையிலிருந்த வசிட்ட முனிவர் எழுந்து, "ஆம், பூவுலகத்தில் ஒருவன் இருக்கிறான்; அவன் பெயர் அரிச்சந்திரன்" என்றார். ஆனால், அங்கிருந்த விசுவாமித்திர முனிவர் எழுந்து, "இல்லை, அப்படி உண்மையே பேசும் ஒருவன் பூவுலகில் இருக்கிறானா?, அவனை எப்படியும் பொய் பேச வைக்கிறேன், முடியாவிட்டால், எனது தவத்தில் பாதியை இழக்கிறேன்" என்று சபதம் எடுத்துப் பூவுலகம் வந்து சேர்ந்தார்.

நேரே அரிச்சந்திரனுடைய மாளிகைக்குப் போன முனிவர், தான் தவஞ்செய்யப் போவதாகவும் அதற்குக் கொஞ்சம் பணம் தேவை என்றும் கேட்கிறார். அரசன் பணம் கொடுக்கிறான். ஆயினும், முனிவர் பணத்தை அவனிடம் திரும்பிக் கொடுத்துவிட்டு, "இதை இப்போது நீயே வைத்துக்கொள், தேவைப்படும்போது வந்து கேட்கிறேன்" என்று சொல்லிவிட்டு போய்விடுகிறார். சிலநாள் கழித்து அயோத்திக்குப் போன முனிவர், தனது தேவைக்கு அந்த அயோத்தி நகரத்தைத் தரவேண்டும் என்று கேட்க, அரசனும் 'தந்தேன்' என்று நகரத்தை முனிவரிடம் கையளித்தான்.

அரசனைச் சங்கடத்துக்குள் தள்ளிப் பொய்பேச வைப்பதே முனிவரின் திட்டம். அதனால், நகரைக் கைப்

பற்றிய முனிவர், தான் முன்னர் கொடுத்த பணத்தைத் தரும்படி கேட்கிறார்.

முனிவருக்கு எப்படிப் பணம் கொடுப்பது என்று அரசன் கணப்பொழுது சிந்திக்கிறான். இதனைத் தனக்குச் சாதகமாக்கி "பணம் இப்பொழுது இல்லாவிட்டால்," நீங்கள் என்னிடம் பணம் தரவில்லை என்று சொல்லு. நான் போய் விடுகிறேன்" என்கிறார்.

அ∴தெப்படி முடியும்? நீங்கள் பணம் தந்தது உண்மை. அதை எப்படியும் தருவேன், என்னோடு ஒருவரை அனுப்புங்கள் என்று அரிச்சந்திரன் கேட்டான். அதற் கிணங்கிய முனிவர், சுக்கிரன் என்பவனை அரிச்சந்திரனுடன் அனுப்புகிறார். காசி நகரிலே மனைவி சந்திரமதியையும் மகன் தேவதாசனையும் ஒரு பிராமண வீட்டில் வேலைக் காரராக விற்று, முனிவருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைச் சுக்கிரனிடம் கொடுத்தனுப்பினான் அரிச்சந்திரன். அப்பொழுது, தான் இதுநாள்வரை உடன்சென்றமைக்காகக் கூலி கேட்ட சுக்கிரனுக்கு, தன்னைத்தானே விலை கூறி விற்றுப் பணம் கொடுத்த அரிச்சந்திரன், அவ்வூரில் சுடலை காப்போனாகப் பணியாற்றினான்.

இ∴து இவ்வாறிருக்க, பார்ப்பன வீட்டில் வேலைக் கமர்ந்த சந்திரமதியும் மகனும் அங்கு மிகவும் துன்பப்பட்டு உழைத்தார்கள். அங்கு, அவ்வூரிலுள்ள வேறு சிறுவர்களோடு விறகு தேடிச் செல்லும் தேவதாசன், ஒருநாள், பாம்பு கடித்து இறந்து போனான்.

மாலையாகியும் வீடு திரும்பாத மகன், பாம்பு கடித்து இறந்ததாக கூடிச் சென்ற சிறுவர்கள் கூறக்கேட்ட சந்திரமதி, வீட்டுப் பணிவிடைகளை முடித்து, எஜமானனிடம் விடைபெற்றுக் கொண்டு காட்டுக்கு ஓடினாள். மற்றைய சிறுவர்கள் சொன்ன குறிப்பின் வழியே சென்று இலை

குழைகளால் மறைக்கப் பெற்றிருந்த தன்மகனின் உடலைக் கண்டுபிடித்தாள்.

இரவு நேரமாகிவிட்டது. மகனின் உடலைச் சுமந்து கொண்டு சுடலைக்குப் போனாள். அங்கே, எரிந்தும் எரியாமலும் கிடந்த கொள்ளிகளைப் பொறுக்கி அடுக்கி, அதன்மேல் மகனைக் கிடத்திக் கொள்ளி வைத்தாள் சந்திரமதி.

நெருப்புச் சுவாலையைக் கண்ட அரிச்சந்திரன், அங்கே ஓடிப்போனான். சுடலை காப்போனுக்கு முழத்துண்டும் காற் பணமும் கொடுக்காமல் பிணஞ்சுடுவது குற்றம். தனக்குச் சேரவேண்டிய பொருட்களைத் தராமல் பிணஞ் சுடுவது யார் என்று அதட்டியவாறு தீயை அணைத்தான்.

"நான் ஓர் ஏழை; என்னிடம் ஏது பணமும் பொருளும்" என்ற ஒரு பெண்ணின் குரல் கேட்டுக் கூர்ந்து கவனித்தான். "என்ன பொய் சொல்லுகிறாள். கழுத்திலே மாங்கல்யம் இருக்கிறதே" என்று சுடலைக் காவலாளி சொற்கேட்ட சந்திரமதி, "எனது கணவன் அரிச்சந்திரனுக்கன்றி வேறு யாருக்குந் தோற்றாத இந்த மங்கலம், இந்தப் புலையன் கண்ணுக்கு எப்படித் தெரிந்தது" என ஏங்கி அழுதாள்.

இதனால் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டனர். இறந்து கிடப்பது தங்கள் பிள்ளை என அறிந்து இருவரும் அழுது புலம்பினார்கள்.

நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தால் சத்தியம் என்னாவது? "சுடலைக்கு சேர வேண்டிய கூலியை, உன் எஜமானிடம் பெற்றுவா" எனச் சந்திரமதியை அனுப்பி விட்டான் அரிச்சந்திரன்.

சந்திரமதி தன் எஜமானன் வீடு நோக்கி செல்லும் போது, வழியில் ஒரு சிறுவனுடைய இறந்த உடல் கிடக்கக் கண்டாள். அது அவ்வூர் அரசனது பிள்ளை, அப்பிள்ளையைக் கடத்திக் கொண்டு வந்த கள்வர், அதன் ஆபரணங்களைக் களைந்துகொண்டு கொலை செய்து வீதியோரம் எறிந்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். மனங்குழம்பிய சந்திரமதி, அது தன்பிள்ளையினது உடல் என்று எண்ணி, அதனைத் தூக்கித் தன் மடியில் வைத்து அழுது கொண்டிருந்தாள்.

அரசனது பிள்ளையைத் தேடிவந்த காவலர்கள் இதனைக் கண்டார்கள். தானே அப்பிள்ளையைக் கொலை செய்ததாக ஒப்புக் கொண்டு விட்டாள். அரசன் அவளுக்கு மரணதண்டனை விதித்தான். அத்தண்டனையை நிறை வேற்றும்படி சந்திரமதியைச் சுடலைக் காவலாளியிடம் அரண்மனைக் காவலர் ஒப்படைத்தனர். இவற்றையெல்லாம் அறிந்து விசுவாமித்திர முனிவர், அந்தச் சுடலைக்கு ஓடிப் போனார். "நான் உன்னிடம் அன்று தந்த பணத்தைத் தரவில்லை என்று (பொய்) சொல்வாயானால், உனது இறந்த பிள்ளை அரசனது பிள்ளை எல்லோரும் உயிர் பெறச் செய்வேன். உனது இராச்சியத்தையுந் திருப்பித் தருகிறேன். மனைவி மக்களோடு இன்புற்று வாழ்வாய்" என்று மிகவும் மன்றாட்டமாகக் கேட்டார்.

அரிச்சந்திர மன்னனது கோபம் எல்லை கடந்து விட்டது. 'பதி இழந்தனம், பாலனை இழந்தனம், படைத்த நிதி இழந்தனம் இனி நமக்கு உளதென நினைக்கும் கதி இழக்கினும் கட்டுரை (சத்தியம்) இழக்கிலோம்' என்று உறுதிபடக் கூறினான். விசுவாசமித்திரர் சொல்வதறியாது நிற்க.

'பெண்ணே, நீ உன் இஷ்ட தெய்வத்தை வேண்டிக் கொள். சத்தியம் எமது இலட்சியம்' என்று கூறிச் சந்திரமதியின் கழுத்தைக் குறிவைத்து வெட்டினான். வாள் அவள் கழுத்தில் மாலையாக விழுந்தது.

விசுவாமித்திர முனிவரும் வேறு தேவரும் அரிச்சந்திரனையும் சந்திரமதியையும் வாழ்த்தினர்.

"உண்மைக்கு அரிச்சந்திரன்" என்று அரிச்சந்திரன் வான்புகழ் பெற்று இன்றும் வாழ்கின்றான்.

விசுவாசமித்திரரும் தவத்தில் பாதியை இழந்து வானுலகந் திரும்பினார்.

**உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**

**உள்ளத்துள் எல்லாம் உளன்.** என்னும் வள்ளுவர் இலக்கணத்துக்கு இலக்கியமாக அரிச்சந்திர மன்னன் கதை என்றும் வாழ்கிறது.

இக்கதை நாடகத்தை இளம் வயதில் கண்டு உணர்ந்த காந்தியடிகள், சத்தியவந்தனாக மகாத்மாவாக உயர்ந்து வாழ்ந்தார் என்பது நாம் அறிந்த உண்மையாகும்.

# முற்பகல் செய்யப் பிற்பகல் விளையும்

**38. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.**

நாம் முற்பிறப்பில் பிறருக்குத் தீமை செய்திருந்தால், இப்பிறப்பில் எமக்கு தீமையான வாழ்வே அமையும் என்பது பெரியோர் வாக்கினாலும் எமது பட்டறிவினாலும் அறியும் உண்மையாகும்.

**முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்.**

என இளங்கோவடிகள் கண்ட இலக்கியத்துக்குத் திருவள்ளுவர்.

**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.**

என்று இலக்கணம் வகுத்துள்ளமை நோக்கத்தக்கது.

சிலப்பதிகாரக் கோவலன், முற்பிறப்பிலே பரதன் என்ற காவலாளியாக வாழ்ந்துள்ளான். அப்பொழுது, சிங்கபுரத்தை ஆட்சி செய்த வசு என்பவனும், கபிலபுர அரசன் குமரன் என்பவனும் தம்முள் பகை கொண்டிருந்தார்கள்.

ஒருநாள், சிங்கபுரக் கடைத்தெருவில் சங்கமன் என்னும் வணிகன் வியாபாரஞ் செய்து கொண்டிருந்தான். சங்கமன் கபிலபுர அரசனான குமரனின் ஒற்றன் என்று சிங்கபுர அரசனுக்குச் சொல்லிக் கொடுத்து, காவலாளியான பரதன் அச்சங்கமனைக் கொலை செய்துவிட்டான். சங்கமன்

அநியாயமாகக் கொல்லப்பட்டதனால், அவனது மனைவி நீலி என்பாள் துயரமுற்று, இப்பிறப்பில் எனக்குத் துன்பஞ் செய்தோர் மறுபிறப்பில் என்னைப்போல் துன்பம் அடைவார்களாக எனச் சாபமிட்டு, ஒரு மலைமீது ஏறி உயிர்விட்டாள்.

அந்தப் பரதனே இப்பிறப்பில் கோவலனாகப் பிறந்து ள்ளான். கோவலனுக்கு மனைவியாக வாய்த்த கண்ணகி நீலி பட்ட துன்பத்தைப் போலத் துன்பப்பட்டாள். கோவலன், அரண்மனைச் சிலம்பு திருடியதாகக் குற்றஞ் சாட்டப் பெற்றுக் கொலை செய்யப் பெற்றான்.

"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்று இளங்கோ அடிகள் இதனைச் சுட்டிக் காட்டுவது நம் சிந்தனைக்குரியதே.

**மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறஞ் சூழும் சூழ்ந்தவன் கேடு.**

என வள்ளுவனார் பிறிதோரிடத்தில் இதனை வலி யுறுத்துவதும் காண்போமாக.

# அன்பின் வழி வாழ்க்கை

**39. அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.**

பிற உயிர்களிடத்திலே அன்பு வைத்திருக்கும் ஒருவர், அந்த அன்பு காரணமாகத் தனது என்பை (எலும்பை)யே கொடுப்பர் என்பதனால், உயிர் முதலிய வேறு எந்தப் பொருளையும் கொடுக்கத் தயங்கமாட்டார்கள் என்பது பொருள்.

இதற்கு நமது புராண, இதிகாச இலக்கியங்களில் பல எடுத்துக் காட்டுகளைக் காணலாம்.

பிறப்பிலே வேடரான திண்ணனார் என்பவர், இறை வனிடத்தில் கொண்ட அன்பின் முதிர்ச்சி (பக்தி)யினால், தனது கண்மணியைத் தோண்டி இறைவன் கண்ணுக்கு அப்பியதால் கண்ணப்பர் ஆன கதை நாம் அறிந்ததே,

தொழில், உணவுத் தேவைக்காக வேட்டையாடுத லாயினும், ஜீவகாருண்யம் உள்ள திண்ணனார், இறையன்பு காரணமாக, காளத்தி நாதருக்கு ஊனை அமுதாகப் படைத்தார். தொடர்ந்து ஆறுநாள் பூசனைத் தொண்டு செய்து, பூர்வ புண்ணியப் பயனுஞ் சேர்ந்து, இறையருளுக்குப் பாத்திரரான இவரை, அவரின் பக்திநெறியை, உலகுக் குணர்த்தியருளத் திருவுளங் கொண்ட இறைவன், தமது கண்ணிலிருந்து இரத்தம் வடியச் செய்தார்.

இன்று, விஞ்ஞான உலகங் கண்டறிந்த அறுவைச்

சிகிச்சை முறை அன்று திண்ணனார் உள்ளத்தில் உதித்தது. தனது கண்மணியை அம்பினால் தோண்டி எடுத்து, இரத்தஞ் சொட்டிய இறைவன் கண்ணிலே அப்பினார். இரத்த ஓட்டம் நின்றது. ஆறுநாள் தொண்டு செய்தே கண்ணைப் பிடுங்கி ஒட்டக் கூடிய அளவுக்கு அவரது அன்பின் ஆழத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி**
**வண்ணப் பணித்தென்னை வாஎன்ற வான்கருணைச்**
**சுண்ணப் பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"**

என்று திருவாதவூரடிகள், கண்ணப்பன் செய்த அன்பினுக்குத் தனது அன்பு ஈடாக மாட்டாது என்று பாடுகின்றமை காண்க.

இன்னும் வேடன் ஒருவன், இறைச்சிக்காக ஒரு புறாவைப் பிடித்துக் கொண்டு போவதைக் கண்ட சிபி என்ற மன்னன், புறாவின் உயிரைப் பறிக்காமல் அதனை விட்டுவிடும்படி கேட்டான். எனது உணவுக்காகப் பிடித்த புறாவை எப்படி விடலாம். எனது உணவுக்கு என்ன செய்வேன் என்று மறுத்துச் சொன்னான்.

அப்படியானால், புறாவின் எடையளவு இறைச்சி கிடைத்தால் புறாவுக்கு விடுதலை கொடுப்பாயா என்று மன்னன் கேட்டான். அதற்கு வேடன் உடன்பட்டான்.

சிபிச்சக்கரவர்த்தி தனது உடம்பிலிருந்து தசையை வெட்டித் தராசில் இட்டான். புறாவின் நிறை கூடுதலாக இருக்கவே மேலும் பல துண்டுகளை வெட்டிப் போட்டான் எடை சரியாக வரவில்லை. அதனால் தராசுத் தட்டில் தானே ஏறி நின்றான். இப்பொழுது இருபக்கமும் சமன்

செய்து தராசு நின்றது. ஆனால் அப்பொழுது புறாவோ வேடனோ அங்கிருக்கவில்லை.

இக்கதை ஒரு உயிருக்காகத் தனது உயிரைக் கொடுக்க எண்ணிய ஒரு மன்னனது அன்பின் திறத்தை நாம் உணரச் செய்கிறது.

மேலும், தசீசி என்ற முனிவர், தமது முதுகெலும்பையே தானஞ் செய்து தன்னுயிர் நீத்த வரலாறும் நமது இலக்கியங்களிலே கூறப் பெற்றிருப்பது மனங் கொள்ளத் தக்கது.

இவ்விதமாக அன்பின் நிமித்தம் ஒருவர் என்பையும் உயிரையுங் கொடுப்பார் எனக் காட்டி, அன்பினால் எதனையும் செய்யலாம், உலகையே ஆளலாம் என்பதற்கு இலக்கணம் வகுத்துள்ளார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

**அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.** என்பது குறள்.

அன்பிலார் தமக்காகவே வாழ்வார், அன்புடையார் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர். அதனால் அன்புடையவர் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் பிறருக்கு உரியதாக்கி வாழ்வார்கள். அதுவே வாழ்வியல் என அறிவுறுத்துகின்றார் வள்ளுவனார்.

# அடக்கலாகா அன்பு

**40. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண் ணீர் பூசல் தரும்.**

*நா*ம் ஒருவரிடத்திலே வைத்துள்ள அன்பை, அணை போட்டு அடக்கிவிட முடியாது. அன்பின் வெளிப்பாட்டை ஒருவழியில் மறைத்துவிட முயன்றாலும், நமது கண்களி லிருந்து வெளிப்படும் கண்ணீரானது அன்பின் உண்மையை மற்றவர்களுக்குக் காட்டிக் கொடுத்துவிடும். இதனை நாம் நமது வாழ்வில் அனுபவ மூலம் அறியலாம். தெய்வப் புலவர் திருவள்ளுவரும் தமது அன்புடைமை என்னும் அதிகாரத்தில் அன்பின் வலிமை பற்றி வலியுறுத்தியுள்ளார்.

இலக்கியங்களிலும் அன்பின் திறம்பற்றிய கதைகள் பலவற்றைக் காணலாம். எடுத்துக் காட்டாக இங்கே நளமகாராசன் கதையில் ஒரு நிகழ்ச்சியை எமது கவனத்திற் கொள்வோம்.

இந்தியாவிலே, நிடத நாட்டிலே நளமகாராசன் என்ற சிற்றரசன் ஒருவன் அரசாட்சி செய்தான். அவன், விதர்ப்ப நாட்டு மன்னன் வீமராசனது மகள் தமயந்தியை மணஞ் செய்து வாழ்ந்து வந்தான். பன்னிரண்டாண்டு ஒரு குறையுமின்றி அவர்களுடைய வாழ்வு அமைந்திருந்தது.

ஒருநாள், அவனது அரண்மனைக்கு வந்த புட்கரன் என்ற ஒரு அரசனோடு சூதாடித் தனது நாடு நகரங்களை இழந்தான். அதனால் தனது மனைவி மக்களோடு நாட்டை விட்டு வெளியேறினான்.

பிள்ளைகளை வீமராசன் வீட்டுக்கு அனுப்பிட்டுத் தனது மனைவியோடு அயலூர் போகப் புறப்பட்டான். காட்டுவழியில் ஒரு பாழ் மண்டபத்தில் இராப் பொழுதைக் கழிக்கவெனத் தங்கினார்கள். தான் செய்த குற்றத்துக்காக

மனைவியும் கஷ்டப்படுவதை விரும்பாத நளன், தமயந்தியை உறக்கத்தில் விட்டுப் பிரிந்து சென்றுவிட்டான்.

கணவனால் கைவிடப்பட்ட தமயந்தி ஒருவாறு தனது தந்தையின் ஊரான விதர்ப்ப நாட்டுக்குச் சென்று பிள்ளைகளோடு சேர்ந்துவிட்டாள்.

காட்டிலே அலைந்த நளமகாராசனுக்கு ஒரு பாம்பு கடித்துவிட்டது. அதனால் அவனது உடல் கறுத்து உருவம் மாறியது. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி அவன் இருதுபன்னன் என்னும் அயல் நாட்டு மன்னனின் தேர்ச் சாரதியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தான்.

இவ்வாறு இருக்கையில் தமயந்தி, தனது கணவனைத் தேடும் பணியில் ஒற்றர்களைப் பல ஊர்களுக்கும் அனுப்பினாள். அதன் பயனாக இருதுபன்னனுடைய அரண்மனையில் நளமகாராசனைப் போன்ற உருவத்தில் ஒருவர் இருப்பதாகத் தமயந்தி அறிந்து கொண்டாள். தேர்ச் சாரதியாகத் தொழில் புரியும் அந்த மர்ம மனிதன் பற்றித் தனது தந்தையிடம் கூறிய தமயந்தி, இருதுபன்ன மன்னனை விதர்ப்ப நாட்டுக்கு வரச்செய்வதற்கு உபாயந் தேடினாள்.

அதற்கேற்ப, நளமகாராசனைப் பிரிந்த தமயந்தி, இரண்டாம் சுயம்வரம் நடாத்த இருப்பதாகவும், அதில் கலந்து கொள்ளப் பல தேசத்து அரசர்களுக்கும் அழைப்பு அனுப்பப் பெற்றதாகவும் இருதுபன்ன அரசனது நகரத் தெருக்களிலே ஒற்றர்மூலம் கதை பரவச் செய்தாள்.

முதலாவது சுயம்வரத்தில் பங்குபற்றி, தமயந்தியை அடைய முடியவில்லையெனக் கவலையோடு சென்ற இருதுபன்னனுக்கு இந்தச் செய்தி மிகவும் மகிழ்ச்சி தந்தது.

நளமகாராசனோ தன்னை அங்கு வரச்செய்வதற்காகத் தமயந்தி செய்த ஏற்பாடாகவே எண்ணினான். தமயந்தி இரண்டாம் சுயம்வரத்தை விரும்பமாட்டாள் என்பதில் அவனுக்கு உறுதியான மனம் உண்டு.

ஆயினும், இருதுபன்னன் சொற்படி, தேர் செலுத்திச் சென்ற நளன், விதர்ப்ப நாட்டரச மாளிகையில் அரசனை இறக்கிவிட்டதும் வழமைபோலத் தனது சமையல் வேலையில் ஈடுபட்டான்.

சமையல் செய்வதில் சிறந்தவனாக நளமகாராசன் புகழ் பெற்றான். சிறந்த சமையல் முறைக்கு "நளபாகம்" என்று கூறுவது கவனிக்கத்தக்கது.

விதர்ப்பராசன் மாளிகைக்குள் இருதுபன்னன் நுழைந்தபோது, அங்கு சுயம்வரத்துக்கான அடையாளங் களோ, அன்றி வேறு தேசத்து அரசர்களின் பிரசன்னமோ எதுவும் இருக்கவில்லை. ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல், நட்புரிமையுடன் வந்திருப்பதாகக் கூறி, அரசன் உரையாடிக் கொண்டிருந்தான்.

அந்த நேரம், தமயந்தி தன் பிள்ளைகளைத் தேர்ச் சாரதியிருக்கும் இடத்துக்கு அனுப்பி வைத்தான்.

கார்க்கோடன் பாம்புக் கடியினால், உடல் கறுத்தாலும் உள்ளம் வெள்ளையாய்க் கொண்ட நளன், பிள்ளைகளைக் கண்டதும் கண் கலங்கி நின்றான்.

எங்கள் அரசை இன்னொருவன் கவர்ந்துவிட்டான். அதனால் இங்கே வந்து வாழ்கிறோம் என்று சொன்ன பிள்ளைகளைப் பார்த்து, அப்படி ஒருவன் ஆளவிட்டு இங்கே இப்படி வந்திருத்தல் முறையோ என்று நளன் கேட்டான்.

"மன்னனுடைய குணநலம் உன்போல் சமையல் காரனுக்குத் தெரியாது" என்று இந்திரசேனன் என்ற நளமகாராசனது மகன் துடுக்காக தந்தையைக் கேட்டு விட்டான்.

அதனால், நிலைகுலைந்த நளமகாராசன்,

**மன்னர் பெருமை மடையர் அறிவரோ**
**உன்னை அறியாது உரைசெய்த - என்னை**
**முனிந்தருளல் என்று முடிசாய்ந்து நின்றான்**
**கனிந்துருகி நீர்வாரக் கண்.**

அன்பிற்கு அணைபோட முடியாமல் நளமகாராசன் நின்ற போது இவற்றை அவதானித்த ஒற்றர், தமயந்தியிடம் சென்று, பிள்ளைகளுக்கும் சமையற்காரனுக்குமிடையில் நிகழ்ந்த உரையாடல், கண்ணீர் மல்கி நிற்றல் என்பன பற்றிக் கூறினார்கள்.

அன்பின் வெளிப்பாட்டை ஒருவன் மறைக்க எவ்வளவு முயன்றாலும், அணைகடந்த வெள்ளம்போல் அவனது கண்ணீர் வெளிப்பாடு அதனைக் காட்டிக் கொடுத்துவிடும் என்பதை இந்த இலக்கியம் நமக்குக் காட்டுகின்றது. அன்பிற்கு இலக்கணம் கூறவந்த திருவள்ளுவரும்,

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கண் ணீர் பூசல் தரும்**

என்று தொடங்கி மேலும் பல குறட்பாக்களைப் பாடிச் செல்கிறார்.

சோமேசர் முதுமொழி வெண்பாப் பாடிய புலவர், இந்த நளமகாராசன் கதையில் வரும் அன்பின் வெளிப் பாட்டிற்குத் திருவள்ளுவருடைய மேற்படி குறட்பாவை மாற்றம் இன்றி இணைத்துத் தனது பாடலைப் பூர்த்தி செய்திருப்பது மனங் கொள்ளத்தக்கது.

**தோன்றா வகை கரந்தும் தோன்றலைக்கண் டுள்நெகிழ்ந்து**
**தோன்ற நின்றான் முன்புநளன் சோமேசா - தோன்றுகின்ற**
**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கண் ணீர் பூசல் தரும்.**

## நீத்தார் பெருமை

**41. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும் புளார்கோமான்**
**இந்திரனே சாலும் கரி.**

ஐம்புலன்களாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவைகளை அடக்கி ஆளும் வல்லமையுள்ளவர்கள் முனிவர்கள். அவர்கள், வாழ்த்தினால் நன்மையும், சினத்தால் தீமையும் உண்டாகும். எப்படியான பெரிய நிலையில் உள்ளவர்களும் ஐம்புலன்களை வென்ற ஆற்றல் படைத்தவர்களை வெல்ல இயலாது.

இந்த வகையில், நமது புராண, இதிகாச, இலக்கியக் கதைகளில் நிறைய எடுத்துக் காட்டுக்களைக் காணலாம்.

கௌதம முனிவர் தமது மனைவி அகலிகையோடு வனத்தில் தவஞ் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார். தேவலோக அதிபதியான இந்திரன், அந்த அகலிகை பற்றிக் கேள்விப்பட்டான். அவள்மேல் மோகங் கொண்டு, எப்படியும் அவளை அடைய வேண்டும் என எண்ணினான்.

முனிவரது தவவலிமை அவன் அறியாத ஒன்றல்ல. எனவே, முனிவர் தவச்சாலையில் இல்லாத நேரம் ஒன்றை அவனே உருவாக்கினான்.

அதிகாலையில் பூப்பறிக்க முனிவர் வெளியே செல்வது வழக்கம். சேவல் கூவும் நேரம் அவர் புறப்படுவார். அதனால் ஒரு விடியற்காலையில் சேவலைப் போலக் கூவிவிட்டான். சேவலை முந்திக் கொண்டு அவசரப்பட்டுக் கூவியதால் பூக்கள் மலர்ந்திருக்கவில்லை. பூப்பறிக்கப்

போன முனிவருக்கு இது மர்மமாகியதால் உடனும் திரும்பி குடிசைக்கு வந்தார்.

பூப்பறிக்க முனிவர் புறப்பட்ட கையோடு இந்திரன் குடிசையின் உள்ளே நுழைந்தான். தனது முனிவர் வருகிறாரென வாசலுக்கு வந்த அகலிகை, திடீரென வந்து நின்ற இந்திரனைக் கண்டு திகைத்து நிற்கவும், அகலிகையோடு ஆசைமொழி கூறி இரந்து இந்திரன் நின்ற கணப் பொழுதில் முனிவரின் காலடியோசை இருவர் காதிலும் கேட்டது.

திடுக்குற்ற இந்திரன், பூனை உருவில் வெளியேற முற்பட்டபோது, உண்மையுணர்ந்த முனிவர் அவனைத் தடுத்து நிறுத்திவிட்டு உள்ளே போனார். "நீங்கள் இல்லாத நேரம் நயவஞ்சகமாக இந்திரன் உள்ளே வந்தான். என்மேல் தவறில்லை" என அகலிகை கூறிய சமாதானத்தை முனிவர் பொருட்படுத்தவில்லை. அகலிகை சாபம் பெற்றுக் கல்லானாள். கல்லாக மாறிய அகலிகை, தன்னை மன்னித்தருள வேண்டுமெனக் கேட்டபொழுது, "பிற்காலத்தில் ஒரு குணவானின் பாதம் பட்டு, நீ பழைய உருவில் என்னிடம் வந்து சேர்வாய்" எனச் சாபவிமோசனம் வழங்கினார் முனிவர்.

தன்னை ஏமாற்றவென முதலில் சேவலாகவும் பின்னர் பூனையாகவும் உருவெடுத்த இந்திரன் பக்கம் போன முனிவர், "ஒரு யோனிக்காக இரு யோனி உருவெடுத்த உனக்கு, உடம்பெல்லாம் ஆயிரம் யோனிக்கண் உண்டாகட்டும்" என்று சாபமிட்டார். இந்திரன் வெட்கத்தில் கூனிக் குறுகி நின்றான்; தனக்கு விமோசனம் அளிக்குமாறு முனிவரை இரந்தான்.

சிறிது மனமிரங்கிய முனிவர், "ஏனைய தேவர்களுக்கு இவை சாதாரண கண்களாகவே தெரியும் என்றும், உனக்கு மாத்திரம் யோனிக் கண்களாகத் தெரியும்" என்றும் விமோசனம் வழங்கி இந்திரனை அனுப்பிவிட்டார்.

ஐம்புலன்களை அடக்கி ஆளும் ஆற்றல் படைத்த முனிவர் பற்றிக் கூறவந்த தெய்வப் புலவர், கௌதம முனிவரிடத்தில் இந்திரன் சாபம் பெற்ற கதையையே இலக்கியங் கண்டதையே இலக்கணமாக்கி குறள் வெண்பா அமைத்துவிட்டார்.

**ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும் புளார்கோமான்**
**இந்திரனே சாலும் கரி.** என்பது குறள்.

ஐந்தவித்தான் (ஐம்புலன்கள் வழியாக எழும் ஆசைகளை வென்றவன்) ஆற்றலுக்கு, தேவர் தலைவனாகிய இந்திரனே சால்புடைய சாட்சி என்பது இக்குறள் தரும் பொருளாகும்.

விசுவாமித்திர முனிவரோடு சென்ற இராமனின் பாதம் பட்டு, (கல்லாகிக் கிடந்த) அகலிகை விமோசனம் பெற்றுத் தனது கௌதம முனிவரைச் சென்று சேர்ந்தாள் என்பது கதை.

## தீமை அற்றது அறம்

**42. அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்.**

'அறம் செய்ய விரும்பு' என்ற ஔவையாரின் தொடரை, ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு விளக்கும்போது, அறம் என்றால் புண்ணியம்; புண்ணியஞ் செய்ய விரும்புங்கள் என்று சொல்லுவோம். எதனை விரும்பக் கூடாது என கேட்டால் பாவஞ் செய்தலை விரும்பக் கூடாது என்போம். ஆம், "புண்ணியம் ஆம் பாவம் போம்...." என்று ஒரு நீதிப்பாடல் உண்டல்லவா? "புண்ணியம் செய்யத்தக்கது, பாவம் விடத்தக்கது" என்பது அதன் பொருள்.

ஆனால், வாழ்க்கையில் நாம் செய்கின்ற எல்லாக் கருமங்களும் அறங்கள்தாம். அவை இல்லறம் துறவறம் என்றோ, நல்லறம் தீயறம் என்றோ இருக்கலாம். இவற்றுள் தீய அறங்களை உலகம் விரும்பவில்லை. நல்ல அறங்களை இல்லறத்திலும் துறவறத்திலும் இருந்து கொண்டு செய்வதே வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் செய்ய வேண்டிய செயற்பாடு ஆகும்.

நல்ல அறங்களைச் செய்தல் தனக்கும் பிறர்க்கும் பொதுவாக உலகத்துக்கும் நன்மை பயப்பதாக அமைய வேண்டும்.

அந்த வகையில் ஒருவனிடம் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் நான்கும் இருக்கக் கூடாது.

பொறாமை என்று சொல்லப் பெறும் அழுக்காறு

ஒருவனுக்குப் பேராசையைக் கொண்டு வரும். பேராசை யினால் மற்றவரிடத்திலே கோபமும், கோபத்தினால் கடுஞ் சொல் எனப்பெறும் இன்னாச் சொல்லும் பிறக்கும். இவை நிகழ்ந்தால் அங்கே அறம் நல்லறமாக நடைபெறாது தடைப்படும்.

ஆக நாம் செய்வது நல்லறமாக இருப்பதற்கு நமது மனம் மேற்படி குற்றங்கள் இல்லாத, மாசில்லாத மனமாக இருப்பது அவசியமாகிறது. இதனையே திருவள்ளுவர், “மனத்துக்கண் மாசு இலன் ஆதல்; அனைத்து அறன்” என்கின்றார். நல்ல அறத்தைச் செய்வதற்குப் பணமோ பண்டமோ அவசியமில்லை. மனம் சுத்தமில்லாது, பெரும் பொருள் செலவு செய்து செய்யும் செயல்கள் வெறும் ஆடம்பரங்களேயன்றி வேறு ஒரு நன்மையுந் தரமாட்டா.

இதற்கு நமது இலக்கியங்களிலேயும் புராண இதிகாசங்களிலேயும் பல எடுத்துக் காட்டுகள் இருப்பதை நாம் அறிந்து கொள்வோமாக.

இங்கே ஒரு புராண வரலாற்றைப் பார்ப்போம்.

தக்கன் என்பவன், பூர்வ புண்ணியத்தின் பலனாகத் தவஞ்செய்து பெரிய யாகங்களையுஞ் செய்தான்.

உமாதேவியாரே தனக்கு மகளாகப் பிறக்க வேண்டும் எனத் தவம் முயன்று, அவ்வாறே பெற்றான். சிவபெரு மானுக்குத் தன் மகள் தாட்சாயணியை மணஞ் செய்து கொடுத்தான். ஆனால், தான் தவவலிமை பெற்று விட்டேன் என ஆணவ முனைப்புக் கொண்டான். சிவபெருமானிலும் தான் பெரியவன் என்று நடக்க முயன்றான். கபாலம் ஏந்திப்

பிச்சை எடுக்கும் சிவனுக்குத் தான் பெண் கொடுத்ததே தவறு என்ற அளவுக்குப் பேராசையும் கோபமும் கடுஞ் சொல்லும் உடையவனாக மாறினான். அதனால் அவன் செய்த யாகத்துக்குச் சிவபெருமான் பங்குபற்றவில்லை.

சிவபெருமானிடம் பெற்ற தவவலிமையினால் செருக்கு அடைந்த தக்கன் சிவபெருமானையே நிந்திப்பதா? சிவபெருமான் வீரபத்திரரை ஏவி அவனையும் அவனது தவவலிமையையும் அழித்தார்.

பூர்வ புண்ணியத்தால் ஒரு பிறவியில் தவவலிமை பெற்ற தக்கன் அப்பிறவியில், அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் என்பன உடையவனாக மாறியமையாகும். விதி அவனிடம் தோன்றிவருகையில், தக்கன் 'விதி' என்ற நிலைக்கு உதாரணமாகி நிற்கிறான்.

ஒருவனிடம் எவ்வளவு தவவலிமையோ பிறவலிமையோ இருந்தாலும், பின்னர் அவனிடம் உண்டாகும் தீய ஒழுக்கத் தால் பயனற்றுப் போகும் என்பதை,

**தக்கனார் வேள்வித் தவத்தை மேற் கொண்டிருந்தும்**
**தொக்க அறமாயிற்றோ சோமேசா - மிக்க**
**அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்.**

எனத் தக்கனை உதாரணமாகக் காட்டி சோமேசர் முதுமொழி வெண்பாப் பாடல் அமைந்திருப்பதனையும்,

**அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்**

எனத் திருவள்ளுவர் கூறிய அறத்துக்கான இலக்கணம் அங்கே கையாளப் பெற்று இருப்பதனையும் உணர்ந்து பயன் பெறுவோமாக.

## நட்பின் பயன்

**43. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு.**

சமூக வாழ்வில் எல்லோரிடமும் அன்பு கொண்டு பண்புடன் பழக வேண்டியது அவசியமாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற எண்ணத்துடன் வாழ வேண்டும். அப்போதுதான் தனது வாழ்வு சிறப்பாய் அமையும்; சமூகமும் ஊரும் சிறப்படையும்.

இவ்வாறு நாம் வாழ்ந்து வரும்போது, நம்மிடையே ஒத்த உணர்வும் அறிவும் உள்ளவர்களுக்கிடையில் நட்பு நிலை ஏற்படும் வாய்ப்பு உண்டாகும். இதனை வள்ளுவனார்,

**புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சிதான்**
**நட்பாங் கிழமை தரும்.** என்கிறார்.

சீதையைத் தேடிச்சென்று கொண்டிருந்த இராமலக் குமணர்கள், அனுமன் சுக்கிரீவன் ஆகியோருடன் நட்புக் கொண்டார்கள். சுக்கிரீவனும் தனது மனைவியை இழந்து, தமையன் வாலிக்குப் பயந்து மறைந்து வாழ்ந்தவன். அந்த நிலையில் இரு பகுதியாருடைய மனஉணர்ச்சி அவர்களை நட்பு கொள்ளத் தூண்டியது. அதனால் ஒருவருக்கொருவர் உதவி செய்து நன்மை அடைந்தார்கள்.

கர்ணனை அரசுரிமை கொடுத்து உயர்த்தி வைத்தவன் துரியோதனன். அதனால் துரியோதனனிடம் நட்புப் பூண்டு அவன் செய்த உதவிக்கு நன்றிக் கடனாகப் போர் செய்து தனது உயிரையும் கொடுத்தான்.

ஜான்சன் என்ற ஆங்கில அறிஞனின் அறிவு, பண்பாடு பற்றி அறிந்து கொண்ட பாஸிவெல் என்ற

அறிஞன், ஸ்கொட்லாண்டிலிருந்து லண்டன் நகருக்குச் சென்றான். ஆயினும், ஜான்சன் அவரை அவ்வளவுக்கு உற்சாகங் காட்டி வரவேற்கவில்லை. பாஸிவெல் ஒருவாறு சமாளித்துக் கொண்டு அவரோடு தங்கினார்; பழகினார். சிறிது காலஞ் செல்ல, அவர்கள் மத்தியில் உண்டான புரிந்துணர்வினால் நட்பு ஏற்பட்டது. ஜான்சனின் வாழ்க்கை வரலாற்றைப் பாஸிவெல் எழுதும் அளவுக்கு அவர்களின் நட்பு வேரூன்றியது.

படிக்கப் படிக்கச் சுவைதரும் இலக்கியம்போல் நல்லோர் நட்பு பழகப் பழக இனிமை பயக்கும் என்பதை,

**நவில்தொறும் நூல் நயம்போலும் பயில்தொறும்**
**பண்புடையாளர் தொடர்பு.**

என்னும் குறள் மூலமும், அவ்வாறு நட்புக் கூடிய புலவர்கள் ஒருவரையொருவர் பிரிந்து செல்லும் நிலை ஏற்படும்போது, தமக்குள் மிகவும் மனவேதனைப்படுவர் என்பதனை,

**உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்.**

என மிகுந்த வேதனையுடன் தெய்வப் புலவர் வெளிக்காட்டி யிருக்கிறார் என்பதனை நாம் உணர்ந்து கொள்வோமாக.

ஆகவே நமது வாழ்வு சிறப்பாய் அமைவதற்கு உதவியாக இருக்கக் கூடியதான ஒரு செயற்பாடாக நாம் எல்லோருடனும் நட்புக் கொண்டு வாழத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது வள்ளுவர் நமக்குக் கூறிச்சென்ற வழிமுறையாகும்.

**செயற்கரிய யாவுள நட்பின், அதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு.**

# இல்வாழ்க்கையில் அன்பு

**44. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**

உயிர் இனங்கள் ஒன்றாய்க் கூடி வாழ்வதற்கு அன்பு தேவை. அன்பின் வழியது உயிர்நிலை. உயிர்களுள் மனித இனம் சேர்ந்து வாழ முற்படும்போது அன்பின் அவசியம் மிகவும் வேண்டப்படுகிறது. மனித வாழ்விலும், தாய் தந்தையர், பிள்ளைகள், உறவுகள், அயலார் என்று ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு விதத்தில் அன்பு வைக்கப்படுகின்றது. எனினும், முன்பின் தெரியாத, தெரிந்தும் அன்பினால் பிணைக்கப்படாத ஆண், பெண் திருமண பந்தத்தில் இணைந்து இல்வாழ்க்கை என்னும் வாழ்வியலுள் நுழையும்போது 'அன்பு' அங்கே மிகவும் அவசியமாகிறது.

இல்வாழ்க்கையில் இணையும் ஆணும் பெண்ணும் இல்லறம் என்று சொல்லப்படும் நெறிமுறைகளைச் செய்து வாழவேண்டும்.

ஆக, இல்லறத் தலைவன் தலைவியருக்கு, அவர்கள் தமக்குள் கொண்டிருக்க வேண்டியது அன்பு; அதுதான் அவர்களின் பண்பு. அவர்கள் செய்ய வேண்டியது அறம். அதுதான் இல்லறத்தின் பயன். எனவே இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் முறையே அன்பும் அறனும் என்று கூறுகின்றார். வையத்துள், வாழ்வாங்கு வாழ வழிமுறை வகுத்த வள்ளுவனார்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது.** என்பது குறள்.

'திரு' என்று அடைமொழி சொன்னால், அது பக்தி நெறியை, புனிதத் தன்மையை, செல்வத்தைக் குறிப்பதாய் இருக்கும். திருமணம் என்று சொல்லும்போது திருமணத்தில் கடவுள் பக்தியும், புனித வாழ்வும், செல்வ நிலையும் ஆகிய எல்லாம் பொருந்தி இருத்தலே சிறப்பாய் இருக்கும். அந்த மங்கலமான மனைமாட்சிக்கு நன்கலமாக நன்மக்கட் பேறு சொல்லப் பெறுகின்றது. இந்த இல்வாழ்க்கையின் பயன்களில் ஒன்றாய் அமையும் மக்கட்பேறு என்பது, ஆண் பெண் தமக்குள் அன்பு கொள்வதற்கு ஆதாரமாய், இயற்கையாய் அமைந்துள்ளது. கண்கள் இரண்டும் ஒரு பொருளையே காண்பதுபோலக் காதல் மனையாளும் காதலனும் தம்முள் மாறுபாடின்றி நல்ல கருமங்களைச் செய்ய வேண்டும்.

இந்த வகையில் பழைய இலக்கியங்களிலிருந்து கணவன் மனைவியர்களுக்கிடையில் இருந்த அன்பும் அறனும் பற்றிப் பார்ப்போம்.

இராமனும் சீதையும் இல்லற வாழ்வில் இணைந்து பன்னிரண்டாண்டு இன்பமாய் வாழ்ந்தபின், இராமன், வனவாசஞ் செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. அப்பொழுது சீதை தானும் உடன் வருவதாகப் புறப்படு கின்றாள். சீதை வனஞ் செல்லவேண்டிய கட்டாயம் அங்கு எழவில்லை. ஆயினும், வனத்திலே நாயகன் புல்லில் படுத்துறங்கும்போது, தான் பஞ்சணையில் படுத்து உறங்க விரும்பாமல், கணவன் பிரிவிலும் பார்க்க வனத்தின்

வெப்பம் சுடுமோ என்று வாதாடி கணவன் இருக்கும் இடந்தான் அயோத்தி என்று செல்கிறாள். சீதை, இதனாலே, இராமன்மேல், கொண்டிருந்த அன்பைக் காட்டுகிறாள் சீதை. கண்கண்ட கணவனைப் பிரியாமல் இருப்பதும், இல்லற தர்மங்களை இருவரும் இணைந்து செய்வதும், இராவணன் கவர்ந்து சென்றபோது, தனது கற்பு நிலையைக் காத்துச் சீதை வாழ்ந்ததும் அவர்களிடம் காணப்பெற்ற பண்பாடாகிறது; பயனாக இல்லற தர்மங்களும் நடைபெறுவதைப் பார்க்கிறோம்.

இதுபோல, அரிச்சந்திரன் வாய்மை காப்பதற்காக, விசுவாமித்திர முனிவரிடம் நாட்டைக் கையளித்துச் செல்லும் போது, மறுபேச்சின்றி மகனோடும் சென்று வேலைக்காரி யாகிறாள் சந்திரமதி, அரிச்சந்திரன் சுடலை காக்கின்ற போது, அவன் சத்தியத்தையும் காக்கவேண்டுமென்பதற்காகத் தன்னை வெட்டிக் கொல்லவும், தலையைக் கொடுக்கிறாள் சந்திரமதி. இவை எல்லாம் அவர்களிடம் ஊறிக்கிடந்த அன்பின் அறத்தின் வெளிப்பாட்டைக் காட்டுகின்றன அல்லவா.

ஆடல் மகள் மாதவி தொடர்பால் கைப்பொருள் இழந்தான் கோவலன். ஆயினும் தமக்குள் உள்ள அன்பின் தன்மை குன்றாமல் பண்புடன் அவனைப் பேணி நடப்பதே அறமென எண்ணி, அவனோடு சென்று கணவன் கள்வனல்லன் என வழக்குரைத்ததும் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வமானதும் கண்ணகி என்னும் கற்பரசி என்பதைச் சிலப்பதிகாரத்தில் பார்க்கிறோம்.

மாயச் சூதாடிப் பாண்டவர் தம்மைத் தாமே தோற்றுப் போய் நின்றபொழுது, தான் தோற்கப்படவில்லையென வாதாடி வென்று, வனவாசத்தில் அவர்களோடிணைந்து வாழ்ந்த பாஞ்சாலி கதையும் நாம் அறிந்ததே.

மேலும், அன்பும் அறனும் கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையுந் தெய்வங்களாக நமது மனக் கண்ணில் வாழும் மகாத்மா காந்தியையும் அன்னை கஸ்தூரிபாயையும் சிறந்த இல்லற மாந்தர்களாக இவ்வுலகம் கொண்டாடுவதை நாம் அறிவோம்.

ஆகவே, அன்பும் அறனும் உடையவர்களாக வாழ்வதே இல்லற தர்மத்தில் இணைந்த கணவனதும் மனையாளதும் பண்பும் பயனுமாக இருக்க வேண்டு மென்பது மேற்கூறிய இலக்கியமாந்தரின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாகிறது.

இவ்வாறு அறவழியில் அன்பின் பிணைப்பில் இல்வாழ்க்கை வாழ முடியும்போது, இல்லறம் அல்லாத துறவறத்தில் போய் என்ன சாதிக்க முடியும் என்றுங் கேட்கிறார் உலகப் பொதுமறை தந்த வள்ளுவர்.

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவது எவன்.** (குறள்)

நாம் பிறந்த பயன், கடவுளை வணங்கி அவனருள் பெற்றுப் பிறவாத பேரின்பம் பெறுவதே என்பதால், அப்பயனை இல்லற வாழ்வில் இருந்து மிகவும் எளிதான முறையில் அடையலாம் என்பது பெற்றாம். அப்போதுதான் உலக இயக்கத்துக்கு அவசியம் வேண்டப்பெறும் மக்கட் பேற்றையும் காணலாம் என்பதும் உணர்ந்து கொள்வோம்.

**மங்கல மென்ப மனைமாட்சி மற்று அதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு.** (குறள்)

# பிறப்பொடு தொடரும் கல்வி

**45. ஒருமைக்கண்தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

***பி***றவிகளுக்குள் மக்கட் பிறவி உயர்ந்தது. அதிலும் கல்விச் செல்வத்தைப் பெற்றவர்களாக இருத்தல் சிறந்தது என்பர்.

**அரிது அரிது மானிடர் ஆதல் அரிது அதனினும்**
**கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது.**
**பேடு நீங்கிப் பிறந்த காலையும்**
**ஞானமுங் கல்வியும் நயத்தல் அரிது.**
**ஞானமுங் கல்வியும் நயத்த காலையும்**
**தானமும் தவமும் தான் செய்தல் அரிது.**
**தானமும் தவமும் தான் செய்வராயின்**
**வானவர் நாடு வழி திறந்திடுமே.**

என ஒருவனுக்குக் கல்விச் செல்வம் இருக்கவேண்டும் என்பது வற்புறுத்திக் கூறப்பெற்றிருப்பது காணலாம். இந்த மனிதப் பிறவி கிடைத்திருப்பதை வாய்ப்பாகப் பயன்படுத்தி, இறைவன் அருள்பெற்று அவனை வணங்கி, இனிப் பிறவியில்லாத பேரின்ப வாழ்வு பெறவேண்டும் என ஆறுமுகநாவலர் போன்ற பெரியோர் கூறிச் சென்றனர்.

இதற்கு கல்வி அறிவு மிகவும் அவசியமாகிறது. பொருட் செல்வம் இருந்தாலும் வேறு பிறசெல்வங்கள் இருந்தாலும் அவை பல வேறு வழிகளில் இல்லாமற் போகலாம். ஆனால் நம் அறிவோடு கலந்த கல்வியை யாரும் அழித்துவிட இயலாது. இதனையே

**செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை.**

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை அன்றியும்,

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.**

என்பதும் அவர் பொய்யா மொழியே. முற்காலத்தில் ஒருவரிடத்தில் அல்லது ஒருதேசத்தில் உள்ள மாடுகளின் தொகையைக் கொண்டு அவனிடத்தில் அல்லது அத்தேசத்தின் செல்வம் நிச்சயிக்கப்படும் வழக்கம் இருந்தது. அதனால் மாடு என்ற சொல் செல்வம் என்ற பொருளையும் பெற்றது. பழைய கால அரசன் ஒருவன், பிறநாட்டு அரசன் ஒருவனோடு போர் மேற்கொண்டு செல்வதற்கு முன்னர், அந்நாட்டுப் பசுக் கூட்டங்களைக் கவர்ந்து செல்வான். அப்போது, தனது செல்வம் கவரப்பட்ட தென்று கோபங்கொண்டு அந்த அரசன் பதிலுக்குப் போர் செய்யச் செல்வான்.

இனி, கல்வி அறிவு பெற்றிராதவர்கள், தாம் தேடிய அல்லது முந்தியோர்கள் தேடி வைத்த செல்வத்தை, நல்ல வழியில் பயன்படுத்த முடியாதவர்களாகி அநியாய வழியில் செலவு செய்து அதனால் உண்டாகும் தீமையால் முழுச் செல்வத்தையும் இழந்து மீளா வறுமை பெற்று விடுவார்கள். அதனால் தெய்வப் புலவர் கூறுகின்றார்.

**நல்லார் கண்பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார் கண்பட்ட திரு.**

என்று அதாவது நல்லவர், கல்வி அறிவு உள்ளவர் வறுமையிலும் செம்மையாக வாழவே முயல்வார்கள்; அதனால் அவர் நல்ல செயலைச் செய்து சமூகத்தில் நன்கு வாழ்வார்கள். ஆனால், கல்லாதவர்கள் செல்வம் பெற்றிருந்தால் அவர்கள் மனம்போன போக்கில் செலவு செய்வார்கள். அதனால் யாருக்கும் நன்மை இருக்காது.

மேலும், மன்னனாக இருந்தால் அவனுக்கு அவன் ஊரிலே மதிப்பும் மரியாதையும் இருக்கும்; அடுத்த ஊரில்

அவனுக்கு எந்த வரவேற்பும் இருக்காது. ஆனால் கல்வி கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புத் தருவார்கள்.

செல்வம் நிலையில்லாத ஒன்று; அது நாம் இறக்கும் போது எம்மோடு வருவதும் இல்லை. ஆனால் கல்வியானது நமக்கு உண்டாகும் எல்லாப் பிறப்பிலும் தொடர்ந்து வரும் என்பது பொய்யா மொழியாகும்.

**ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து**

என்பது குறள் நெறியாகும்.

கல்வி அறிவில்லாத ஒருவன், சமூகத்தில் மனிதனாக மதிக்கப் பெறுவது இல்லை என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். கல்வி கற்பதற்கு இளமைக் காலம் சிறந்ததென்பர். அதனால் "இளமையிற் கல்" என்றும் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றும் பழமொழிகள் நம்மிடையே உண்டு. ஆயினும் கல்வி கற்பதற்கு வறுமை அதிலும் இளமையில் வறுமை தடையாக அமைந்து விடுவதுண்டு. அந்நிலை வந்தாலும் கற்றலை விட்டுவிடக் கூடாது; பிச்சை புகினும் கற்றல் நன்றே என்கின்றனர் பெரியோர்.

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
**கடையரே கல்லாத தவர்.** என்பார் திருவள்ளுவர்.

ஆகவே,

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

கல்வியை நாம் தெரிந்து கற்கவேண்டும். கற்றபடி ஒழுக வேண்டும். ஏனென்றால் கல்வி நமக்கு இரு கண்கள் போல உதவும்.

**கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லாதவர்.**

# கண்ணோட்டம் – I

**46. காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்**
**காணேன் தவறல் லவை. (குறள் 1286)**

ஒருவரிடம் காதல் கொண்ட பெண்மை உள்ளம், அக்காதலனை நேரில் சந்திக்கும் பொழுது, அவனிடமுள்ள தவறுகளைக் காணாள்; ஆனால் அவன் இல்லாதபோது அவனது நல்ல குணங்களைக் காணாள்; அவனுடைய தவறுகளை நினைத்துக் கொண்டிருப்பாள்.

கற்பனை உலகில் மிதந்து கொண்டிருக்கும் அவள், காதலனை நேரில் கண்டதும் நாணத்தினால், தான் பேச எண்ணியிருந்ததையே பேசாமல் மௌனமாகிறாள்!

இவ்வாறு மன்னனிடம் காதல் கொண்ட ஒரு மங்கை, அவன் இல்லாத வேளைகளில், அவர் வரட்டும் இப்படி இப்படியெல்லாம் கேட்பேன் என்று தனக்குள்ளும் தோழியர் களோடும் பேசிக் கொள்வாள். அவர் அணிந்திருக்கும் மலர்மாலையைத் தொட்டு இது உங்களுக்கு நன்றாயிருக்கிறது என்று சொல்லுவேன். அதை எனக்குத் தருவீர்களா என்று கேட்பேன் என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்தாள்.

ஆனால், ஒருநாள் அம்மன்னன் அங்கு வந்தான். இவளோ ஒன்றும் பேசாது மௌனமாகிவிட்டாள். அக் காதலனோ ஏதேதோவெல்லாம் பேசிவிட்டுப் பிரியாவிடை பெற்றுப் போனான்.

காதலன் போனதும் தோழி அவ்விடம் வந்தாள். என்ன எப்படி என்று பேச்சுக் கொடுத்தாள்.

"அடி தோழி, இந்த நாணம் என ஒன்று இருக்கிறதே. அது என் உள்ளத்துள்ளே நீங்கா நிழல்போல் இருக்கிறது

போலும்! காதலன் வந்ததும் அந்த நாணமும் வந்து விடுகிறது. நான் ஒன்றும் பேசமுடியவில்லை'' என்கிறாள்.

இதனை முத்தொள்ளாயிரம்,

**மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்**
**காணாக்கால் ஆயிரமும் சொல்லுவேன் - கண்டக்கால்**
**பூணாகந் தாஎன்று புல்லப் பெறுவேனோ**
**நாணோடு உடன்பிறந்த நான்.**

என்று கூறுகின்றது.

இந்த இலக்கியத்துக்குத் திருவள்ளுவர்,

**காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்**
**காணேன் தவறல் லவை.**

என இலக்கணம் வகுத்துள்ளமை படித்து இன்புறத்தக்கது. “காதலனைக் கண்டபொழுது நான் சொல்லவிருந்த தவறுகளை அவனிடம் காணவில்லை”. (நாணம் தடுத்து விட்டது) ஆனால் காதலனைக் காணாத பொழுது, அவனது நல்ல குணங்களை நினைக்கமாட்டாள், தவறுகளையே நினைத்துக் கொண்டிருப்பாள் என்பது குறள் தரும் பாடம்.

# கண்ணோட்டம் – II

**47. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோடு**
**இயைந்துகண் ணோடா தவர்.** **(குறள் 576)**

கண்ணோட்டத்திற்தான் இந்த உலகமே இயங்குகின்றது என்பது வள்ளுவர் தரும் அறிவுரையாகும்.

இதன்படி, தினமும் நாம் கண்டு பழகும் எல்லோருக்கும் உதவுகின்றவர்களாகவும், எல்லோருடைய உதவியைப் பெறுபவராகவும் இவ்வுலகில் வாழவேண்டும். அப்படியான கண்ணோட்டம் இல்லாமல் ஒதுங்கி வாழ்வது சாத்தியம் இல்லை.

இவ்வாறு கண்ணோட்டத்தை எதிர்பார்ப்பவர்கள் பல திறப்படுவர். இங்கே, காதல் வயப்பட்டவர்கள் இருவர், ஒருவருக்கொருவர் கண்ணோட்டத்தை எதிர்பார்க்கிறார்கள். அது அவர்களது இயல்புதானே! இதனை எப்படி என்று பார்ப்போம்.

மங்கை ஒருத்தி சோழ மன்னன்மீது காதல் கொள்ளுகிறாள்; அதனால் மனஉறுதியை இழந்து, உடல் மெலிந்து வாடுகிறாள்.

இதனை வெளியில் சொல்ல முடியாமல், தனது மனத்தையே தூதாக மன்னனிடம் அனுப்புகிறாள்.

வலிய நெஞ்சமே! "புலி உருவம் பொறிக்கப் பெற்ற வெற்றிக் கொடியை உடையவனும், நீர்வளம் மிக்க நாடனுமான சோழ மன்னனிடம் போவாய்! அவன் உன்னிடம் வந்து, என்ன அலுவல் என்று கேட்பான்; அப்பொழுது

நாணிக் கோணி நின்றுவிடாதே; அவனைத் தொழுவாய், பின் அவனிடம், ஐயா, எம் தலைவி உங்கள் மேற் கொண்ட காதலால் உடல் மெலிந்து வாட்டம் உற்றாள். நீரோ இம் மண்ணைக் காக்கும் மன்னன். அப்படி இருந்தும் உமது கண்ணோட்டம் அவள்பால் செல்லவில்லையே! உமது கண் என்ன மரக்கண்ணா? உணர்ச்சி உள்ள கண்தானே! கொஞ்சம் உமது கண்ணோட்டத்தை என் தலைவியிடம் செலுத்தலாமே. இரங்கும்! இரங்கி அருள்புரியும்" என்று மன்னனிடம் வேண்டிக் கொள்வாயாக என்கிறாள்.

**வரக்கண்டு நாணாதே வல்லையால் நெஞ்சே!**
**மரக்கண்ணோ மண்ஆள்வார் கண் என்று - இரக்கண்டாய்**
**வாள் உழுவை வெல்கொடியான் வண்புனல்நீர் நாடற்கு என்**
**தோள் அழுவம் தோன்றத் தொழுது.**

என்கிறது முத்தொள்ளாயிரம்.

(உழுவை = புலி, அழுவம் = மெலிவு, இரகண்டாய் = இரப்பாய்)

இந்த இலக்கியத்தை இலக்கணமாக்கி, கண்ணோட்டத் திற்கு உதாரணம் ஆக்கி,

**மண்ணோடு இயைந்த மரத்தனையர்; கண்ணோடு**
**இயைந்துகண் ணோடா தவர்** (குறள் 576)

எனக் குறள் தந்துள்ளார் தெய்வப்புலவர்!

கண்டு பழகிய ஒருவரைக் காண நேர்ந்தால் அவரோடு உரையாடி அவரது விருப்பு வெறுப்புகள் பற்றித் தெரிந்து நடப்பது கண்ணோட்டம் என்பது. அப்படிக் கண்ணோட்டம் இல்லாது தம்பாட்டில் நடப்பவர் மண்ணில் வளர்ந்து நிற்கும் ஒரு மரத்தை ஒப்பர் என்பது இதன் பொருள்.

# பிரிவுத் துன்பம் – I

**48. கொடியார் கொடுமையின் தாம் கொடிய இந்நாள்**
**நெடிய கழியும் இரா! (குறள் 1169)**

***பி***ரிவாற்றாமை என்பது காதலர்களுக்கு மிகவுந் துன்பந்தரும் ஒன்று ஆகும். தன் காதலனோடு அன்புற்று பல நாட்கள். ஆயினும் ஒரு சில நாட்கள் அவன் பிரிந்து சென்ற பொழுது, குறுகியதான இந்த இரவுப் பொழுது, அவர் பிரிந்து சென்றதனால் செய்த கொடுமையிலும் பார்க்க மிகுந்த கொடுமை செய்து நிற்கின்றது! என்கிறாள் ஒரு பெண்!

காதலன் பிரிந்து சென்றது ஆற்ற முடியாதபோது, காதலனைக் கொடியார் என்றே குறிப்பிடுகின்றமை காணலாம்.

ஒரு பெண், பாண்டிய மன்னன் ஒருவனிடத்தில் காதல் கொண்டாள். காதலன் இப்பொழுது பிரிந்து போய்விட்டான்! காதல் முற்றிய வகையில் அவனது குறுகிய பிரிவும் அவளுக்குத் துன்பந் தந்தது! உணவு செல்லவில்லை, உறக்கம் கொள்ளவில்லை. இரவு நேரம் வந்து அவளைக் கொடுமைப்படுத்துகின்றது. அவள் சிந்திக்கிறாள். "இந்த மன்னனை இன்னும் பலர் காதலிக்கலாம். நான் மட்டுமா காதலிக்கிறேன்? என்னை வாட்டுகின்ற இந்த இரவில், அவனை அடைந்து மகிழ்பவரும் உண்டுதானே. என்னைப் போல் மகிழாதவரும் உண்டு, நல்ல இரவு இது. காதலனைக் கூடி இன்பம் பெறுபவர்கள் இந்த இரவை விரும்பி அன்பு கொள்வர். இரவில் காதலனை அடையப் பெறாதவர் இந்த இரவினைப் போ போ என்று விரட்டுவர்! பார்க்கப் போனால் இந்த இரவுப் பொழுதுபற்றி இரு பகுதியாரும் சிந்திக் கிறார்கள் என்பது தெரிந்து கொள்ளலாம். நன்றாயிருக்கிறது இந்த இரவின்பால் இருபாலாரும் கொண்ட அன்பு" என்று தனக்குள் சொல்லிக் கொள்கிறாள்.

இதனையே திருவள்ளுவர்,

**கொடியார் கொடுமையின் தாம் கொடிய இந்நாள்**

**நெடிய கழியும் இரா.**

என இலக்கணப்படுத்தியுள்ளமை நயத்தற்குரியது.

## பிரிவுத் துன்பம் – II

**49. அழல் போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்**
**குழல் போலும் கொல்லும் படை. (குறள் 1228)**

மன்னன் குடிமக்களைக் காப்பது கடமையாகக் கொண்டவன். அவதார புருஷனாக நாம் கொள்ளும் இராமன், விசுவாமித்திரருடன் சென்று வேள்வி காத்தது தொடங்கி, இராவணனை அழித்துத் தேவரைக் காப்பது வரை, ஒரு சத்திரியனுக்குரிய கடமையைத்தான் செய்தேன் என்கிறான்.

இங்கே, மக்களைக் காக்கும் ஒரு மன்னன் மீது காதல் கொண்ட ஒரு மங்கை, அவன் தன்னைக் காக்க வில்லை என்கிறாள்! அது எப்படி என்று பார்ப்போம்.

"தெளிந்த நீர் நிலையில் மலர்ந்த நறுமலர்களைக் கொண்ட மாலையை அணிந்த அம்மன்னன், இவ்வுலகத்தை மிகத் திறமையாகப் பாதுகாக்கிறான் என்று சொல்லு கிறார்கள். உண்மையில் அவன் இந்த மண்ணுலகைப் பாதுகாப்பவனாக இருந்தால், மாலையில் இந்த வழியாலே கால்நடைகளைக் கொண்டு போகும் ஆயர்கள் ஊதுகின்ற குழல் ஓசையினால் வருந்துகின்ற என்னை வந்தடைந்து காப்பாற்றவில்லையே!" என்று ஒரு தலைவி வருத்தப்பட்டு மன்னன்மீது குற்றஞ் சுமத்துகிறாள் என்கிறது முத்தொள்ளாயிரம்.

மாலையில், தலைவன் அருகிலிருந்தால் இன்பம் பயக்கும் குழல் ஓசை, தலைவன் இல்லாதபோது தன்னை வருத்துவதாகக் காதலி குறைப்பட்டுக் கொள்ளுகிறாள்.

**தெண்ணீர் நறுமலர்த்தார்ச் சென்னி இள வளவன்**

**மண்ணகங் காவலனே என்பரால் - மண்ணகம்**

**காவலனே யானக்கால் காவானோ! மாலைவாய்க்**

**கோவலர்வாய் வைத்த குழல்.**

என முத்தொள்ளாயிரம் இதனைக் குறிப்பிடுகிறது. இந்த இலக்கியத்தை கருத்திற் கொண்டு திருவள்ளுவர்,

**அழல் போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்**

**குழல் போலும் கொல்லும் படை.**

என இலக்கணம் அமைத்துள்ளமை கற்றறிந்து இன்புறத் தக்கது. "காதலன் அருகில் இல்லாதபோது இயல்பாகவே துன்பங் கொடுக்கும் மாலை நேரத்துக்கு மேலும் ஒத்தாசை புரிவது போலச் சூடான பொருளாக ஆயர் குழல் ஓசையும் சேர்ந்து விடுகிறது. இதனால் எனது துன்பத்தை நீக்கி என்னைப் பாதுகாக்கவில்லையே இந்த மன்னன்" என்பது இக்குறள் தரும் பாடம் ஆகும்.

## காதலும் கண்ணும்

**50. கண்ணொடு கண்ணினை நோக்கு ஒக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல. (குறள் 1100)**

***வி***சுவாமித்திரருடைய வேள்விக்கு இடையூறு செய்த அரக்கர்களை அழித்தபின், இராமனுக்கு நடக்கவிருந்த சீதா கல்யாணத்தை உணர்ந்த முனிவர், இராமனுக்கு நன்றிக்கடன் செய்து அவனை மகிழ்விக்க வாய்ப்பாக, இராமலக்குமணர்களை மிதிலைக்குக் கூட்டிச் செல்கிறார்.

வழியிலே, கௌதம முனிவரின் சாபத்தினால் கல்லாகிக் கிடந்த அகலிகை, இராமனது கால் பட்டுச் சாபம் நீங்கப் பெற்று எழுகின்றார்.

"இராமா! அரக்கியோடு போர் செய்தபோது உன் கை வண்ணத்தைக் கண்டேன்; இங்கே உன் கால் வண்ணங் கண்டேன்" என்று பாராட்டிய முனிவர், அகலிகையை கௌதமரோடு சேர்த்துவிட்டு அப்பால் சென்று மிதிலை நகரை அண்மிக்கின்றனர்.

மிதிலை நகர மேல் மாடங்களின் சாளரங்கள் வழியாக சீதை உட்படப் பெண்கள் பலரும் முனிவருக்குப் பின்னால் செல்லுகின்ற இராமனையும் இலக்குமணனையும் பார்த்துப் பரவசப்பட்டு நிற்கின்றனர். தடாகந்தோறும் தாமரை பூத்ததுபோல, சாளரந் தோறும் சந்திர உதயங் கண்டார் என்பர் கம்பர்.

இவ்வாறு மகளிர் கூட்டத்திலே நின்ற சீதை, இராமனைக் காண்கிறாள். விசுவாமித்திரரை அடுத்து

சென்றவன் இராமன் என்பதால் சீதையின் கண்கள் இராமனையே முதலில் சந்தித்திருக்கும்!

**எண்ணரும் நலத்தினாள் இனையன் நின்றுழி**
**கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றை ஒன்று**
**உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்**

என்பது கம்பரின் வர்ணனை!

முன்பின் தெரியா இவர்கள் (மையறு மலரின் நீங்கி வந்த செய்யவளும், பாற்கடலிற் பள்ளி கொண்ட பரந்தாமனும்) அவதார புருஷராகச் சந்தித்தனர். ஆயினும் சாதாரண மானிடர்போல உணர்வு ஒன்றாகிவிட்டனர்; வாய்ப்பேச்சு அங்கு நிகழவில்லை என்பதனைக் கண்ட திருவள்ளுவர்.

**கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள்**
**என்ன பயனும் இல.**

என்று இலக்கணம் செய்து நயப்புரை வழங்கியிருப்பது நமது சிந்தனைக்குரியது.

மேலும், முன்பு பாற்கடலிலிருந்து பிரிந்தவர்கள் இன்று இவ்வாறு கூடியிருப்பதனால் வருகின்ற இன்பத்தைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ? என்று கம்பர் கூறுவதனால், வாய்ச்சொற்களால் எந்தப் பயனும் ஏற்படாது என்பது வலியுறுத்தப்படுகிறது!

முனிவருக்குப் பின்னால், இலக்குமணனுக்கு முன்னால் சென்று கொண்டிருக்கும் இராமனுக்கு, நின்று பேசிக்கொள்ள முடியாதாகையால் பேச வேண்டிய தேவை ஏற்படாமலே

செயல் (அடைவு) இராமனுக்கு அனுகூலமாக முடிந் திருக்கிறது காணலாம்.

ஆயினும், 'மனம்' என்னவோ நின்று பேசலாம் என்று பின்நோக்கி இழுப்பதாகவும், கண் இமைமூடாமல் பார்த்தபடி முனிவர் பின் இராமன் போகிறான் என்பதைக் காட்ட சீதையை ஓவியப் பாவை ஆக்கிய கம்பரின் கவித்துவத்துக்கு ஈடு கம்பரே!

ஓவியப் பாவையைக் கண்ட பிள்ளை, அதை வாங்கித் தரும்படி தாயின் தாவணியை இழுத்தபடி, பாவையில் மனம் வைத்தபடி தாயின் பின்னால் அழுது கொண்டு போகும். ஆனால் அடக்க ஒழுக்கமாக முனிவருக்குப் பின்னால் தம்பிக்கு முன்னால் செல்லும் இந்தப் பிள்ளை - இராமனுக்கு வாய்ச் சொற்களுக்கான சந்தர்ப்பமும் இல்லையே!



## நூலாசிரியர் பற்றி...

எமது நாட்டிலே தமிழ் மூதறிஞராக விளங்கிய மட்டுவில் தந்த பண்டிதமணி அவர்கள் "இலக்கிய வழி" என்னும் அருமையான நூலைத் தந்தார். இந்நூல் இலங்கை கல்வி அமைச்சினால் பாட புத்தகமாக வெளிவந்தது. பண்டிதமணி அவர்களுக்கும் இலங்கைப் பல்கலைக்கழகம் "இலக்கிய கலாநிதி" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

இதன்பின் இருந்த இடைவெளியை நிரப்ப மட்டுவில் நா. நல்லதம்பி அதிபர் அவர்கள் "இலக்கிய அமுதம்" என்ற நூலைத் தந்தார். இலக்கிய உலகில் வாழும் 1928ம் ஆண்டில் பிறந்த நா. நல்லதம்பி ஆசிரியரும் அவர்தம் பாரியார் திருமதி ந. இரத்தினபூரணம் அம்மையாரும் தங்கள் பவள விழாவைக் கொண்டாடும் முகமாக இந்நூலை வெளியிடு கின்றார்கள். இவர்கள் இருவரும் தங்கள் ஆசிரியப் பணிகளில் நிறைவு கண்டவர்கள்.

பண்டிதமணி அவர்களிடம் திருநெல்வேலியில் ஒரு மாதம் ஆசிரிய பயிற்சி பெற்றவர். நல்லதம்பி ஆசிரியர் எல்லோருக்கும் நல்லவராக விளங்கும் இவரிடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தமிழ்ப் பாடத்தைக் கல்வி கற்கும் பேறுபெற்றேன். மேலும் இவர் என் தந்தையாரின் முதல் மாணவர். ஆசிரிய உலகில் ஆசிரிய தீபமாக விளங்கும் திரு. நா. நல்லதம்பி ஐயா அவர்களின் "திருக்குறள் நெறியில் இலக்கிய சிந்தனைகள்" என்னும் ஒப்பற்ற நூல் அன்பர்கள் அனைவருக்கும் பெருவிருந்தாக அமையும். இவரின் தந்தையார் திரு. வ. நாகமுத்து அவர்கள் ஒரு பெரும் சமூகத் தொண்டன் இவரது குடும்பம், சகோதரர்கள், கல்விப் பாரம்பரியத்தின் பெரும் வேர்கள் என்பதில் பெருமை உண்டு.

**கா. சிவபாலன்**

Printed By: Anush Printers, Col-11. Tel: 0777-244893